# நற்றிணை நாடகங்கள்

தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்

பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம் & சேப்பாக்கம்
திருச்சிராப்பள்ளி & சென்னை-5

முதற் பதிப்பு:
டிசம்பர் - 1954.

விலை ரூ. 2-4-0

அச்சிட்டோர்:
ஏஷியன் பிரிண்டர்ஸ்
சென்னை-5.

## ஆசிரியர்

# முன்னுரை

எனக்குப் பிறந்த முதல் குழந்தை ஈராண்டுக்குள் இறந்தது. வருத்தத்தில் மூழ்கிய எனக்கு அந்த வருத்தத்தினை மறக்கச் சிந்தா-திரிப் பேட்டை உயர்நிலைப் பள்ளித் தொண்டு கிடைத்தது; அதன் செயலாளன் ஆனேன். ஆதலின், அதனை, மகவெனவே கொண்டு வாழலாயினேன். சிந்தாதிரிப்பேட்டைத் தொடக்க நிலைப் பள்ளி, இராவ் பகதூர் கலவலகண்ணன் செட்டியார் பெண்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை மாண்டிசோரிப்பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை ஆரம்பப் பள்ளி, சிந்தாதிரிப்பேட்டைக் கலியாணம் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, சிந்தாதிரிப்பேட்டை உயர்நிலைப்பள்ளி எனப் பள்ளிகள் இன்று வளர்ந்தோங்கி உள்ளன. சென்னை மாநிலக் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைமைப் பேராசிரியனாகத் தொண்டாற்றவந்ததும் பள்ளிகளின் செயலாளன் எனத் தொடர்ந்திருப்பது இயலாததாயிற்று. திரு. துரை வேலனார் அன்புடன் முன்போந்து செயலாளராகத் தொண்-டாற்றிவருகிறார். ஆதலின், வருத்தம் ஒருவாறு எனக்கு மகிழ்ச்சியாக மாறியது.

பள்ளியோடு கால் நூற்றாண்டு தொடர்ந்திருந்த என் நினைவைப் பாராட்டவேண்டும் என்று நண்பர்கள் விரும்பினார்கள். தொண்டினைச் செய்தோம் என்ற நிறைவுள்ளமே பெரிய பாராட்டு. அதற்கு மேலும் பாராட்டு ஏன்? ஆனால் இளைய நண்பர்கள் ஒரு சூழ்ச்சி செய்தனர். யான் எழுதிய கட்டுரைகள் இதுவரை நூல்வடிவில் வெளிவராதவற்றைத் திரட்டி நினைவுப்-பதிப்பாக வெளியிடுவதே இந்தப் பாராட்டு என்றபோது எவ்-வாறு நான் மறுக்கத்தகும்?

இந்தச் சூழ்ச்சியைச் செய்த திரு. துரைவேலனார், திரு. பிநாகபாணியார், திரு. சண்முகசுந்தரனார், திரு. இராசேசுவரி

அம்மையார், திரு. துரைக்கண்ணனார். திரு, துரை அரங்கனார் முதலியோருக்கும் இதனைத் தம் பதிப்பாக அச்சிட முன்வந்த திரு. பழனியப்பா அவர்களுக்கும் நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?

இப்போது, நற்றிணைப் பாடல்களுள் ஒன்பது பாடல்கள் கொண்டு நான் எழுதிய சிறு நாடகங்கள் வெளிவருகின்றன. இவற்றுள் சில, பத்திரிகைகளிலும், வானொலியிலும் வெளி யானவை.

இவற்றைத் தமிழ்மக்களுக்கு என்றே எழுதினேன். அவர்கள் என்ன நினைக்கின்றார்களோ? என் கருத்துக்கள் என் கருத்துக்களே! என் முகம்போல மற்றொரு முகம் இராது. ஆதலின், என் கருத்துக்கள் எல்லோர் கருத்துமாக முடிவது அருமை. என்றாலும், அன்பினால் குற்றத்தினைப் பொறுத்து வாழ்த்துவது அன்றோ தமிழ் மரபு? அதனையே நம்பி வாழ்கிறேன்.

சென்னை,
4-12-1954.

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

## தெ. பொ. மீ.

*வெள்ளிவிழாக் குழுவினர்*

# அணிந்துரை

ஆறு கிளைகளாகப் படர்ந்து, மூவாயிரம் மாணவர்களுக்குக் கல்விப்பயிற்சியாம் தண்ணிழல்தரும் கற்பகத் தருவான சென்னைச் சிந்தாதிரிப்பேட்டைக் கல்விநிலையக்குழுவின் செயலாளராகச் சென்ற இருபத்தைந்தாண்டுகள் தந்நலம் சிறிதும் கருதாது அதனைத் தழைத்து வளரச்செய்துவந்த பேராசிரியர், பல்கலைச் செல்வர், பன் மொழிப்புலவர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுருடைய வெள்ளிவிழா இரண்டாம் மலராக "நற்றிணை நாடகங்கள்" என்ற இந்நூல் தமிழுலகை அணிசெய்ய வெளிவருகிறது. இமயம் முதல் குமரிவரையில் இப்பேராசிரியர் ஆற்றிய சொற்பொழிவுகள் கணக்கிலடங்கா. ஆனல், அவையெல்லாம் காற்றில் கலந்து வானில் ஒன்ருயின. அவ்வப்போது இவர் தமிழ் வெளியீடுகளிலும், ஆங்கில வெளியீடுகளிலும் எழுதிவந்த கட்டுரைகளும் எண்ணிலடங்கா. ஆனல், அவை யெல்லாம் தொகுக்கப்பெருமல் சிதறுண்டுள்ளன. அவற்றையெல்லாம் தொகுத்துப் பல வெளியீடுகளாகத் தமிழுலகிற்கு வழங்கவேண்டும் என்பது எங்கள் பேரவா. இவ்வவாவினை நிறைவேற்றுவதற்குப் பொருள் மிகுதியும் தேவை என்பது சொல்லத் தேவையில்லை. எனினும், எவ்வாறேனும் எங்கள் விருப்பத்தை இவ் வெள்ளிவிழாவில் நிறைவேற்றவேண்டும் என்ற துணிவு கொண்டு, பேராசிரியர் எழுதிய கட்டுரைகளில் பலவற்றைத் திரட்டிப் பத்து வெளியீடுகள் வரையில் தொகுத்துள்ளோம். ஆனல், பொருள் முட்டுப்பாடு எங்களைத் திகைக்கவே செய்தது. அப் போது சமய சஞ்சீவியாய்த் தமிழ்வள்ளல், சைவசமயப் புரவலர், உயர்திருவாளர் உ. ராம. மெ. சுப. சேவு. மெ. மெய்யப்பச் செட்டியாரவர்கள், எங்களுக்கு ஊக்கம் அளித்துத் தமிழ் நூல்களை அழகாக அச்சிட்டு வெளியிடுவதையே தமிழன்னையின் வழிபாடாகக் கொண்

டிலகும் உயர்திருவாளர் பழனியப்பச் செட்டியாரவர்களிடம் அறிமுகப்படுத்திவைத்தார்கள். தம்முடைய இயல்பான இனிமைப் பண்பில் உயர் திருவாளர் பழனியப்பச் செட்டியாரவர்கள் எங்கள் செயலைப் பாராட்டிப் பேராசியர் எழுத்துக்கள் அனைத்தையும் வெளியிட இசைந்து, முதலில் வள்ளுவர் கண்ட நாடும் காமமும் என்ற நூலை அச்சிட்டு, அடுத்து இரண்டாவதாக இந் நூலை விரைவில் அழகாக அச்சிட்டுத்தந்தார்கள். இவ்விரு பெருஞ்செல்வர்களுக்கும் நாங்கள் ஆற்றும் கைம்மாறு ஏதும் அறியோம். எல்லாம் வல்ல ஆண்டவன் அவர்கட்கு எல்லா நலங்களும் அளித்தல் வேண்டுமென அவ் வாண்டவனை வேண்டி அமைகின்றோம்.

இந்நூலின் சிறப்பினை வரையறை செய்து கூறுவது எம் மனோர்க்கு இயலாத தொன்று, ஒப்புயர்வற்ற நூல் இஃதாகும் என்று கூறி அமைகிறோம்.

சங்க நூல்கள், பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் எனப் பகுக்கப்பட்டிருப்பதைத் தமிழர் அனைவரும் அறிவர். எட்டுத் தொகை எனப்படும் நூல்களுள் நற்றிணையே தலைசிறந்தது. எட்டுத் தொகை நூல்கள் இவை என்பதை ஒரு பழம் பாடல்,

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியே அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை

என்று இயம்புகிறது. இப் பாடலில் முதற்கண் வைத்து எண்ணப்பெறும் பெருமை நற்றிணைக்கே அமைந்துள்ளது. மேலும் குறுந்தொகை என்பதும் "நல்ல குறுந்தொகை" என்று சிறப்பிக்கப் பெற்றிருந்தாலும், 'நல்' என்ற அடைமொழி,பிரிக்க முடியாத படி நற்றிணைக்கே பொருந்தியுள்ளது. இவ்விரண்டே சாலும் நற்றிணை எட்டுத் தொகையுள் தலைசிறந்தது என்பதற்கு. இந் நூலுள் நானூறு பாடல்கள் நன்மணிகளெனத் திகழ்கின்றன. ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சிறு நாடகமாக விரிக்கலாம். இம் முறையில் ஒன்பது பாடல்களைச் சிறு நாடகங்களாக

அமைத்து அப் பாடல்களை நன்கு விளங்கிக்கொள்ளும் வகையில் உயர் திரு. தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் சிறந்ததொரு தமிழ்த் தொண்டு ஆற்றி யிருக்கின்றார். இந் நவமணியுள் ஒவ்வொன்றன் சிறப்பையும் தனித் தனி எழுதிக்காட்டுதல் வேண்டா. ஒளியும் சுவைமிகுதியும் ஒவ்வொன்றிலும் உண்டு. படித்துச் சுவைக்கமுற்பட்டுவிட்டால் தங்கு .தடையின்றி முழுதும் சுவைத்து விட்டே நூலைக் கீழே வைக்கத்தோன்றும் என்ற அளவு நூலின் சிறப்பைப்பற்றிக் கூறினால் போதும் என்று கருதுகிறோம்.

இந்நூலைத் தமிழ்மக்கள் அனைவரும் விரும்பி ஏற்பார்கள் என்பது திண்ணம்; ஏற்பின், இதனால் பெரும் பயன் அடைவர் என்பதும் திண்ணம்.

தொடுமிடந்தொறும் சுவைநயம் தோன்ற ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு சிறு நாடகமாக அமைத்துத் தந்த திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் நீடு வாழ்க! இவற்றோடு நின்றுவிடாது, நற்றிணையில் உள்ள எல்லாப் பாடல்களுக்கும் இங்ஙனமே திரு. தெ. பொ. மீ. அவர்கள் சிறு நாடகங்கள் எழுதித் தமிழ்மக்கள் அனைவரையும் நூலில் திளைக்கும்படி செய்வார்களாக! வாழ்க நற்றிணை! வாழ்க தமிழ்மொழி!

இங்ஙனம்,

தெ. பொ, மீ.

வெள்ளிவிழாக் குழுவினர்.

சென்னை,
4-12-1945.

# உள்ளுறை


1. நீயோ அறிவாய்! ... 1
2. நப்புன்னை ... 14
3. எல்லாம் அவளுக்கே ... 31
4. புதுமணப் பெண் ... 47
5. தினசரியா பாட்டு? ... 66
6. பாவத்தைக் கட்டிக்கொள்கிறாள்! 83
7. அவளே மருந்து ... 97
8. விசுவரூப நாடகம் ... 107
9. நான் பேசிய நாடகம் ... 123

# 1. நீயோ அறிவாய்!

1

அவன் வருகிறான். "அவளைக் காண்பதும் இன்பம்; அவள் சொல் கேட்பதும் இன்பம்; அவளோடு பேசுவதும் இன்பம்; அளவளாவுவதும் இன்பம்; அணைப்பதோ பேரின்பம்"—இவ்வாறு இன்புறத் துடிதுடிக்கிறது அவன் உள்ளம்; ஆனால், ஏமாற்றமே அடைகிறது. அவளைக் காணோம். அவளோடு விளையாடிவரும் தோழிமாரையும் காணோம். தானும் அவளும் தனித்துக் களித்த இடம் எல்லாம் அவன் சென்று பார்க்கின்றான். தினைப்புனம் வறிதே கிடக்கின்றது. அருவியோ தனித்துப் புலம்புகிறது. அந்த இடங்கள் எல்லாம் உயிரற்ற உடல்போலத் தோன்றுகின்றன. "என்ன ஆயினள்! எங்குப் போயினள்! என் உயிரே! எவ்வாறு வாழ்வேன் இனி!" என்று அவன் புலம்புகின்றான்; கலங்கு-

கின்றான்; செய்வதறியாது பெருமூச்சு விடுகின்றான்; வெறி கொண்டவன்போலத் திகைத்து நிற்கின்றான்.

## 2

மலைமேல் அழகிய இடம் அஃது. எதிரில் அருவி உயர்ந்தே தோன்றுகிறது. அங்கு அருவியில் ஆடுவோர் ஒருவரும் காணோம். அஃது ஒரு மறைவான சூழல்; பெண்களே தனித்துக் குளிக்கும் இடம். முன்னாள் போலவே ஆடிப்பாடி நகை முகம காட்டிப்போக அவள் அங்கே தோன்றவில்லை. சுற்றிலும் பழமும் பூவும் பொலியும் மரங்கள் அடர்ந்துள்ளன. அப்பாலே தினைப்-புனம் செழித்து வளர்ந்துகிடக்கின்றது.

கீழே பார்க்கிறான் அவன். குறவர் குடியிருப்பே தோன்றுகிறது. அதில், நடுவே ஒரு வீடு திறந்துவிளங்கு-கிறது. ஆம்; அதுதான் அவள் வீடு. முற்றத்தில் இத்தனை நாள் ஆடுகிற பெண்கள், இன்று வீட்டின் புறக்-கடையில், பெண்களே புழங்கும் உள்வெளியில் ஆடுகின்-றார்கள். ஆம்; அவளுடைய தோழிமார் கூட்டமே அஃது. இதோ அவளும் நிற்கிறாள்; முற்றத்தைப் பார்க்கிறாள்; மேல் நோக்கிப் பார்க்கிறாள். அவள் வெளியில் போக-லாகாது எனத் தடை ஒன்று உண்டு என்பது தெளிவா-கிறது.

“இனி எவ்வாறு சென்றடைவேன்?” என்று அவன் உள்ளம் வெடித்து ஒலிக்கிறது. அவனுக்கு முன்னாள் நினைவு வருகிறது. முன்னாள் பார்த்தது பார்த்தபடியே, அவன் கண்ணை விட்டகலாமல் காட்சி அளிக்கிறது. அவன் கருத்தாழத்தில் முறுகி எழுந்த காட்சி அது.

## 3

நீலப்பட்டு உடுத்தது போன்ற நெடுங்குன்றம்—அது நிறைய அடர்ந்துள்ள பச்சைப் பசுங்காடு—அந்தப் பச்சிருளைப் பிளந்துகொண்டு வெள்ளிப் பாற்கடலே வெளிப்படச் சிற்றிடம் பெற்று வளைந்து திரும்பிப் பின் நேரே உயரத்தில் இருந்து கீழே துள்ளி விழுவது போன்ற அருவி—அதுவோ பாறைமீது விழுந்து பல பல அருவிகளாய்ச் சிதறுகின்றது. சிதறுண்ட அவை பாடிக்கொண்டே கை கோத்துக் கூத்தாடிப் படிப்படியாய்க் கீழ் இறங்கிவந்து பாய்கின்றன. இவ்வாறு ஓர் அழகிய இயற்கைக் காட்சி இயைந்துநிற்கிறது.

குயிலோடு மாறு கூவியும், மயிலோடு மாறு ஆடியும் மரங்களைச் சுற்றிக்கொள்ளும் கொடிகள்போல வளைந்து வளைந்து மலர் பறித்தும் உயிர் ஒளி வீசுகின்றார்கள் சில பெண்கள். அவர்கள் அனைவரும் ஓர் உயிர்போல் இயங்குகின்றனர். அவர்களது உயிராக ஒருத்தி விளங்குகிறாள்; அவளே அவனது உயிராகவும் இயங்குகிறாள், அவனுடைய கண்ணிலும் கருத்திலும்.

அந்தத் தோழிமார் கூட்டத்தில் அவள் ஒருங்கு இயைந்துவிடுகிறாள். ஒரே குரல்! ஒரே பாட்டு! ஒரே ஆடல்! ஒரே பேச்சு! ஒரே உயிர்! இயற்கையோடு இயைந்து இயற்கையே உடலாய், இயற்கையே உயிராய், இயற்கையே அணிகலனாய், இயற்கை வாழ—இயற்கையே உலகமாய் ஓங்க—இன்பமாய்ச் சிறக்க—இயங்கி வருகிறது இந்தக் கூட்டம், இந்த ஆயம். அன்பின் பேரொளி விளக்கே இந்த ஆயம்; இதன் உயிர்ச் சுடர் அவள்.

"என்னிடமும் அன்பில் குழைந்து உருகினுள்; தனக்கு என ஒரு தனி நிலை இல்லாதபடி என்னேடு ஒன்-ருயினுள். என் கல்மனம் இதனுயர்வை அறியாது போயிற்றே! அறியாது போயிற்றே! அந்தோ அறியாது போயிற்றே!" என்று துடிதுடித்துப் புலம்புகின்ருன் அவன்.

நீராடப் புகுகின்றனர் இப் பெண்கள். தோழியரே முன் செல்கின்றனர். நீரோட்டத்தோடு செல்லும் புல்-போல அவர்களோடு அவளும் போகின்ருள். அவள் அவனேடு கூடியதும் அப்படித்தானே!

அவள் எண்ணம் எல்லாம் அவனே. அவள் உயிர் எல்லாம் அவனிடமே ஓடி வந்து புகுந்துகொண்டது. வெற்றுடலாக அசைகிருள் அவள்; அவர்கள் இயக்க இயங்குகிருள். அவர்களது அன்பின் ஆற்றல் அவளை நகையாடச் செய்கிறது; அருவியாடச் செய்கிறது. உயிர் கொடுக்கும் ஒப்பற்ற சமுதாயம் அன்ருே, அந்த ஆயம்! அவளுடைய மனமோ வேருேர் இடத்தில்—அவன் உள்ளத்தில்—சிறையுண்டுகிடக்கின்றது. "அவள் அருவி யாடுவதிலும் அந்த உண்மை இப்போது நன்ருக விளங்குகிறது; நேற்று விளங்கவில்லையே!" என்று நைகிருன் அவன்.

இந்தப் பெண்களோ அருவிகளையும் தோழிமாராகக் கொண்டு எதிரே துள்ளிக் குதித்து விளையாடுகிருர்கள்; நீர்வீழ்ச்சியை அணைத்துக்கொள்கின்றனர்; தெறிக்-கின்றனர்; தலைமேல் தாளம் கொட்டச் செய்கின்றனர்; உடல் எல்லாம் வீழ நிற்கின்றனர்; நீர் அரமகளிராய் நிலவு-கின்றனர்; நீரை வாரி ஒருவர்மேல் ஒருவர் வீசுகின்றனர்;

தம் கண்மேல் நீர்வீழ்ச்சியைக் கண் மூடித் தாங்குகின்றனர்; அதனைக் கையால் திருப்பித் தோழிமார் கண்ணில் தாக்கவிடுகின்றனர்; கண் சிவந்து களித்துச் செருக்கி ஆரவாரிக்கின்றனர். களித்து நிற்கின்றாள்—கண் சிவந்து நிற்கின்றாள் தலைவி. அமலங்களாய் விழிக்கும் அகன்ற கண்கள்—ஒன்றோடொன்று அன்புப் போட்டி இட்டு அகல விழித்து அழகு பெறும் கண்கள்—ஈர அன்புடைய மழைக்கண்கள்—எவர் கருத்தையும் கொள்ளை கொள்ளும் கடவுட் கண்கள்—அணங்கின் கண்கள்—இவற்றைக் காண்கிறான். (அவன் இது முன்னாள் கண்ட காட்சிதான். ஆனால், அன்றைய காட்சியின் பொருள் ஆழம் இன்று தோன்றுகிறது. கருத்தழிகிறான் அவன்). முன்னாள் காட்சி தொடர்கிறது உள்ளதே.

அவனையே நோக்கித் தோழிமாரோடு நடந்து செல்கிறாள் அவள். எங்கே? ஏன்? அவனை நோக்குகின்ற கண்களில் ஏதேனும் தோன்றுகிறதா? பேசாத பெரு மௌனம்—அதனை அறிவார் யார்? அவனைக் கண்ட மகிழ்ச்சி கண்களில் ஈர அன்பாய் மலர்கின்றது; முகமெல்லாம் மலர்கின்றது; புன்னகையாகப் பொலிகின்றது. தனித்துநின்றதுன்பமெலாம் மறைகின்றது. அவனைக் கண்டதும் மகிழ்கிறாள்; களிக்கிறாள்; இயங்குகிறாள்; நடக்கிறாள்; தோழிமாரோடும் மறைகிறாள். எங்கே? ஏன்?

## 4

இன்று அந்தக் காட்சியின் பொருள் விளங்குகின்றது. அவளது அருள், தன்னையே மாறிக் கொடுத்துதவித் தான் கெட்டு நிற்கும் பேரருள் இவ்வாறு

தோன்றுகிறது. பார்வையும் முறுவலும் அவளது தலையன்பின் மலர்ச்சி; அவள் தந்த பரிசில். மறக்க-முடியுமா அவன்? தான் அற்ற நிலையில் அவனைக் கண்டதும் தன் தனிநிலை எல்லாம் மறந்து நிற்கிருள் அவள். அவனையே நம்புகிருள். இவ்வளவும் அவனுக்கு இன்று தெளிவாகிறது.

"ஐயோ, அறியாமற் போனேனே! இந்தச் சீரணங்கு—பேரருளின் திருவருளால் வீட்டிலாடி வந்தவள்—எனக்காக வீட்டை விட்டுப் புறம் புறம் திரிந்தாள்—தோட்டத்தில் ஆடினுள்—தினைப்புனம் காத்தாள்; கிளி-யோடும் குருவியோடும் பேசினுள்; அருவியோடு ஒன்ருய் ஆடினுள்; இவ்வாறு தன் அன்பைச் சுற்றும் முற்றும் அகல அகலப் பரப்பிவிட்டு அலர்கிருள். என் குடியையும் அதனுள் அடக்கிக்கொண்டு என் வீட்டில் என்னை மணந்து வாழ விரும்பிய அருளுள்ளத்தின் மலர்ச்சியே இது; வெற்ருட்டம் என வெறுமனே நின்றேன். இத்தனைக்கும் பொருள் இதுவே அன்ருே? அதனை உணராமற் போனேன். 'கடையை விரித்தேன்; வாங்க வேண்டியவர் வாங்கவில்லை. கடையைச் சுருட்டிக்கொண்டேன்' என்றுகூட முணுமுணுக்காமல் வீடு திரும்பினுள்" என்று பெருமூச்சு விடுகிருன்.

"அம் மட்டுமா!" என்று புகைந்தெழுகிறது அவன் உள்ளம். "பாழான நெஞ்சமே! நீ இதனை அறிந்தாயா? உயிர்க்கு உயிராம் தோழிமாரையும் பிரியத் துணிந்தாள்; பெற்ற தாயாரையும் பிரியத் துணிந்தாள்; உயிரினும் சிறந்த நாணமும் விட்டாள்; அச்சம் நீங்கினுள்; மடம் எலாம் ஒழிந்தாள்; உன்னோடு அளவளாவினுள்; புறத்தே எல்லாம் நம்மைக் காண அலைந்து திரிந்தாள். நீ என்ன

செய்தாய்! தன்னல இன்பமே கருதி, அவளை அணைத்த-தன்றி வேறென்ன எண்ணினாய்? வேறெதற்கு உருகினாய்? உடனிருந்து வாழத் திருமணத்திற்கு ஏற்பாடு செய்-தனையோ?''

"இன்று அவள் நிலை என்ன? அறிவாயோ பேய் நெஞ்சே! தோழியர்க்கும் தோன்றாத ஒளிவு! தாயர்க்கும் தெரியாத களவு! தன் மனத்திற்கும் தெரியாத மறைவு! இப்படியுமா அவள் வாழ்வது! உன்னால்—உன்னால்—உள்ளக் களங்கமில்லாத கற்புள்ளம், பொய்யுலகின் பொல்லாத இகழ்ச்சிக்கும் ஆளாகி உள்ளதே! மான-மழிந்தபின் உயிர் வாழ்வரோ பெரியோர்? 'வெளியே வரலாகாது' என்று பெற்ற மனமும் இது கேட்டுக் குமுறித் தடுக்கின்றது. அவள்மேல் தவறுண்டோ? சுட்டியும் காட்டியும் பேசத் தகுந்தவளோ அவள்? ஏன் இந்த ஐயம் எழுந்தது? சிவந்த கண்களின் காட்சி கண்டு மகிழ்ந்தேன் நான்; பழியே தின்பாருக்கு விருந்தாயிற்று அக் காட்சி! நீரில் விளையாடிச் சிவந்த கண்களைக் கள்ளக் காதலனோடு கலந்து களித்துச் சிவந்த கண்கள் என்று பாழுலகம் பழி தூற்றியதோ? ஐயோ! பழியைக் கேட்டாளோ தாய்? ஐயந்தான் கொண்டாளோ? அன்புச் சமுதாயத்தை எவ்வாறெல்லாம் சிதறத் தகர்த்துள்ளேன், ஏ நெஞ்சே! அவள் போனபின் இத்தனையும் நினைக்கின்ற நின் அறிவே அறிவு!

"என்னையே அறிந்து அவளை அறியாமல் இருந்த நான், தன்னையே மறந்து அவளையே அறிந்த அவளுடைய உயிர்த்தோழி கூறியதையும் உணராமற் போனேன். என்ன அறியாமை! அத் தோழியைப் பார்த்து 'நீ அறியாய் அவளை; நான் அறிவேன்' என்று இடித்துரைத்தேனே!

நெஞ்சே! நீயோ அவளை அறிவாய்? நீயோ அறிவாய்?"" என்று தோழியோடு பேசிய தனை நினைத்துப் புலம்புகிறான்.

## 5

தோழியின் பேச்சும் நினைவுக்கு வருகிறது. சொல்கொண்டு தோழி எழுதிய உயிர் ஓவியம் அவன் மனக்கண் எதிரே தோன்றுகிறது இதோ.

மிக நீண்டு வளர்ந்த தினையை வளர்க்கும் மலை நாட்டார் வாழும் குறிச்சிச் சீறூர் தெரிகிறது. தோட்டமும், நடுவில் வீடுமாக அமைந்த குடியிருப்புக்களின் முடிமணியாக நண்ணடுவே அழகாக ஒரு தோட்டம் மிகப் பரந்து விளங்குகிறது. அகன்று நீண்ட தோட்டத்தின் இடையே எழுந்து ஓங்குகிறது தலைவி வீடு—அவள் வீடு.

அவ் வீட்டின் முற்றத்தே ஆர அமரக் கூடி இருக்கின்றனர் குன்றக் குறவர்கள். அவர்கள் தினை கொய்ய நாள் பார்க்கிறார்கள். அதுதான் மலையரசன் வீடு. மலைநாடனின் உயிரான காதல் மகளே அவள். "ஒரே பெண்—இளம் பெண்—அவன் அன்பையே நம்பும் பெண்—நன் மலைநாடன் காதல் மகள்—மலையரசனுக்கு உயிரான மகள்'' என்று தோழி கூறியது காதில் விழுகிறது.

"அன்புச் சமுதாயத்தின் உண்மை நிலையை என் உளங் கொளக் கூறி வழி காட்டுகிறாள்'' என முன் அவன் உணரவில்லை. "இந்த இன்பச் சூழலை—அன்பான தந்தையைப் பிரிவாளோ?" என்றே தோழி வினவுவதாகப் பொருள் கொள்கிறான்; "நான் அறிவேன் அவள்

மனத்தை. யான் இன்றி அவள் வாழாள்" என்பது தோன்றப் பேசுகிறான்.

"கொழுவிய தினையின் விளைவு—செழுமையான பலாப்பழம் — அடர்ந்திருண்ட தோட்டம் — மலைநாடன் எம் அப்பன்" என்று தோழி கூறிய விளக்கம் ஏன்? "அவள் குடிக்கு ஒவ்வாத குடி அவன் குடி" என்று தோழி கருதுகிறாள் என நினைக்கின்றான். "ஒத்த குடியும் ஒவ்வாத குடியும் யார் அறிவார்? என்னோடு மனமொத்துப்போன அவள் அன்றோ அறிவாள்? நீ எப்படி அறிவாய்?" என்று உள்ளுக்குள் முணுமுணுக்கிறான் அவன்.

"சேற்றிற் பிறக்கவில்லையா செந்தாமரை!" என்று குறிப்பாகச் சுட்டிக் காட்டுகிறான்; "இவ்வாறு பேசி எங்களைப் பிரித்துவைக்க முடியாது" என்பது தோழி மனத்தில் உறைக்கும்படி உறுதி கூறுகிறான்.

முன் நடந்தது இப்படி.

## 6

"இவற்றின் உண்மைப் பொருளை அறியாமற் போனேனே! தோழி மனம் புண்பட என்ன என்ன கூறினேன்!" எனத் தன்னைத் தானே நொந்துகொள்கிறான் அவன், இன்று.

"ஐயோ! அறியாமையால், தோழியை அறியாதவள் என்றேனே! தோழி காட்டிய அன்பு வழியில்—இயற்கை வழியில் சென்று அவளை அடைய முடியாமல் அறியாமைச் செருக்கில் ஆழ்ந்து எனக்கும் அவளுக்கும் கேடு சூழ்ந்தேனே!" எனக் கவலைப்பட்டுக் கருத்தழிகிறான் அவன்.

தினைக் கதிரின் கொழுமை—இலைகளின் நீட்சி—பலா—வின் செழுமை—மரங்களின் உயர்ச்சி—அடர்த்தி—இவை எல்லாம நிலத்தின் வளம் என அவன் அறிவான். ஆனால், அவர்களோ இவை அனைத்தும் அறத்தின் கொழுமை—கற்பின் விளைவு — அன்பின் உயர்வு — இன்பத்தின் அடர்த்தி—நேர்மையின் நீட்சி என்று கருதுகின்றார்கள். இக் கருத்து அவனுக்கு இப்போது நன்கு விளங்குகிறது. " நன்மலை நாடன் " என்று தோழி கூறியதின் பொருள் தெளிவாகிறது. " நன்மையே, அறமே, கற்பே, அன்பே இந்த வளம் அனைத்தும்" என்று தோழி கூறியதின் உட்-பொருள் அவன் உள்ளத்தை உறைக்கின்றது. " நல் வாழ்வு வாழக் கற்பு நெறியில் உடனே மணஞ் செய்யத் துணியாது போனேனே!" என வருந்துகிறான் அவன்.

## 7

" தினை அறுத்தல், தினை கொய்தல்' என்பது வயிறு வளர்ப்பார் பேச்சு. இயற்கையோடியைந்து வாழும் இக் குறவர்களும் தினை யுண்டுதான் வாழ்கின்றனர். ஆனால், அவர்கள் தினையறுப்பது ஏன்? அவர்கள், தினையின்கால் தினைக்கதிரின் கொடுமையால் வளைந்து செம்மைநிலை கோணி வருந்துவது காண்கின்றார்கள்; அந்தக் கொடுமைக் கோணலை நீக்கிச் செம்மையாக்கி இன்பம் கொடுக்க அறுவடை செய்கின்றனர். அன்பும் அறச்செம்மையும் அவர்கள் உள்ளத்தைக் குழைக்கின்றன; உணவும் ஊட்டுகின்றன. அத்தகையது அவள் பிறந்த குடி.

"ஓரறிவுயிராம் தினையொடும் ஒத்துத் துடிக்கும் அவர்-கள் நெஞ்சம் குழந்தைகளோடு குழைந்து குழவி நெஞ்ச-மாகிறது. குழவிகள் ஆடும் முற்றத்தில் குழந்தைக-

ளோடு குழந்தைகளாய் மாலையில் அமர்ந்து அவர்கள் விளையாடுகிறார்கள். வாழ்வின் இன்பம் அஃது. அவர்கள் பண்பாடு இவ்வாறு குழவிகளோடு ஆடும் முகத்தான் தலைமுறை தலைமுறையாக அழியாது அவர்கள் குடியில் ஓங்கி வளர்கிறது. அத்தகைய பண்பாட்டில் பிறந்ததுமுதல் விளையாடிவருகிறாள் தலைவி. என்னே இவர்கள் கல்வி முறை! விளையாட்டுக் கல்வி முறை!

“மரங்களும் நீளுகின்றன: கிளைகளும் நீளுகின்றன; இவர்களுக்கு நிழல் கொடுக்க, வளங் கொடுக்க நீளுகின்றன. இயற்கையும் மக்களுமாம் இயைபு இத்தகையது. இவற்றிடையே வானத்தில் கருமுகில்கள் மழையை நினைப்பூட்டி இன்பமாய் ஓடுவதும் தெரிகின்றது. இருட்டில் எவ்வாறு தெரியும்? மின்மினிப் பூச்சியின் ஒளியில் தம் மனத்தைக் குழந்தைகள்போலப் பறிகொடுக்கின்றார்கள் குறவர்கள். அன்புக்கண் காணும் காட்சி இஃது. அங்கே சிற்றொளியும் பேரன்பொளியாம். பெரிய மந்தையுள்ளும் தன் கன்றைத் தாய்ப் பசு பிரித்தறிவது அன்புக்கண் கொண்டன்றோ?

“தினை கொய்வதற்கு அவர்கள் நாள் பார்க்கும் முறையும் இதுவே ஆம். இயற்கையே நாள் வைத்துக் கொடுக்கிறது. இயற்கை வாழ்வு வாழ்வார்க்கே இந்த நுட்பம் தெரியும். நாகரிக வாழ்வு வாழும் யான் இதனை ‘அறியாமை’ என இகழ்ந்தேன்! இன்றறிவேன் இந்த அறிவின் நுட்பத்தை. இயற்கையோடியைந்து முனைப்பற்ற நிலையில் தோன்றும் விளக்கம் இது.

“மின்மினிப் பூச்சி வழியேக் கருமுகிலைக் காரிருளில் காணும் இவர்கள் சிறிது அலர்—பழிச்சொல்—எழினும்

உண்மை உணரும் உணர்வு பெற்றவர்கள். ஆனால், வெறுப்போ தண்டனையோ இல்லை. தினைத்தாளைச் செம்மையாக்கத் தினையை வீடு சேர்க்கின்றனர். தினைத் தாளாய்த் (தலைவியின் ஆணிவேராய்த்) தினையைத் (தலைவியைத்) தாங்கியது (தலைவன்), தாள் செம்மை யுற்று (கற்பு நெறி) வாழத் தினையைத் (தலைவியை) வீடுகொண்டு சிலநாள் பிரித்து வைப்பது குறவர் பெருநெறி. செம்மையுற வாழ்வதே கற்புநெறி. தினை கொய்யும் காலமே வேங்கை மலரும் காலம். களவு நெறி முடியும் காலமே கற்பு நெறி மலரும் காலம். வேங்கை மலரும் காலமே குறவர் மணவிழாக் கொண்டாடும் காலம்.''

'''அன்புச் சமுதாயம் அன்பின் தலைவியை வாடவிடாது; அன்பு வழிச்சென்று இயற்கை நெறியை உணர்ந்து குடிமரபிற்கேற்ப மணப்பதே முறை' எனத் தோழி கூறிய கருத்து அன்று விளங்கவில்லை. 'தினை அறுத்து, வேங்கை பூத்துக் குலுங்கும் நாளில், மணம் நடைபெறுவது இயற்கையோடியைந்த அவர்கள் இயற்கை வாழ்வின் சிறப்பு' என்று அவள் கூறாமற் கூறியதனையும் அன்று நான் அறியவில்லை. இன்று தெரிந்துகொள்கிறேன் நான்; மணம் செய்துகொள்ளத் தூண்டியதனை அறியாமற்போன என் அறிவின்மை என்னே!'' எனக் கழிவிரக்கம் கொள்கிறான்.

## 8

அவன் உள்ளத்தில் ஒரு புரட்சி எழுகிறது. அவன் மாறுகிறான். முன்னும் அன்பு ஆனவனே அவன். ஆனால், அன்பின் பெருமையை — உண்மை வடிவை

இன்று அறிந்ததுபோல் என்றும் அவன் அறிந்ததில்லை. முன்போல் அவளது அன்பு கற்கண்டாய்க் கடையில் இல்லை; வாயில் வந்து இனிக்கின்றது. அவளது அன்புருவம் அன்பாய் நெகிழ்ந்து பாய்கிறது. தன்னை மறக்கின்றான்; அவளே ஆகிறான். அன்பு கண்கொண்டு காணும் அறிவே உண்மை அறிவு, மெய்யுணர்வு என்பது அவனுக்கு விளங்குகிறது. இன்று தன்னலமிழந்து அவள் வடிவமாகவே மாறுகிறான்; அவளாவுகின்றான்; புதியவனாய்ப் புத்துயிர் பெற்றுப் புத்துலகில் வாழ்கிறான்.

* * *

இந்தக் கதையினை 12 வரியில் பாடுகிறார் பெருங்கௌசிகனார் என்ற புலவர்:

பொருவில் ஆயமோடு அருவி ஆடி
நீர்அலைச் சிவந்த பேர் அமர் மழைக்கண்
குறியா நோக்கமொடு முறுவல் நல்கி
மனைவயிற் பெயர்ந்த காலை நினைஇய
நினக்கோ அறியுநள் நெஞ்சே புனத்த
நீடுஇலை விளைதினைக் கொடுங்கால் நிமிரக்
கொழுங்குரல் கோடல் கண்ணிச் செழும்பல்
பல்கிளைக் குறவர் அல்குஅயர் குன்றில்
குடக்காய் ஆசினிப் படப்பை நீடிய
பன்மர உயர்சினை மின்மினி விளக்கத்துச்
செல்மழை இயக்கம் காணும்
நல்மலை நாடன் காதல் மகளே !

—நற்றிணை 44.

[ஆயம் -தோழியர் கூட்டம்; முறுவல் - புன்சிரிப்பு; கொடுங்கால் - வளைந்த தாள்; குரல் - கதிர் ; ஆசினி - பலா ; படப்பை—தோட்டம்.]

# 2. நப்புன்னை

## 1

நப்புன்னை மரத்தின் நிழலில் நப்பின்னை வளர்ந்தோங்குகின்றாள். நப்பின்னை இளமங்கையாக அழகு திரண்டு ஒளிர்கின்றாள். காதல் பூத்தொளிர்கின்றது; இவள் மனத்தினைக் கொள்ளைகொள்ளும் கண்ணன் வருகின்றான்; காண்கின்றான்; காதல் கொள்கின்றான். இருவரும் ஒருயிரும் ஈருடலுமாகப் பிணைகின்றனர். திருமணம் செய்வதற்கு ஏற்பாடு செய்யாமல், கண்ணன் நாடோறும் நப்பின்னையை வந்து கண்டுபோவதிலேயே காலத்தினைக் கழிக்கின்றான். "பிறரறிந்தால் என் செய்வது?" என்பது நப்பின்னையின் கவலை; அவள் தோழி நக்கண்ணையின் வாட்டம். கவலை ஒருபுறம்! காதல் ஒரு புறம்!

காலையில் எழுந்ததும் கண்ணன்மேல் காதல் முறுகி-வரும். காணவேண்டும் என்ற எண்ணம் கட்டினை எல்லாம் தாண்டிக் குதிக்கும். கண்ணனுடைய ஊர், அடுத்த ஊர்; நீர் வளம் சிறந்தது. அதனைத் தன் ஏழ்நிலை மாடத்தில் இருந்து பார்க்கின்ருள் நப்பின்னை. தண்ணீர், கதிரவன் ஒளியில் பளபள என மின்னுகிறது. கண்ணன் முகத்தில் கண்கள் மின்னுவதனைக் காண்பதுபோல் இவள் கண்டு மகிழ்கின்ருள். இவளுடைய ஐம்புலனும் ஒருமுகப்பட்டு அவனையே எண்ணுகின்றன. அந்தத் தண்ணீரைச் சுற்றி ஏதோ ஒன்று நகர்கின்றது. வலம்புரிச் சங்குதான் ஊர்-கின்றது என்கிருள் இவள். அதன் ஒலியும் இவளுக்குக் கேட்பதுபோலத் தோன்றுகின்றது. அவனேடு தொடர்-புபட்டது எல்லாம் இவளுக்கும் இனிக்கும் அன்ருே? இந்தச் சங்கின் ஒலியும் மிகமிக இனிக்கின்றது. புதிய ஒலிதான்! இருந்தால் என்ன? புதிய பாணர்கள் புதிய புதிய பாடல்களைப் பாடவில்லையா? ஆம்! அந்தப் பாடல்கள்-போலவே இந்தச் சங்கோசையும் இவள் உள்ளத்தே பேரிசைப் பாட்டாக வளர்ந்து பேரின்பம் ஊட்டுகிறது.

கண்ணன் வருகிருன்; ஒருவருக்கும் தெரியாமல் இவர்களது வீட்டுத் தோட்டத்திற்குள் நுழைகின்ருன். நப்பின்னையும் கீழிறங்கி ஒருவருக்கும் தெரியாமல் எதிர்-கொண்டழைக்கின்ருள். இருவரும் கொடி வீட்டினுள் புகு-கின்றனர். மறைவான இடம் அன்ருே அது! காதலியைக் கண்டதும் காதலன் அணைக்கின்ருன்; "கண்ணே" என்-கின்ருன். நப்பின்னை யாரோ தன்னைப் பார்த்துவிட்டது-போலத் திடுக்கிடுகின்ருள்.

"இதோ எங்கள் அக்காள், அக்காள்!" என்று நடுங்கி நாணிக் கூறிக்கொண்டே தன்னை அவன் கையிலிருந்து

விடுவித்துக்கொண்டு வீட்டிற்குள் போய் நப்பின்னை ஒளிந்துகொள்கிருள்.

கண்ணனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. சுற்றுமுற்றிலும் பார்க்கின்ருன். ஒருவரையும் காணேம்; சிறிது தாழ்ந்து நப்பின்னையின் உயிர்த்தோழி நக்கண்ணை வருகின்ருள்; நடந்ததனை அறிகின்ருள். "நப்பின்னை தானே வள்ளியம்மையாருக்கு முதற் பெண்! இன்று அக்காள் அக்காள் என்று நப்பின்னை ஓடியது என்ன விளையாட்டு?" என்று கண்ணன் கேட்கின்ருன்.

"மணந்துகொண்டு உங்கள் ஊரிலுள்ள மரநிழலிலே நப்பின்னையுடன் விளையாடலாகாதா?" என்கின்ருள் நக்கண்ணை.

"திருமணத்திற்கு ஏற்பாடு செய்யவேண்டுவதுதான்! இன்றே செய்கின்றேன். காதல் வெறியில் இது தெரியாமற் போய்விட்டது. ஆனல், "அக்காள" என்று நடுநடுங்கி ஓடிஞளே! அந்தப் புதுமை யாது? எனக்கு விளங்கவில்லையே?"

"நப்புன்னை நப்பின்னையின் அக்காள்தான். வள்ளியம்மை முதலில் வளர்த்த பிள்ளை அது; தேனும் பாலும் ஊட்டி வளர்த்த பிள்ளை. எங்களைவிட நப்புன்னை அக்காள்தான் நல்லவள் என்று வள்ளியம்மையார் அடிக்கடி சொல்லுவார்கள். நாங்களும் அக்காளை மறந்த நாளே கிடையாது. அந்த அக்காள் எதிரே உங்களோடு எப்படிக் கூச்சமின்றிப் பேசுவது?" என்கிருள் நக்கண்ணை.

"விளங்கவில்லையே!" என்கிருன் கண்ணன்.

"எங்கள் குடியின் கதை அஃது" என்று சொல்லி ஒரு பாட்டியிடம் கொண்டு செல்கிறாள் தோழி.

## 2

பாட்டி கூறுகிறாள்: "முருகனார் தெரியுமே, நப்பின்னை-யின் தந்தையார்! வள்ளி அவர் மனைவி—நப்பின்னையின் தாய். ஒரு நாள் நடந்த காட்சி என் கண்முன் இன்று கண்டதுபோல் இதோ தோன்றுகிறது.

"முருகனும் வள்ளியும் மணந்து பேரின்பப் பெரு-வாழ்வு வாழ்கின்றனர். குழந்தைச் செல்வமும் செழிக்-கின்றது. மக்களைப் பெற்று அவர்கள் மகிழ்கின்றனர். ஓராண் குழந்தை—ஒரு பெண் குழந்தை—இவை செல்வ-மாக வளர்கின்றன: குடிக்கேற்ற குணம் சிறக்கின்றது சுற்றுப்புறத்துக் குழந்தைகள் ஏழை என்றோ செல்வர் என்றோ வேற்றுமை பாராட்டாது இந்தக் குழந்தைக-ளுடன் மனமொத்து விளையாடிவருகின்றன.

"'விருந்தின்றி உண்ணாத மேன்மைக் குடி' என இவர்-களை எல்லோரும் போற்றுகின்றனர். அடையாத பெருங்-கதவம் அனைவரையும் வரவேற்று, முருகனாரையும் வள்ளி-யம்மையாரையும் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக்கி வளர்க்கின்றது. ஊரிலே திருவிழா என்றால் இவர்கள் வீட்டில்தான் எல்லோருக்கும் விருந்து. ஒரு நாள் இந்திர விழா: வீட்டின் பின்புறத்து அறையில் பாலும் தயிரும் சால்சாலாக வீற்றிருக்கின்றன, தேனும் நெய்யும் வானத்திலிருந்து இறங்குவதுபோல உறிகளில் தொங்குகின்றன. வாழைப் பழங்கள் தோரண மிட்டது-போலக் கயிற்றில் ஏறித் தவம் செய்கின்றன. மாவும் பலாவும் மலைமலையாகக் குவிந்துகிடக்கின்றன. வழக்க-

மாக அந்த அறையில்தான் குழந்தைகள் விளையாடுவது. அந்த அறை விருந்துக்கு உதவ வேண்டுமாகையால், குழந்தைகளும் அந்த அறைக்குள் செல்லாது உதவ-வேண்டும் என வள்ளியம்மையார் தம்முடைய குழந்தை-களைக் கேட்டுக்கொள்கின்றனர். அவர்களும் மனமொப்பித் தாய்க்கு உதவி செய்துகொண்டிருக்கின்றனர்.

"வெளியிலிருந்து வரும் குழந்தைகளுக்கு இது தெரி-யாது. அன்று பொழுது புலர்ந்ததும் குழந்தைகள் பழமை-போல அந்த அறைக்குள் புகுகின்றன. அவர்கள் வருவ-தனைக் கண்ட வள்ளியம்மையாரின் செல்வப் புதல்வி நப்பின்னையும் வருகின்ருள்; அவளுடைய தம்பி கீரனும் வரு-கின்ருன். 'இந்த அறையை விட்டு வேறு இடத்தில் போய் விளையாடலாம்' என்று இவர்கள் சொல்வதற்குமுன்-னரே, மற்றைய குழந்தைகள் ஓடோடியும் அறைக்குள் புகுந்து ஆடத்தொடங்குகின்றன. குழந்தைகள் உள்ளத்-தைக் கவரும் பொருள்களே அங்கிருக்கின்றன. தலைகால் தெரியாமல் அவைகள் களிக்கூத்தாடுகின்றன. இரண்-டொரு சால்கள் உருளுகின்றன.ஒரு சில பழங்களைக் குழந்-தைகள் தம் கையில் எடுத்துக்கொண்டு வெளிவருகின்றன. ஒன்றன் தோள்மேல் ஒன்று ஏறி எட்டாத உறியையும் எட்டி வெண்ணெயையும் தேனையும் ஒன்ருக்கி உண்கின்றன; மிகுந்ததைச் சுவரின் புறத்தே பதுங்கிக் கிடக்கும் பூனைக்-கும் தருகின்றன. கீரனும் நப்பின்னையும் பேசுவது ஒன்றும் அந்தக் குழந்தைகள் காதில் விழவில்லை.

"இந்த ஆரவாரத்தைக் கேட்டு வள்ளி அம்மையார் உள்ளிருந்து ஓடிவருகிருர். முருகனரும் வருகின்ருர். வள்ளியாரின் மனம் இந்தச் சீர்கேட்டைக் கண்டு எரிகிறது; முருகனரோ குழந்தை விளையாட்டினைக் கண்டு சிரிக்-கின்ருர்.

"'இந்தக் குழந்தைகள் தொல்லையே தொல்லை! பேசாமல் ஓர் இமைப்போதும் இருப்பதில்லை! இதனை உருட்டுகின்றார்கள்; அதனை உடைக்கின்றார்கள்; 'ஓ' என இரைகின்றார்கள். என்ன சொல்வது என்றே தெரியவில்லை!' என இரைகின்றார் வள்ளி அம்மையார். 'குழந்தைகள் என்ன கல்லா? காலும் கையும் இருந்தால் ஓடி ஆடத்தானே செய்யும்! குழந்தைகள் விளையாடுகிற இடத்தைப் பிடுங்கிக்கொண்டால் அவர்கள் வேறு எங்கே போவார்கள்? இப்பொழுது ஒன்றும் முழுகிப் போகவில்லை. இரண்டொரு சால் பாலும் தயிரும் தேனும் நெய்யும் இன்னும் வரும். ஆகையால், வள்ளி! விருந்தாளிகள் மனம் வருந்துவார்கள் என நீ ஒன்றும் கவலைப்பட வேண்டா' என்கிறார் முருகனார்.

"'கவலைப்பட வில்லை. பொருள்கள் பாழாகலாமா? இஃது ஏன் இந்தப் பிள்ளைகளுக்குத் தெரியாது போகிறது? நம் நப்புன்னையைப் பாருங்கள்! ஏதாவது இரைகின்றாளா? உணவு கொடுக்கக் காலந் தாழ்த்தாலும் முணுமுணுப்பதில்லை; அன்று போட்ட இடத்திலேயே இன்றும் கிடக்கின்றாள்; வருவோருக்கு எல்லாம் நிழல் தருகின்றாள்; பூப்பூத்து உதிர்க்கின்றாள்; புன்னைக் கொட்டையைப் பிள்ளைகளுக்கு விளையாடக் கொடுக்கின்றாள். நப்பின்னை! உனக்கு உன் அக்காள்போல ஆகவேண்டும் என்ற உயர்ந்த நோக்கமே இல்லை' என்று வள்ளியம்மையார் புன்னையின் சிறப்பினை அவள் மனங்கொள்ளப் பரக்கப் பேசுகின்றார்.

"முருகனார் விழுந்து விழுந்து சிரிக்கின்றார்; 'நப்புன்னைபோல நப்பின்னையும் வேரூன்றி மரமாக வளரவேண்டும் என்று விரும்புகிறாயா?' என்று வள்ளி நகை-

யாடுகின்றார். 'ஆமாம், நீங்களே இந்த மனிதப் பிறப்பைப் பாராட்டவேண்டும்! குரங்குக்குத் தம்பியும் தங்கையும்தாம் இவர்கள். நப்புன்னையின் சிறப்பை இவர்கள் உணரவேண்டும்,' என்கின்றார் வள்ளி அம்மையார். 'ஆம்; அப்படி உணருமாறு இதுவரை நீ ஒன்றும் செய்யவில்லையே! குழந்தைகளே! இனிமேல் நப்புன்னை அக்காளைச் சுற்றித்தான் நீங்கள் விளையாடவேண்டும். நான் அங்கே கொடிகளைப் பரப்பிவிட்டு வீடுபோலச் செய்துவிடுகின்றேன். அந்தக் கொடி வீட்டில் போய் விளையாடுங்கள்' என்று முருகனார் தட்டிக்கொடுக்கின்றார். 'நப்புன்னை எப்படியப்பா அக்காள்?' என்று அயல் வீட்டுக் கொற்றன் கேட்கிறான். பக்கத்தில் இருந்த சாத்தன் 'அதுவா? எங்கள் அம்மா சொன்னார்கள். சொல்லட்டுமா? அப்படியே ஒப்புவிக்கும்படி அம்மா சொன்னார்கள். கேள்' என்று சொல்லத் தொடங்குகின்றான்:

## 3

"'பொழுது புலர்கிறது; செவ்வானம் பரவுகிறது. கதிரவனும் காட்சி அளிக்கின்றான். இருளில் மங்கிக்கிடந்த ஊரும், பல நிறமும் பல வடிவமும் பெற்றுத் தோன்றுகிறது. ஒருபுறம் பச்சைப்பசேர் என்ற வயல்களே! ஒரு புறம் வானை நோக்கி எழுந்த வீடுகள் நிறைந்த தோட்டங்கள்! ஒரு வீடு மிக உயர்ந்த எழுநிலை மாடமாகச் செருக்கிக்கிடக்கிறது. அஃது அந்த ஊருக்குத் தலைவர் வீடு என்பது சொல்லாமலே விளங்குகிறது. அந்த வீட்டிலிருந்து ஒரு பெண் ஓடோடியும் தோட்டத்திற்குள் வருகிறாள். அவள் தலைவரின் பெண்தான்; தலை மயிர் கூந்தலாக நீண்டு வளராத சிறுமி; தலை மயிர் அலைய ஓடிவருகிறாள். செல்வப் பொலிவெல்லாம்

உடையில் விளங்குகிறது. மனித இயற்கையின் அழகெல்லாம் அவள் நடையில் விளங்குகிறது.

" 'புதிய நாள் விடிகிறது; புத்துணர்ச்சி பிறக்கிறது அவள் பார்வையும் உடல் துடிப்பும் இயற்கையோடுஇயற்கையாக ஈடுபட்டிருப்பதைத் தெரிவிக்கின்றன. 'உலகுக்கு ஒரு கண்ணே, ஒளிவிளக்கே, ஓடிவா! செக்கச் சிவந்த பழமென்றே தெரிகிருய்! கரகர என்றே கடுகவே ஓடிவா!' என்று பாடிக்கொண்டே கலகல என்று இவள் சிரிக்கின்ருள். பறவைகள் பலவகையான பண் ஒலிகளை எழுப்பிச் சிற்றஞ் சிறுகாலே இசையரங்கம் நடத்துகின்றன. பறவைகளோடு பறவையாய் இவளும் பாடுகின்ருள்; ஆடுகின்ருள்;

'தேங்குயிலே நின்பாடல் மாம்பழமோ தீம்பாலோ
பச்சைக் கிளியேநீ கொச்சைமொழி பகர்கின்ருய்
ஆடுவோம் வாமயிலே ஆண்டவனைத் தேடுவோம்'

என்று தலையை வளைத்தும், இடுப்பினை ஒடித்தும், கையை அபிநயம் பிடித்தும் ஒய்யாரமாக நடக்கின்ருள்: நடக்கிறபொழுது அந்தத் தோட்டத்துச் செடிகளும் காலிற் சிக்குகின்றன; 'உன்னோடு விளையாடவேண்டும் என்று என்னைப் பிடித்து இழுக்கிருயா? இரு, இரு! இதோ வருகிறேன்' என்று பழைய கூட்டாளியிடம் பேசுவது போலப் பேசுகிருள். மரங்களின் தளிர்கள்—தாழ இருப்பன—இவள் உடலைத் தடவிக்கொடுக்கின்றன. மலர்கள் இவள் தலைக்குள் பட்டு விழுகின்றன. 'தடவிக் கொடுக்கும் தாயே! பூமுடிக்கும் செவிலியே!' என்று இவள் கூறிக் கள்ளமில்லாத சிரிப்பு முகமெல்லாம் மலரச் சிரித்துப் போகின்ருள்.

" 'காலைக் காற்றில் தூய சிறு அலைபோல இவளுடைய பாட்டு மெல்லப் பரவுகிறது; தொலைவில் உள்ள வானகத்துப் பாட்டுப்போலக் கேட்கிறது. அண்டை அயல் வீட்டில் உள்ள சிறுமிகள் இவளை நோக்கி ஓடி வருகின்றார்கள்:

" 'வள்ளி! வள்ளி!' என்று அழைத்துக்கொண்டே வந்து இவளைச் சூழ்ந்து மொய்த்துக்கொள்கிறார்கள். இவள்தான் உடம்பு. அவர்கள்தாம் உறுப்புக்கள். இப்படி இயற்கையாக அமைந்ததுபோல இவளோடு ஒன்றாய்ப் பாடுகிறார்கள்; ஆடுகிறார்கள். செவ்வானம்—செவ்வானத்தில் செங்கதிரோன்—செங்கதிரோனில் சிவந்து மின்னும் மேகங்கள்—இவற்றினைக் கண்டு களித்துப் பேசிச்-சிவந்த மூக்கிற் பழுத்த கிளிகள்—கிளிகள் கொத்தித் தின்னும் செக்கச் சிவந்த ஆலம் பழங்கள்—ஆலமரத்தின் அடியில் சிவந்து பட்டாடை உடுத்தி ஆடும் சிறுமிகள்—அவர்கள் பாடும் செந்தமிழ்ப்பாடல்கள்—அனைத்தும் ஒன்றாய் இயைந்து அவர்கள் பாடும் பாடல்—' செக்கச் சிவந்த செல்வா! செந்தில்வரும் முருகோனே!' என்பதில் முடிகிறது.

" 'முருகன் என்பது இந்த வள்ளியின் அத்தை மகன். இதோ அவன் வருகின்றான்: அதனால்தான் சிறுமியர் அப்படிப் பாடுகின்றனர்.

" 'வள்ளி! இன்றைக்கு ஒரு புதிய விளையாட்டு ஆடவேண்டும்' என்கின்றனர் சிறுமியர். வானத்தில் சிறிய கருமேகங்கள் பரவுகின்றன; கதிரவன் அவற்றில் மறைந்து மறைந்து வருவதுபோலத் தோன்றுகின்றான். 'கதிரவன் கண்ணாமூச்சி விளையாடுகிறான்: நாமும் விளை-

யாடலாம். ஆளுக்கு ஒரு கொட்டை பொறுக்கி [வாருங்கள்' என்று வள்ளி சொன்னதும் சொல்லாததும் சிறுமியர்கள் தோட்டம் முழுதும் பரவுகின்றனர்; பாக்கு, புன்னைக் கொட்டை, புன்கம்கொட்டை, நெல்லிக்கொட்டை என்று எத்தனையோ வகையான கொட்டைகளைப் பொறுக்குகின்றனர்; ஆளுக்கு ஒன்றாகக்கொண்டு ஓடிவருகின்றனர். அவர்களுள் ஒரு பெண், 'என்னவள்ளி! நேற்றுப் பாப்பா விளையாட்டு என்றாய்; இன்று மறந்துவிட்டாயா? கொட்டை பொறுக்கச் சொன்னாயே!' என்று கேட்கிறாள். மற்றொரு பெண், 'வள்ளியா மறப்பாள்? புறா முட்டையை நீ தள்ளி உடைத்தாயே! அப்போது அத்தான் என்ன சொன்னார்? புறாப் பாப்பாத்தான் புறா முட்டை என்று சொல்லவில்லையா? இந்தக் கொட்டை எல்லாம் பழத்துக்குள் இருக்கிற மரங்களின் முட்டை என்று வள்ளி சிரிக்கவில்லையா? கொட்டைகள்தாம் மரப் பாப்பாக்கள்' என்கிறாள்.

" 'மரப் பாப்பா, மரப் பாப்பா!' என்று எல்லாச் சிறுமிகளும் கொட்டைகளை அணைத்துக்கொண்டு பாடி ஆடுகிறார்கள்.

" 'சில நாட்களுக்கு முன்னர்ப் பரப்பிய மணல், தோட்டத்திற்குப் புது மெருகிட்டாற்போல இருக்கிறது. நிறையப் பூக்கள் பூத்து உதிர்வதால் மணலும் மகரந்தமும் மட்கிக் கலந்து மணப் பொடி பரப்பியதுபோலக் கிடக்கின்றன. சிறுமியர் இந்தப் பரப்பில் விளையாட வருகின்றனர். ஒவ்வொருவரும் தத்தம் மரப் பாப்பாவுக்கு 'நெல்லி அப்பன்,' 'பூவரசன்,' 'மாம்பழ நங்கை,' 'கமுகம்மை' என்று கொஞ்சிக் கூவிப் பெயரிடுகின்றனர். வள்ளி கொண்டுவருகிறது புன்னைக் கொட்டை. இதுதான் அவள்

மகள். வள்ளியின் மகளை, வந்திருந்த முருக அத்தான், 'நப்புன்னை' என்று செல்வப் பெயரிட்டு அழைக்கின்றான். எல்லாரும் கைகொட்டி ஆரவாரம் செய்கின்றனர்.

"'வள்ளி! விளையாடுவது எப்படி?' என்று விளையாடத் துடிதுடிக்கும் சிறுமியர் கேட்கின்றனர். 'வள்ளி நான் சொல்லலாமா?' என்கிறான் முருகன். 'சொன்னால் என்ன?' என்கிறாள் வள்ளி. 'சிவப்புப் பெண்கள் எல்லாம் ஒரு கூட்டம்; கறுப்புப் பெண்கள் எல்லாம் ஒரு கூட்டம்' என்று சொல்லத் தொடங்கியதும், 'அத்தானுக்கு எப்பொழுதும் விளையாட்டுத்தான்' என்று பெண்கள் கூப்பாடு போடுகின்றார்கள். 'இப்படி இரைந்தால் நான் ஒன்றும் சொல்ல முடியாது' என்று திரும்பிப் போகப் பார்க்கின்றான் முருகன். 'இல்லை! இல்லை! அத்தான், சொல்லுங்கள்' என்று சிறுமியர் பேசாமல் இருக்கின்றனர். "கறுப்புக் கூட்டமே தோழிமார் கூட்டம்; சிவப்புக் கூட்டமே தாய்மார் கூட்டம். தத்தம் குழந்தையைத் தத்தம் தோழிகளிடத்துக் கொடுத்துவிட்டு ஒளிந்துகொள்ளவேண்டும். தோழிமார் ஒவ்வொரு கொட்டையையும் தனித்தனியே மணலுக்குள் மூடி மறைக்கவேண்டும். 'குவால் குவால்' எனக் குழந்தை கத்துவதுபோல் தோழிக் கூட்டம் கத்தவேண்மே. கத்தியதும் தாய்க்கூட்டம் வெளிவந்து தேடவேண்டும். யார் முதலில் தன்னுடைய குழவியை எடுக்கிறாளோ அவளுக்குத் 'திருத்தாய்' என்ற பட்டம் சூட்டவேண்டும். பூவை மாலையாகக் கட்டி மாலையிடவேண்டும்: இதுதான் விளையாட்டு' என்று சொல்லி முடிப்பதற்குள் ஒரு பெண், 'யார் மாலை இடுவது? அத்தானா?' என்று சிரிக்கிறாள்.

"'சிறுமியர் இரண்டு கூட்டமாகப் பிரிகின்றனர். வள்ளி மாஞ்சிவப்பு நிறம் ஆதலின், தாயார் கூட்டத்தைச் சேருகின்றாள்; தன்னுடைய நப்புன்னையைத் தோழியிடம் கொடுத்துவிட்டுக் கண்ணை மூடிக்கொள்கிறாள். இப்படியே மற்றவர்களும் செய்கின்றார்கள். தோழியர் கொட்டைகளைத் தனித்தனியே புதைத்து மணலைக் குவித்துவைக்கின்றனர்.

"'வானத்திலே பரவிய கரியமேகம் இருட்டைத் திணித்தாற்போல ஆகிவிடுகிறது. தோழிக் கூட்டம் 'குவால், குவால்' என்று கூவத் தொடங்கும்போது, திடீர் எனப் பெருமழை கறக்கிறது. வீட்டிலிருந்து தாய்மார், 'வள்ளி! நக்கண்ணை! நச்செள்ளை!...ஓடிவாருங்கள்; வீட்டிற்குள் வந்துவிடுங்கள்; மழையில் நனையவேண்டாம்: வாருங்கள்; வாருங்கள்' என்று கதறுகின்றனர். சிறுமியர் தத்தம் வீட்டிற்கு ஓடிவிடுகின்றனர். வள்ளியும் முருகனோடு வீட்டிற்குள் புகுகின்றாள். ஆனால், இவள் மனம் தோட்டத்திலே நப்புன்னையின்மேல்தான் ஓடுகின்றது. 'ஐயோ என்னுடைய நப்புன்னை எப்படி ஆகுமோ? அத்தான், நீங்கள் தேடிக் கொண்டுவந்த தாயிற்றே! நன்றாய் உருண்டையாய் இருந்ததே! பாவம்! பாப்பா என்ன ஆகுமோ? பாழும் மழை தலைகாட்ட முடியாதபடி பெய்கிறதே!' என்று இவள் கண் கலங்கிநிற்கிறாள்!.

"'கோடைமழை விடாமல் பெய்கிறது. இரண்டு நாட்கள் இப்படிக் கழிகின்றன. மூன்றாம் நாள் பெருமழை இல்லை. இருந்தாலும் வெளியே வந்துவிடுவதற்கு இல்லை. இப்படி மேலும் இரண்டுநாட்கள் செல்லுகின்றன. மழை விட்டாலும் தூவானம் விடவில்லை. மறுநாள் வானம்

வெளுக்கின்றது. கதிரவன், காட்சி அளிக்கின்றான். காலம் கண்ட பாட்டனார் என்று கதிரவனை இந்தச் சிறுமியர் அழைப்பர். திங்களில் இருக்கிற ஆலமரத்துக் கிழவிதான் பாட்டி: வான்மீன்கள் எல்லாம் வானப் பாப்பாக்கள்—சிறுமியர் உறவின்முறை அப்படி இருக்கிறது.

"'ஆதலின், கதிரவனைக் கண்டதும் ஓடோடியும் சிறுமியர் வருகின்றனர். வள்ளியோ, நாள்தோறும், 'நப்புன்னை, நப்புன்னை!' என்றே புலம்பிக்கிடக்கின்றனள்; இன்று பொழுது விடிந்ததும் 'நப்புன்னை' என்றே கண்ணைக் கசக்கி அழுதுகொண்டு வருகின்றாள். முருகன் மனம் உருகுகிறது. கள்ளமற்ற உள்ளமல்லவா பிள்ளை உள்ளம்! முன் விளையாடிய இடத்தை அவன் போய்ப்பார்க்கின்றான். இரண்டொரு சிறிய இலைகள் மேலே தெரிகின்றன. புன்னைக்கொட்டை மரமாக வாழத்தொடங்கி, இலைவிட்டுச் சின்னஞ்சிறு செடியாக இருக்கிறது. 'வள்ளி! வள்ளி! நப்புன்னைப் பாப்பா உன்னைப்போல் இத்தனை நாளாக அழுது புலம்பியது; அம்மாவைப் பார்க்கவேண்டும் என்று வருந்தியது; மணலையும் கீறிக்கொண்டு இதோ வந்து தலையை அசைத்துக் கொஞ்சுகிறது பார். வாவா!' என்று களிக்கூத்து ஆடுகிறான் முருகன். வள்ளி ஓடோடியும் வருக்கின்றாள். மற்றைய சிறுமியர் தம் கொட்டைப் பாப்பாக்களை, மழை, தன் ஊருக்கு அடித்துக்கொண்டு போய்விட்டது. அவர்களும் புன்னைச் செடியைப் புதுமையோடு பார்க்கின்றனர். வள்ளி, தன் நெற்றியை நெறித்து நிற்கின்றாள். 'என்ன, நான் சொல்வதில் நம்பிக்கை இல்லையா?' என்று சொல்லிக்கொண்டே மணலைக் கீறிக் கீழே புன்னைக்கொட்டையை முருகன்

காட்டுகிறான்; உடனே மணலைத் தள்ளி மூடிவிடுகிறான்-'வள்ளி! உனக்குத்தான் திருத் தாய்ப்'பட்டம் சூட்ட வேண்டும்! உன் பாப்பாத்தான் கல்வி யம்மா! என்ன அறிவு! அம்மாவைத் தேடிக்கொண்டு மணலுக்கு உள்ளிருந்து மேலே வந்துவிட்டது. அதன் அறிவே அறிவு!' என்று சிறுமியர் புகழ்கின்றனர்.

"'திருத் தாயாருக்கு மாலை சூட்ட மாலை இல்லையே!' என்கின்றாள் ஒரு சிறுமி. முருகன், தான் மூடிவைத்திருந்த முல்லை மாலையைத் திறந்துகாட்டுகிறான். 'கொட்டைப் பாப்பாவைக் கொண்டு வந்தவரும் அத்தான்; விளையாடக் கற்பித்தவரும் அத்தான்; பாப்பா வளர்ந்திருப்பதனைக் காட்டிக்கொடுத்தவரும் அத்தான்; ஆகையால், அவரே மாலை இடவேண்டும்' என்று எல்லாச் சிறுமியரும் ஒருவர்முன் ஒருவர் பேச முந்தி இரைகின்றனர். இந்தப் பேரிரைச்சலைக் கேட்டு வீட்டிலுள்ளவர்கள் ஓடிவருகின்றனர். என்ன காண்கின்றனர்? முருகன் வள்ளிக்கு மாலை சூட்டுகின்றான். 'திருத்தாய் வாழ்க!' என்று சிறுமியர் வானத்திலும் கேட்க வாழ்த்துகின்றனர்.

"'பெற்றோர் திருமணம் செய்வதற்கு முன்னரே இவர்கள் மணந்துகொண்டனரா?' என்கின்றாள் அண்டை வீட்டுப் பாட்டி. அந்த வீட்டுச் சிறுமி நடந்ததனை விளக்கிவைக்கின்றாள். எல்லோரும் பிள்ளைமை விளையாட்டில் இன்புறுகின்றனர். வள்ளி, தன் தாயைப் பார்த்துச் சிரிக்கிறாள். முருகனும் தன தாயைப் பார்த்துச் சிரிக்கிறான். 'அம்மா! வள்ளிப் பாப்பாவைப் பார்க்கும்போதெல்லாம் உங்கள்மேல் அன்பு பொங்குகிறது' என்று அப்பாவிடம் சொன்னீர்களே! நினைவு இருக்-

கிறதா? அதேபோல இந்த நப்புன்னையைப் பார்க்கும்-போதெல்லாம் அத்தான்மேலே எனக்கு அன்பு பொங்கு-கிறது' என்று தன் தாயை நோக்கி வள்ளி கூறுகிறாள். எல்லோரும் கலகல என நகைக்கின்றார்கள்.

" 'நப்புன்னையை வள்ளி மறப்பதில்லை. நாள்தோறும் தண்ணீர் ஊற்றுவது யாரும் செய்வதே! தனக்குத் தாயார் தரும் பாலையும் தேனையும் ஊற்றி வள்ளி வளர்க்கின்றாள்; உணவுப் பொருள்களை யாருக்கும் தெரியாமல் அதன் வேரில் புதைத்துவைத்துக்கொண்டே இருக்கின்றாள். பின்னர்த் தோண்டிப் பார்க்கும்போது அவை மண்ணோடு மண்ணாய் மட்கி மறையும் அல்லவோ? 'நப்புன்னை இவற்றை உண்டுவிடுகின்றாள்' என்றே நம்புகின்றாள் வள்ளி. புன்னை-மரம் பூக்கும்போதெல்லாம் ஒரு பெரிய திருவிழா! ஒரு பெரிய விருந்து!

" 'ஆண்டுகள் பறக்கின்றன. வள்ளியும் முருகனும் பெரியவர்கள் ஆகின்றனர். இருவருக்கும் திருமணம் நடந்தேறுகிறது. வள்ளியும் தன் குடிக்கு ஒரே குழவி; முருகனும் தன் குடிக்கு ஒரே குழவி. இருவர் செல்வ-மும் ஒன்றுவதும் உண்மையே! வள்ளி, முருகன் வீட்டுக்குப் போவதே மரபு. ஆனால், நப்புன்னையைவிட்டு எப்படிப் போவாள் வள்ளி? அனைவரும் இதனை உணர்-கின்றனர். முருகனைவிட இந்த உண்மையை உணர்வார் யார்? ஆதலின், முருகனே வள்ளியின் வீட்டில் வாழ வருகின்றான்.

" 'சகுந்தலை நீர் ஊற்றிச் செடிகளை வளர்த்ததனை அறிவோம். வள்ளிபோலப் பால் ஊற்றி வளர்த்ததனை

எங்கும் கேட்டதில்லே. குழந்தைகள்போலத் தான் வளர்த்தவற்றை வருத்தத்தோடும் பிரிந்து தன் கணவனில்லம் சென்ருள் சகுந்தலே. பிரியவே முடியாது எனக் கணவனேயே தன் இல்லத்திற்கு முழுமனத்தோடும் வரச் செய்த கதையினே, உலகில், நம் தமிழ் நாட்டில் அன்றிக் கேட்டவர் யார்? ஆனல், தமிழ் மங்கையின் அன்பு இதனேடு முடியவில்லே' என்று முடிக்கிருன் சாத்தன்.

## 4

"நப்புன்னேயின் சிறப்பினே வள்ளியம்மையார் கூறக் கேட்டதிலிருந்து குழந்தைகளுக்கு அந்த மரத்தின்மேல் பேரன்பு-பேருருக்கம்; பெரிய மதிப்பு! அங்குத்தான் அவர்கள் சென்று விளேயாடுகின்ருர்கள். எல்லோருக்கும், புன்னே, நிழல் கொடுப்பதுபோல, எல்லோருக்கும் உதவவேண்டும் என்பது அவர்கள் மனத்தில் படிகிறது. பூவினேயும் கொம்பினேயும் பறித்தாலும் புன்னே பொறுத்திருப்பதுபோலத் தாங்களும் பொறுமை பாராட்டவேண்டும் என்பதனேயும் அவர்கள் உணர்கிருர்கள். அவர்களும் நப்புன்னே அக்காளின் புகழைப் பாராட்டாத நாளே கிடையாது" என்று முடிக்கிருள் பாட்டி.

கேட்டதும் தன்னே மறக்கிருன் கண்ணன்; விழித்துப் பார்க்கிருன்.

"மரத்திற்கும் உயிர் இருக்கிறது என்பார்கள்; ஆனல், மரங்களேயும் உடன் பிறந்தாராக, 'வாயில் மட்டுமன்றி வாழ்க்கையிலும்' கொண்டு பாராட்டும் இந்தத் தமிழ்ப்புதுமை - தலேமுறை தலேமுறையாக உங்களிடம் வளர்ந்துவருகிற நுட்பம் — இன்றுதான் விளங்குகிறது. உலகம் முழுதினேயும் - மரங்கொடியுட்பட - உடன் பிறந்ததாகக்

கொள்ளும் அன்புள்ளம் படைத்த நப்பின்னையைக் காதலியாகப் பெற்ற நானே தவமுடையேன். வாழி நப்பின்னை! வாழி நப்புன்னை! நாளையே மணக்கின்றேன்" என்கின்றான் கண்ணன்.

" விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்ப்ப
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்என்று
அன்னை கூறினள் புன்னையது நலனே!
அம்ம! நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளர்இசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்க! நீ நல்கின்
நிறைபடு நீழல் பிறவும்ஆர் உளவே!"

—நற்றிணை 172.

[ஆயம் - தோழிக் கூட்டம்; காழ் - கொட்டை; அகைய- கப்புவிட்டுவளர; நுவ்வை-உங்கள் அக்காள்; கடுப்ப-போல; வான் கோடு - வெள்ளையான சங்கு; இலங்கு - விளங்குகிற; கொண்க-தலைவனே; நல்கின் - அருள் செய்தால்; ஆர்-அசை.]

# 3. எல்லாம் அவளுக்கே

1

அவன் வருகின்றான். உள்ளிருப்பது வெளியில் தெரியாதபடி அமைந்த தனி இடம் அது; மரம் அடர்ந்த நிழல் இடம். அவனை எதிர்பார்த்து நிற்கின்றாள் அவள். அவ்வளவு நம்பிக்கை!

எப்படி எழுந்தது இந்த நம்பிக்கை? இந்த நம்பிக்கை உள்ளத்தில் எரிந்தெழுந்த எரிமலையின் ஆரவாரத்தை யார் அறிவார்? உள்ளத்தின் உள்ளே பார்த்தால் தோன்றும் ஒரு பழங் காட்சி......

2

அவர்கள் யாரோ இருவர்! ஆனால், இயற்கையின் பொருத்தம்—கடவுளின் அருள்—அவர்கள் இருவரையும் ஒன்றுகொண்டு சேர்க்கின்றது. வியப்பினும் வியப்பு!

கண்டதும் காதல்! இருவரும் ஒருவராகின்றனர். அப்போதே உலகறிய மணக்கமுடியுமா? ஆணும் பெண்ணும் இவ்வாறு ஒன்றாக இருக்கவிடுமா உலகம்? இருவரும் பிரியவேவேண்டும். 'பிரிவு' என்பது ஒன்று இருப்பதனை அவர்கள் உணர்கின்றனர். தம் கீழே தரையே பிளப்பதுபோல அவர்களுக்குத் தோன்றுகின்றது. துன்பப் பேரிருள்! எதிர்பாராத பேரிடி!

ஆனால், அளவிலா நம்பிக்கை—அருளில் நம்பிக்கை——இயற்கையில் நம்பிக்கை—களங்கமிலா மனம்—வஞ்சமிலா நெஞ்சம்—இவையே ஆறுதல் வடிவமாக எழுகின்றன. அவன் திரும்பிப்போகிறான், ஊருக்கு, அவளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே.

அவளும் தோழிமாரோடு வீடுதிரும்புகிறாள். அவள் உள்ளமோ உடன் வரவில்லை; அவனோடு போய்விட்டது. என் செய்வாள்? புதிய உணர்ச்சி, எரிமலையாகப் பொங்குகிறது. அவளால் பொறுக்க முடியவில்லை. நடந்ததனைப் பிறர் அறியாமல், பழையபடி வாழ்வினை எவ்வாறு நடத்துவது? பழக்கம் அவளுக்கு உதவுகிறது. ஆற்றின் ஓட்டத்தோடு செல்லும் மிதவைபோலத் தன்னைச் சூழ்ந்தவர் வழியே அவளும் செல்கின்றாள். என்றாலும், இரண்டாட்டம்—போராட்டம்—மனக்கொந்தளிப்பு—இவை நின்றபாடில்லை; வளர்ந்துகொண்டே போகின்றன.

அவனைக் கண்டது எப்படி? முன்னாளைய பழக்கம் இன்றும் அவளை அவ்விடம் செல்ல உந்துகிறது. கால்கள் நடக்கின்றன. எண்ணமில்லாமலே அவனைக் கண்ட இடத்தில் வந்து அவள் நிற்கிறாள். அவனும் வருகிறான்; ஐயம் இல்லை: அவன்தான்.

உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு வைத்திருப்பவள்போல வருகிருள்: தன்னுல் செய்ய முடியாததனைச் செய்து முடித்ததுபோல அவள் பெரு மூச்சு விடுகிருள்; இல்லை! பெரு மூச்சு விட்டாற்போலத் தோன்றுகிருள். அவளால் இதற்குமேல் ஒன்றும் செய்ய முடியாது என்பது தெளிவாகிறது.

அவள் கண் தோழிமேல் விழுகிறது. அவ் வுயிர்த்தோழியே இனிச் செய்யவேண்டுவனவற்றைச் செய்ய வேண்டுமோ?

## 3

பின் அவள் என் செய்வாள்? இளையவள்; குறுமகள்—பச்சிளங் குழந்தையின் கள்ளமற்ற உள்ளமே அன்று அவள் வடிவம். செயற்கரியது செய்து முடித்தவர் மேலும் செய்வது எப்படி? மனிதப் பிறப்பால் ஆவதோ?

பெரு வெற்றி! மிக்க பெரு வெற்றி! வெற்றியின்பின் பெரு வீரர்கள் என்ன செய்கின்றனர்? ‘அப்பாடா!’ என்று பெருமூச்சு விட்டு ஓய்வு எடுத்துக்கொள்கின்றனர்; வென்ற நாட்டில், அமைதியை நாட்டி ஆட்சிக்கு வகை செய்வது அமைச்சர் கடன் என அமைச்சரை நோக்கி நிற்கின்றனர்; தம் சுமையைக் கீழிறக்கிவிட்டு அந்தச் சுமையை அவர்கள்மேல் ஏற்றிவிடுகின்றனர். அப்படி உய்த்து விடுவது—தள்ளி விடுவது—அதுதானே உலகம்! அதுதானே அரசியல்!

அவள் அறிவாள் அரசநிலை. மலை நாட்டரசன் மகள் அல்லளோ அவள்?

## 4

அவன் எண்ணம் அவ்வாறு ஓடுகிறது. பாங்கனிடம் அவன் கூறியதும் நினைவுக்கு வருகிறது......

அவளைக் கண்டபின் பழைய வழக்கப்படி அவன் தன் கலைதெரி கழகத்திற்குள் நுழைகின்றான். அங்கே தோழர்கள் கூடிப் பாடுகின்றனர்; பேசுகின்றனர்; நுண்பொருள் விரிக்கின்றனர்; ஆடுகின்றனர். அவர்களுக்கு இதுவரை உயிர் என விளங்கியவன் அவன்; இன்று சும்மா இருக்கின்றான்; ஏதோ பார்க்கின்றான். என்ன? ஒன்றும் இல்லை. குருடா? செவிடா? கல்லாகச் சமைந்துவிட்டானா? கலைப்போக்கில் கருத்தினைப் பறிகொடுத்தவர்கள்—இதனை—அவன் நிலையைக் காணவில்லை. ஆனால், அவன் உயிர்த்தோழன்—பாங்கன்—இதனைக் காண்கிறான்.

அவனைத் தோழன் தனி இடத்திற்குக் கொண்டு செல்கிறான். "ஏன் இந்த வாட்டம்—இந்த வெறித்த பார்வை? என்ன நேர்ந்தது? இதோ என்னைப் பார்! என்னிடத்திலுமா ஒளிவு மறைவு?" என்றெல்லாம் தோழன் கேட்கிறான். எல்லாம் ஒருதலைப் பேச்சே! தோழனுக்குக் கண்ணீர் கலங்குகிறது.

பெருமூச்சு விடுகிறான் அவன்; காதற் கொந்தளிப்பினை மெல்ல வெளிவிடுகிறான்:

"குணப் பெருங் குன்றே! கலங்கா நெஞ்சமா கலங்குகிறது? 'பெண்ணுக்குத் தோற்றேன்—மனதைப் பறிகொடுத்தேன்'—என்று நீயா பேசுவது? மலையமானும் உனக்கு ஒவ்வான். வெற்றியே உனது. நீயா இவ்வாறு கருத்தையும் கலையையும் உரத்தையும் உறுதியையும்

தோற்பது? அதுவும் ஒரு பெண்ணுக்கா?" என்று பாங்கன் இடித்துரைக்கின்றான்.

பேசத் தொடங்குகிறான் அவன்: "உம்—உம்! வெற்றி! வெற்றி! எல்லாம் பழம் பேச்சு. எல்லாம் வெற்று இறுமாப்பு! இன்று நான் எங்கே? தோல்வியே என் வடிவம். வருந்துகின்றேன் என்று நினைக்கிறாயா? வாழ்கின்றேன்; இன்றுதான் வாழ்கின்றேன். தோல்வியில் என்னைக் கண்டேன்; இன்பங் கண்டேன். தோற்றவன் எங்கே? எங்கே? எங்கும் இல்லை. வெற்றியடைந்தாளையே எங்கும் காண்கிறேன். அவளாகவே ஆகிவிட்டேன். அவளே நான். பெரு வெற்றி! அன்பின் வெற்றி! அதன் நுட்பம் இஃது! ஈது ஒரு கடவுட் புதுமை! கண்டேன் நான்! கண்டேன் நான்! நீ எப்படி அறிவாய்!"

"நான் எப்படி அறிவேன்? நீ தான் சொல்."

"மலையமானை நீ புகழ்வாய். 'காரிக் குதிரைக் காரி' என்பாய். 'கருங் குதிரைமேல் அக் காரி — மலையமான் காரி—ஏறிச் செல்வான்' என்பாய். 'அவ்வளவுதான்—வெற்றிப்பறை கேட்கும்' என்பாய். 'உடுக்கை போன்ற பெரும் பறையினை, அவனோடு சென்ற புலையன் ஆரவாரத்தோடும் போர்ப் பறையாகக் கொட்டுவதே வெற்றிப் பறையாக ஒலிக்கும்' என்று புகழ்வாய். 'பகையரசர்—பகையும் வேண்டுமோ?—பிறர் என்று எதிர் நின்றாலே போதும்; அவர் நாட்டின்மேல் பாய்வான் மலையமான்; கைப்பற்ற முடியாத அரிய அரண் எல்லாம் அழித்து ஒழிப்பான்' என்பாய். நண்பா, உன் மலையமான் வெற்றியினும் மிகப் பெரிய வெற்றி, அவளது வெற்றி!"

"'தோல்வியே காணாத என் மனம் தோற்றது. அறிவு, ஓர்ப்பு, நிறை, கடைப்பிடி—அறிவு, ஆராய்ச்சி, மறை பிறர் அறியாமல் ஒருநிலை நிற்கும் மன நிலை, குறிக்-கோள் தவறாது கடைப்பிடித்து நடக்கும் உள்ளத்து உறுதி—இவையே என் உள்ளக் கோட்டைகள்' என்று எண்ணி இறுமாந்திருந்தேன். அனைத்தையும் கைப்பற்றிக்-கொண்டு தகர்த்தெறிந்தாள். அறிவா? ஆராய்ச்சியா? நிறையா? உறுதியா? எல்லாம் அவளே!

"இப்படி வெற்றி பெற்றார் யார்? அவள்! அவள்! அவளே!

"என்ன அழகு! கல் நெஞ்சினையும் கரைத்து உருக்கும் அழகு! கண்டேன் அவளை! ஒரே மின்வெட்டு! இடையில் கட்டிய மணிமேகலையின் மெல் ஒலி! ஆம், வெற்றி ஒலி அஃது! எனது எல்லாம் அவளது ஆயிற்று. நானே அவ-ளில் ஒடுங்கிவிட்டேன். அவளே அடைக்கலம். நான் எங்கே? அவளே நான்."

"இந்தப் போக்கினை மாற்றச் சிரிக்கலாமா?" என்று நினைக்கிறான் பாங்கன்; சிரிக்கிறான்.

"ஹ ஹ ஹ! உன்னிடம் கற்ற கல்வியினை உன்னிடமே காட்டலாமே... ஆம், உன் கற்பனையை விளக்கவா...?"

"மலை நாட்டான் மலையமான். மலை நாட்டாள் மாதரசி. மா—குதிரை—ஏறிப் பாய்கிறான் மலையமான். மா—அழகு—ஏறி வெல்கிறாள் மாதரசி.

"புலையன் அங்கே; புல்லியது – நுண்ணியது; நுண்ணிடை இங்கே. பெருந்துடி கொட்டுகிறான் புலையன் அங்கே. இங்கோ துடி—துடி போன்ற இடை; பெருந்துடி—பெருமை வாய்ந்த இடை. பெருந்துடி கறங்குகிறது

அங்கே! பெருமை வாய்ந்த துடி போன்ற இடையில் மேகலை ஒலிக்கின்றது இங்கே! சென்றதும் வெற்றி அங்கே! கண்டதும் காதல் இங்கே! உம்-உம்-உம். விளக்கம் சரிதானே !" எனச் சிரிக்கின்றான்; சிரிப்புக் காட்டுகின்றான் பாங்கன்.

"பாங்கா, இதுவா உன் நட்பு? நீ சொல்வது சரி; ஆனால், சிரிப்பது ஏன்? புண்ணில் கோல் விடாதே!"

"இடுக்கண் வருங்கால் நகுக."

"நண்பா, இதற்கு ஒரு வழி இல்லையா ?"

உள்ளம் எல்லாம் உருகி உயிரெலாம் உருகி வரும் இந்தக் குரல் பாங்கன் மனத்தில் பாய்கிறது. பாங்கனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவன் வெறிக்க வெறிக்கப் பார்க்கிறான் ; "கலங்காதவன் கலங்குகிறான். கருத்தறிந்து செய்தல் வேண்டும்" என்று முடிவுசெய்கிறான்.

"உனக்கு யான் என்ன சொல்வது? நான் போய்ப் பார்த்து வருகிறேன்" என்று போகிறான் பாங்கன்.

## 5

இப்படிப் பாங்கனிடம் அவளது வெற்றியைப்பேசியது அவன் நினைவுக்கு வருகிறது. இவ்வளவு செயற்கருஞ்செயல் செய்தபின் அவளாக இனி என்ன செய்யக் கூடும்? அவளும் அவனும் பிறர் அறியாமல் கூடவேண்டும். அதற்கோ பிறர் கண்ணை மருட்டும் சூழ்ச்சிவேண்டும். உலகறிந்த ஓர் அறிவு வேண்டும்; தம்மோடு ஒத்துத் துடிக்கும் நெஞ்சு வேண்டும். அரசன் வென்றபின் அமைச்சரே அமைதியை நிலைநாட்டவேண்டும். அரசனுடைய கண்ணும் உயிரும் அமைச்சரே. அவளுடைய உயிரும்

கண்ணும் அவளுடைய உயிர்த்தோழியே. தோழி, உலகறிந்தவள்; அன்பு வடிவானவள். தோழியும் அவளும் ஒரே உள்ளம். தொட்டிற் பழக்கம் அது. தோழிமேல் படிகிறது அவள் நாட்டம். ''இவளே இனி வேண்டுவன செய்யக் கூடியவள்''—அவள் பார்வையின் பொருள் எல்லாம் இப்படி அவனுக்கு விளங்குகிறது. அவனும் அவளும் ஒருவர் அல்லரோ இன்று!

## 6

தோழியின் பின்செல்கின்றான் அவன்; பேசும் வாய்ப்பினை எல்லாம் பயன்படுத்திப் பேசுகிறான்; அன்பொழுகப் பேசுகிறான்; நெஞ்சுருகப் பேசுகிறான்; உள்ளத்தினைத் திறந்து வைத்ததுபோலப் பேசுகிறான். ஆனால், நேரே பேசக்கூடிய பேச்சா இது? தோழிக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை; பின்னர்ச் சிறுகச் சிறுக நிலைமை விளங்குகிறது. எனினும், உடனே அவள் உடன்பட்டுப் பேசும் பேச்சா இஃது? அவனைப் போகவிட்டுக் காண்கிறாள். துடிதுடிக்கும் அவன் மனம் இதற்குள் உடைகிறதுபோல் தோன்றுகிறது.

யாரை நோவது? தோழியை நேரே நொந்து இகழலாமா? பண்பாடாகுமா அது? தலைவியை நோவதா? எப்படித் துணியும் அவன் மனம் அவளை நொந்து பேச? இரங்குகிறான் அவளுக்காக. "என்ன செயற்கரிய செயல்! என்னை உய்யக்கொண்ட செயல்! மேலும் என் செய்வாள்?'' அவள்தான் இவளிடம் தன்னை அனுப்பியதனையும் இவ்வாறு கூறிவிடுகின்றான் அவன், தன் முணுமுணுப்பில். "மேலும் இச் சுமையைப் பொறுக்கமுடியாமையால் அவள் பார்வை என்னை இவளிடம் அனுப்பியது.

அவ்வாறு அனுப்பி ஓய்வு கொண்டு பெரு மூச்சு விடுவது-போல நிற்கின்றாள் அவள்; இவளே எல்லாம் செய்வாள் என்ற நம்பிக்கையால்—ஆனால், இவளோ......" என்று இழுத்துக்கொண்டே பேசுகிறான்—தோழி காதில் விழத்-தான் பேசுகிறான். ஆனால், பேசுவதோ நெஞ்சோடு.

## 7

உடையும் மனத்திற்கு ஓர் ஆறுதல் மருந்து தோன்றுகிறது. இது கேட்டுத் தோழியும் உதவ முந்துற முந்துவாள். அவள் அவனோடு ஒருயிராய் ஒற்றித்துப் போன நிலை, அவள் இருப்பிலேயே—அவள் பார்வையி-லேயே, ஒளிர்கிறது. அவன் கண்ட காட்சியை நினைப்-பூட்டிக்கொண்டு உரக்கத் தனக்குத்தானே நெஞ்சொடு பேசி விளக்குகிறான். உள்ளீடானது இப்படி வெளியீ-டாகிறது. அதுதானே பாட்டு. தோழிக்கும் கேட்கிறது. உணர்வினில் வல்லோர் பாடினால் உணர்வினில் வல்லோர் உள்ளவாறு உணர்வர்.

அவன் அவளொடு கூடிய நாளின் காட்சி.........

அறிவும் அன்பும் இன்பமும் ஒளிரும் பரந்த அவளது நெற்றியை மறக்க முடியுமா அவன்?

அவனொடு மகிழ்ந்தபின் தோழிமாரொடும் செல்-கின்றாள் அவள். அவள் பின்னழகு கண்டு ஈடுபடுகிறான் அவன். இந்தக் குறுமகளா அந்த ஒண்ணுதல்! அவன் கண்ட அறிவின் பிழம்பு! அன்பின் வடிவம்! இடையில் உடைமைக் கீழே தாழ உடுத்திருக்கிறாள் அவள்; திரும்-பித் திரும்பி அவனைப் பார்த்துக்கொண்டே நடக்கிறாள்; உடை தடுக்கிறது; தெற்றுகிறாள்; காலில் சிக்கிய உடை-மேல் கால் வைத்து நடக்கிறாள். பின்புற உடல் இடையின்

கீழ்ச் சிறிது வெளியாகிறது. பின்னழகு பேரழகின் ஒளியாக — அழகெலாம் ஒருமுகப்பட்டு ஒளிரும் ஒளித் திவலையாகத்—திதலையாகத் தோன்றுகிறது. ஓரிமைப் போதுதான் — உடனே உடையைத் திருத்திக்கொள்கிருள்—அதற்குள் அவ்வாறு மின்னிய அழகில் உள்ளத்தைப் பறி கொடுக்கிருன்: மறக்க முடியாத காட்சி?

அவனை அணைத்த கைகள்—அவைகளை வீசி நடக்கின்ருள். வளை ஒலி இல்லை. அகன்ற தொடி உண்டு. அதோ தெரிகின்றன! ஒலியின்றி இறுகச் செறிந்து முன் கையில் அழகு ஒளி வீசுகின்றது. அகன்ற தொடியும் இறுகத் தழுவ அன்பு வீங்கி நிற்கின்ருள். "அவள் தொடி செய்த தவமும் செய்யவில்லை நான், அப்படிச் செறிந்து நிற்க." என்று அவனது அடிமனத்தே ஒரு குமுறல் எழுகிறது. உயிர்த் தோழியின்மேல் முன்கையை வைத்து நடக்கிருள் அவள்; தோழியைப் பற்றிக்கொள்கிருள். உணர்ச்சியால் அலையுண்டவளுக்கு அத்தகைய ஊன்றுகோல் வேண்டியிருக்கிறது.

அந்தத் தோழிதான் அவள் உயிர் எனத் தோன்றுகிறது. அவனுக்கு. அத் தோழியை அப்படிக் காட்டிக்கொடுக்கின்ருளா?

## 8

அன்று கண்ட காட்சி அஃது. இன்று காணும் காட்சி சிறிது மாறி உள்ளது. இன்றும் பின்னழகு காண்கிருன்! திரும்புகிருள் அவள்; அவனை எதிர்பார்த்துத்தான் திரும்புகிருள். அதோ அறிவு ஒளிரும் அவள் நெற்றி! முன்கை வீசி நடக்கிருள். முன் கேளாத 'கலகல' ஒலி—ஆம்—வளை ஒலி இது—பழைய தொடி இல்லையா? அவை

முன் கையைக் கவ்விக்கொண்டு கிடக்கின்றன. அவற்ருேடு அழகுக்கு அழகு செய்ய—அவற்ருேடு பட்டு, உராய்ந்து, ஒலித்துப் பாட,வளைகள் புதுமையாக வந்துள்ளன. அதோ பளபளப்பான வெள்ளிய வளைகள்! அவை சங்கு வளைகள்-தாம். அவற்றின் வட்ட வடிவு ஓர் அழகு! என்ன அழகிய திரட்சி! என்ன உருட்டு! என்ன வேலைப்பாடு! இருந்தும், என்ன வன்மை! கலைஞன் கலை எல்லாம் கைத்திற-மாக வளையிற் பொலிகிறது: வளையைத்தான் அராவினுை? கருத்தைத்தான் அராவினுை? இவ்வாறு கலையாய்ப் பதிய, உயிரில்லாத பொருள் உயிர் பெற்றுப் பேசுகிறது! காதலாகக் கொஞ்சுகிறது!

" ஆனுல், பார்த்ததுபோல் இருக்கிறதே! எங்கே பார்த்தேன், இந்த வளைகளை ?"

## 9

அவன் நினைத்துப்பார்க்கிருன். கண்டதும் காதல் கொண்டு அவன், அன்றிரவெல்லாம் அவ்விடமே அலைந்து திரிந்தமை நினைவிற்கு வருகிறது. அப்போது கண்ட காட்சி............

சில குடியிருப்புக்கள்—அங்கும் இங்கும் சில தோட்ட-வீடுகள்—அவ்வளவே! அவனுடைய ஊர்போலப் பெரிய தன்று, அவள் வாழும் இடம்; சிறிய ஊர்; சில வீடுகள் சேர்ந்த சேரி. ஆனுல், என்ன இயற்கை வளம்! உழைப்புக்குப் பரிசிலா இந்த வளம்? இல்லை. தூய அற-வாழ்வுக்குப் பரிசில். அவளை அறியானு அவன்? தூய்மையே அவள் உயிர்; அறமே அவள் வடிவம். கற்பினைக் கடவுளே காக்கும் இயற்கையே இவ்வாறு போற்று கிறது.

என்ன இயற்கை விருந்து! இயற்கையும் இந்தக் குறவருமாய் இயைந்த இயைபே இயைபு! இது குன்றுகள் நிறைந்த.குறிச்சி. ஒரு பெரிய மலை தோன்றுகிறது! என்ன ஒலி அஃது? ஆம்! அருவி வீழ்கிறது. இருளில் ஒரே வெண்மை நிறமாகத் தோன்றுகிறது. அது தண்ணீரால் தழைத்ததா? மழை வளம் தரும் கற்பால் தழைத்ததா? அழகிய அருவி! தாலாட்டுப் பாடுவதுபோல ஒரே பண்ணில், தொலைவில், மெல்லப் பாடுகிறது. அதன் எதிரேதான் இருக்கிறது அந்தச் சேரி. சேரிப் புறத்தே திரிகிறான் அவன்; அங்கு ஓர் அன்புக் குடும்பம்...சிறு குடும்பம்...காண்கிறான். மனைவியும் மணாளனும் வாழும் வாழ்வு...கவலையற்ற வாழ்வு... உழாத உழவு...ஆனால்,இன்ப விளைவு...இவை தோன்றுகின்றன. இயற்கையன்னையே தன் புதல்வனுக்கும் புதல்விக்கும் ஊட்டுகிறாள். வீட்டின் முற்றத்தில் காதலர் வீற்றிருக்கின்றனர். வானமே மீன் விளக்குப் பொலியும் மேற்கட்டி; மரச்செறிவே மண்டபம்; சுற்றியும் பலா மரங்கள், செக்கச்சிவந்த வேரோடி நிற்கின்றன. கிளைதோறும் பலாப் பழங்கள் பழுத்துத் தொங்குகின்றன. பறித்து எடுத்து இவர்களுக்கு ஊட்டவேண்டும் போலும்! பழம் பழுத்து வெடிக்கிறது. சுளைகள் காதலர் கையில் விழுவதற்காகப் போட்டி இடுகின்றன; பல தோற்கின்றன; கீழே விழுந்து கிடக்கின்றன. முற்றம் நிறையப் பலாச்சுளை! கனிந்த சுளை! தேன் சொட்டும் சுளை! எங்கும் பலாவின் நறுமணம்! அருவியின் வெள்ளைக் காட்சியாம் விருந்து! அதன் தாலாட்டின் செவி விருந்து! பலாவின் சுவை விருந்து! நறுமண விருந்து! மனைவியைத் தழுவியபின் உடலும் உள்ளமும் உயிரும் குளிர்ந்துள்ளன. கணவன்

மெய்ம்மறந்து நிற்கிறான்; ஊற்றின்பம் வேறு நாடுவானா? ஐம்புலனில் அந்தப் புலனை மறந்துவிடுகிறானே?

காதலரின் காதலுக்கு எனவே இயற்கை அமைக்கும் சூழல் இஃது. அருவியின் தாலாட்டே காதலியைத் தூங்க வைக்கின்றது. காதலன் என் செய்வான்? காதலன் கைத்திறம் வல்லவன்; கலைஞன். காதல் விளையாட்டு இல்லையானால் கலை விளையாட்டு உண்டு. கவலையற்ற நிலையில், பசியற்ற நிலையில், மன எரிவற்ற நிலையில், காதல் வெள்ளமாய்ப் பொங்கிய உணர்வு, காதலி தூங்கியவுடன், கலையாக மாறிப் பிறக்கிறது. காதலனுக்குத் தூக்கம் வரவில்லை. அவன் இயற்கை விருந்தினைத் துய்க்கின்றான்; உணர்வு விருந்தாகத் துய்க்கின்றான்; காதலியின் காதலையும் அழகினையும் காண்கிறான்; தன்னை மறக்கின்றான். முன் தான் கொண்டுசேர்த்த சங்குகள் அங்கே குவிந்து கிடக்கின்றன. தானற்ற பெரு நிலையில் அவன் சில சங்குகளை எடுக்கின்றான்; கருத்தில் கண்ட அழகினைச் சங்கில் காண முயல்கின்றான்; வாளரம் கொண்டு அராவுகிறான். உயிரற்றது உயிர் பெறுகிறது; சாவாத பெருவாழ்வு பெறுகிறது; கலையொளியே கண்ணொளியாக ஒளிர்கிறது; கலைஞனோடு பேசுகிறது. அந்த அழகிய வளை கண்டு மகிழ்கிறான் கலைஞன்.

இரவில் திரியும் அவன், காண்கின்றான் இதனை "ஆ! ஆ! கலை தோன்றும் நுட்பம் கலைதெரி கழகத்தில் விளங்கவில்லை. இங்கு விளங்குகிறது. இயற்கையே வாழ்க! காதலே வாழ்க! கலையே வாழ்க!"

## 10

அந்த வளைகளே இவள் கையில் இன்று கலகல என இவனை வரவேற்றுப் பாடுகின்றன. அந்தக் கலைஞன்

—தன் நாட்டுத் தலைவன் மகளுக்கு... தூய்மைக்கு... அழகுக்கு—அன்புக்கு...அறிவுக்கு... ஆருயிர்க்கு—எதிர்-கால வாழ்வுக்குத் தந்த கலைப் பரிசில்! அவை வேறு எங்கே ஒளி பெறும்? ஒலி பெறும்? ஆம்! ஆம்; அவையே! ஐயம் இல்லை!

இந்த வழியே இவன் உள்ளத்தில் ஓர் ஊக்கம் பிறக்-கிறது. பாட்டாக, நெஞ்சுடன், பாடாமல் பாடுகிறான். உள் ஆழம் தோன்றுகிறது. தோழியும் தானே கேட்டுக்-கொண்டிருக்கிறாள். அவள் உள்ளத்திலும் அந்த ஊக்கம் பிறக்கும் அன்றோ?

இயற்கையின் ஐம்புல விருந்தும்—இல்லை நாற்புல-விருந்தும்—இந்த நாடும்—காதல் வாழ்வும்—எல்லாம் கலையாய் இவளை அழகு செய்வதனையே முடிந்த முடிபாகக் கொண்டுள்ளன! இவளும் இவனும் கூடிய கூட்டம் கடவுட் கூட்டம்; இயற்கைக் கூட்டம். எல்லாம் இதற்-கெனவே படைக்கப்பெற்றுள்ளன. படைப்பின் முடிமணி அவள். இனி ஏன் தயக்கம்?

## 11

"இதனை அவள் கண்களே, காட்டவில்லையா? என்ன அழகு! நீரில் பூத்த குவளை ஈரமற்று நிற்குமா? அந்தக் குவளையே இந்தக் கண்கள். ஆனால், மையுண்ட கண்கள் விரிந்து பரந்து விளங்குகின்றன. ஈரப் பார்வை! நிழல்-தரும் பார்வை! களங்கமற்ற பார்வை! கள்ளைக் குடித்-தவன் களிப்புப்போலத் தன்னையும் அறியாது இன்பமும் அன்பும் பொங்கும் பார்வை! என்னைக் கண்ட களிப்பில் எல்லாவற்றையும் மறந்துநிற்கும் மகிழ்ச்சிப் பார்வை!

கொளுத்தக் கொண்டு கொண்டது விடாத மடப்பம்—பெரு நம்பிக்கை—உறுதி—என் மேல் உறுதி—தோழி-மேலும் பாயும் உறுதி—இத்தலகைய நம்பிக்கையே வடிவ-மான பார்வை! பார்வையில் எவ்வளவு பொருள் ஆழம்? எவ்வளவு அன்பு? எவ்வளவு இன்பம்? எவ்வளவு நம்பிக்கை?

"நெஞ்சே! இத்தகைய நோக்கம் அன்றோ நம்மை இங்கே கொண்டுவந்துவிட்டது, என் செய்வது?" என்கிறான். "அவள் நம்பிக்கை பாழாகுமா? கண்டாய் அல்லையோ இயற்கையின் போக்கினை! அவளுக்காக அன்றோ அனைத்தும்! ஆதலின், ஆறுதல் உண்டு" என்று அவன் அடிமனத்தே ஓர் எண்ணம் பூத்துக் குலுங்குகிறது; தோழியின் அடிமனத்திலும் அத்தகைய எண்ணம் பழுத்து இனிக்கின்றது.

★ ★ ★

தம் வள்ளல் மலையமானின் வீரம்...தாம் கண்ட கலை நுட்பம்...காதலின் அழகு...அறத்தின் வீறு..இத்தனையும் தோன்ற இந்தச் சிறு கதையினைக் கபிலர் 12 வரியில் பாடியுள்ளார்:

மலையன் மா ஊர்ந்து போகிப் புலையன்
பெருந்துடி கறங்கப் பிறபுலம் புக்கு அவர்
அருங்குறும்பு எருக்கி அயர்வுயிர்த் தாஅங்கு
உய்த்தன்று மன்னே நெஞ்சே! செவ்வேர்ச்
சினைதொறும் தூங்கும் பயம் கெழுபலவின்
சுளையுடை முன்றில் மனையோள் கங்குல்
ஒலிவெள் அருவி ஒலியில் துஞ்சும்
ஊர்அல்அம் சேரிச் சீறூர் வல்லோன்
வாள் அரம் பொருத கோண் ஏர் எல்வளை
அகன்தொடி செறித்த முன்கை ஒள் நுதல்
திதலை அல்குல் குறுமகள்
குவளை உண்கண் மகிழ்மட நோக்கே.

நற்றிணை—77.

[மலையன்—மலையமான் காரி என்ற வீர வள்ளல்; மா—குதிரை; துடி—உடுக்கை; புலம்—நாடு; குறும்பு—அரண்; எருக்கி—அழித்து; அயர்வுயிர்த்தாங்கு—ஓய்ந்து அப்பாடா எனப் பெரு மூச்சு விட்டதுபோல; உய்த்தன்று—செலுத்தியது; மன்—"மிகுதி," "அதுவும் தீர்ந்தது" என்பனபோன்ற குறிப்புப் பொருள் தரும் இடைச் சொல்; சினை—கிளை; தூங்கும்— தொங்கும்; ஒலி—தழைத்த; கங்குல்—இரவு; கோண்—வளைவு-வன்மை; ஏர்—அழகு; எல்—ஒளி; உண் கண்—மை பூசிய கண்.]

*பின்னாளில் ஆழ்வார்கள் நாயன்மார்கள் பாட்டில் அகப்பாட்டே கடவுட் பாட்டாகியது வியப்போ ?*

# 4. புது மணப் பெண்

இரவெல்லாம் இவளுக்குத் தூக்கமே வரவில்லை: அவனுக்குத் தெரியாமல் இருக்கப் படுக்கையில் உறங்குவதுபோலக் கண்ணை மூடிக்கிடக்கின்றாள். கண்ணை மூடிக்கொண்டிருந்தாலும், அவன் போகப்போகும் காட்டின் கொடுமை எல்லாம் பட்டப்பகல் வெட்ட வெளிச்சமாகத் தோன்றுகிறது. அவன் வெயிலில் துடிக்கிற துடிப்பு இவளைத் தூக்கிவாரிப் போடுகிறது. இவள் நடுநடுங்குகிறாள்; அலறுகிறாள். 'உறங்குகிறாள்' என்று வெளியே சென்று, பயணத்துக்கு முன்ஏற்பாடாக மூட்டை முடிச்சுக் கட்டிக்கொண்டிருந்தவன், அலறுதல் கேட்டு உள்ளே வருகிறான்; "என்ன கண்ணே !" என்கிறான். "ஒன்றுமில்லை; கெட்ட கனவு" என்று கண்ணை மூடிக்கொண்டு இவள் மறுபக்கம் திரும்பிக்கொள்கிறாள்.

அன்றிரவு அவளுடைய உயிர்த் தோழி வந்திருக்கிறாள்; பயணத்திற்கு வேண்டுவனவற்றை உடனிருந்து

ஏற்பாடு செய்கின்றாள். தோழிக்கும் அவன் போவது வருத்தம்தான்; போவது நல்லது என்று அவள் அவனோடு கூடித் துணிந்துவிடுகிறாள். ஆதலால், தோழி முகத்தில், துன்பத்தில் ஓர் இன்பம்—இல்லை—ஓர் ஆறுதல் ஒளிர்கிறது; நிகழ் கால இருளில் எதிர்காலக் காலைச் செவ்வானம் விடிவதனைக் காண்கிறாள். தன் கண்ணான காதலியின் அலறலைக் கேட்டவன் தோழியிடம் வருகிறான். நடையில் ஒரே தயக்கம், துன்பம் நிழலிடும் முகம், சுருங்கிய நெற்றி, ஒளியிழந்து திகைப்பே ததும்பும் கண்-இவ்வாறு காண்கிறாள் தோழி அவனை. "கனவிலும் அலறுகிறாள்; அழுகிறாள்; நடுநடுங்குகிறாள்: எப்படிப் பிரிவது? நீதான் அவளைத் தேற்றவேண்டும். அவள் முழு மனத்தோடும் உடன்பட்டால் அன்றிப் போவது பெருங் கேடாக முடியும்" என்று பெருமூச்சுவிடுகிறான். "கனவு இல்லை. அவள் உறங்கவே இல்லை" என்று தோழி கூறிக்கொண்டே அவள் படுத்திருந்த அறைக்குள் நுழைகிறாள்.

'சில்' என்ற காற்றுப் பலகணி வழியாகப் படுக்கை அறைக்குள் வீசுகிறது. அங்கு எரிந்துகொண்டிருந்த விளக்குச் சிறிது சாய்ந்து, பின், தூண்டப் பெற்றதுபோல வலமாகச் சுழித்தெழுந்து ஒளிர்கிறது. வெள்ளி, கீழ்வானத்தில் முளைத்தெழுந்து முத்துக் கொத்துப் போல விளங்குவதும் பலகணி வழியே தெரிகிறது. அவள் முகத்தில் ஒளி விழுகிறது. ஆனால், நிழல், முகத்தை மறைப்பதுபோலத் தோன்றுகிறது. வெளியில் மேகம் வெள்ளியை மறைக்கிறதா? இல்லை. உள்ளத்தில் பொங்கி எழும் கவலைதான் நிழலிடுகிறது என்பது தோழிக்கு விளங்கிவிடுகிறது. தோழி, அருகில் வந்து நிற்பதனை அவள் உணர்ந்து விழித்துப்பார்க்கிறாள். "தூங்காமல்

என்ன புரண்டுபுரண்டு முகம் வீங்கிக் கிடக்கிறாய்! ஏன் இப்படி? வா! தோட்டத்தில் சிறிது உலவி வரலாம்" என்று கூறிக்கொண்டே, தோழி மூலையில் உள்ள தண்ணீர்த் தாழியில் மலர விட்டிருக்கும் குவளைப் பூவை எடுத்து அவள் கண்ணை ஒற்றித் துடைக்கிறாள்; பூவை அவள் தலையில் சூடி விடுகிறாள். மேற்கே இறங்கிக்கொண்டிருக்கும் திங்களின் நிலவொளியில் தோட்டம் அழகாகத் தோன்றுகிறது. வேப்ப மரத்தின் அடியில் வலை வைத்தது போன்ற நிழலில் இருவரும் அமர்கின்றனர்.

## 2

"அடுத்த ஊரில் உள்ள செல்வர்கள் வெருட்டி விட்டார்களாம். பாவம்! பட்டினியால் மெலிந்த சிறுவன், நீ படுத்தவுடன் இங்கே வந்தான். அவர் தம் பயணத்திற்குக் கட்டிய மூட்டையை அவிழ்த்து அவன் பசியை ஆற்றினார்" என்று பேசத் தொடங்குகிறாள் தோழி.

"எனக்குத் தெரியும். நான்தான் தூங்கவில்லையே! இல்லை என வருவார்முன்னே இல்லை என்பது, உயிர்போவதுபோலப் பெரு வருத்தமாகிறது."

"எத்தனைக் கீழ் மக்கள்—எவ்வளவு செல்வமாக வாழ்கிறார்கள்! யாருக்குப் பயன்? உங்களிடம் அத்தகைய செல்வம் கொழித்த லாகாதா? பழைய குடி! அழகிய வீடு! ஆனால், சிறு வீடு! வயிற்றுக்குக் குறைவில்லை. இருந்தாலும், பட்டினி மக்களோடு பங்கிட்டுப் பட்டினி கிடக்கத்தான் பிறந்தோமா? வள்ளன்மை உள்ளத்திற்கு, ஏற்ற வருவாய் இல்லையே! இதனால், நீங்கள் வருந்தும் வருத்தத்தை உங்கள் வாயும் அறியாது: எண்ண அலைகள்



4

வீசும் உங்கள் தலையோடு உறவு கொண்டாடும் தலையணையே அறியும்: பிறர் அறியார். ஆனால், நான் அறிவேன்."

திங்கள் மேகத்திற்குள் ஓடி மறைகிறான். நிழல் பரவுகிறது. தலைவி பெருமூச்சு விடுகின்றாள்: "ஆம், எத்தனை ஏழைகள்? எத்தனை அகதிகள்? கண்டுகண்டு என் மனமும் கல்லாய்விட்டது" என்கிறாள்.

"பொருள் இல்லார்க்கு இவ் வுலகம் இல்லை. அருள் வாழ்வுக்கும் பொருள் வேண்டும். உன் மனம்போல அவர் மனமும் புழுங்குவதால் அன்றோ, அவரும் பொருள் தேடச் செல்கின்றார்! உன்னைப் பிரிந்துபோவதே பெருவருத்தம். புண்ணில் வேல் எறிவது போல அதற்குமேல் நீயும் அவர் போவதைத் தடுப்பதுபோல நடுநடுங்கி நின்றால், அவர் மனம் என்ன ஆகும்? ஆண்மை எல்லாம், அன்பு அழுகைமுன், குழைந்து செயலற்றுநிற்கும்.

"அவர் பேச்சுக்கு மறு பேச்சு உண்டா?"

பேச்சைவிடப் பேராற்றல் படைத்தது பெண்கள் அழுகை. "நான் அழவேண்டும் என எண்ணவே இல்லை; தூங்கவே எண்ணினேன். ஆனால், இரவெல்லாம் அவர் செல்லப்போகும் காட்டின் கொடுமையே கண்ணெதிர் சுழன்றுகொண்டிருந்தது. அதனைக் கண்டபின், எப்படி என் மனம் துணியும்? என்னையும் அறியாமல் அலறினேன். தம்மைப் பேணிக்கொள்ள அறியாதவர் அவர்; 'தாய்போல நான் அவரை ஆட்டிப்படைக்கிறேன்' என்பார். தண்ணீரும் இல்லாவிடத்தில் தத்தளிப்பதா, அந்தக் குழந்தை உள்ளம்? என்ன வெப்பம்! என்ன பாறை! என்ன காடு!"

" என்ன கொடுமை கண்டாய்! காட்டுக்கு எப்போதாவது போய் இருக்கிறாயா ?"

" எல்லாம் நீ கூறியதுதான் கனவில் வந்தது.", " நான் என்ன சொன்னேன்? நீ என்ன கனவு கண்டாய்?"

" நிழலோ, மரமோ இல்லாத வெறும் வெட்ட வெளி. கண்ணுக்கு எட்டிய தொலைவு எல்லாம் வெறும் களரி நிலம்தான். நீர்ப்பசையே காணோம். நிலம் எல்லாம் இறுகிச் சுட்ட செங்கல்போலக் கெட்டியாகிப் பின் வெளியில் பிளந்துகிடக்கின்றது. பாம்பு கடித்தால் நஞ்சு தலைக்கேறுவது போலச் சூரிய வெப்பமும் 'விர்' என்று தலைக்கேறுகிறது. சூரியனும் உச்சியில் வந்து சுழலுகிறான். வெயிலின் கொடுமையால் எங்குப் பார்த்தாலும் பேய்த்தேர் அந்தரத்தில் நீரலைபோல மருட்டி ஓடுகிறது. ஒரு பெரிய யானை—பாவம்! உணவின்றி, உரம் குன்றி நிற்கிறது. சுற்றிச் சுற்றிப் பார்த்து அதன் கண் பஞ்சடைகிறது. எவ்வளவு பெரிய யானை! ஆனால், எவ்வளவு சிறிய கண்! அந்தக் கண்களும் பொலிவிழந்து ஒளி மழுங்கிக் கிடக்கின்றன. பேராற்றல் படைத்தும் பீடழிந்து வாடுகிறது: எப்படிக் குன்றிப் போய்விட்டது, இந்த யானை! களைத்துநின்ற நிலையில் தரை 'சுரீல்' என்று அண்டிக்கொள்கிறது. ஏதோ காலைப் பற்றிக்கொண்டதுபோலத் தோன்றவே சடுக்கெனக் காலைத் தூக்கித் தரையை ஓர் உதை உதைக்கிறது. எவ்வளவு பருத்த கால்! என்ன உதை! ஆ! என்ன, ஒன்றும் தோன்றவில்லை. ஒரே மேகம் மூடிக்கொண்டதுபோல ஆய்விட்டதே! இல்லை, இல்லை. இதோ தெரிகிறது. உதைத்த உதையால் வெளுப்புப் பூத்த களரி நிலத்தரை தூசா-

கிறது. புழுதி எல்லாம் உதைக்கு எதிருதைபோலக் 'குப்' பென்று மேலே கிளம்புகிறது; யானையின் மேலே மூடிக்கொள்கிறது. சிறிது நேரம் யானையே தோன்றவில்லை. சிவபெருமான் சாம்பலில் பண்டரங்கக் கூத்தாடி வெண்பொடி மூழ்கி நிற்பதுபோலப் புழுதியாடி நிற்கிறது யானை. அந்தோ! தண்ணீராட விரும்பும் யானை இவ்வாறு வெள்ளைச் சுடு நீருடி வருந்துகிறது.

"இப்படிப் பாலைவனத்தின் அருவழியில் முடிவிலாது சென்று அலைந்து வருந்தும் வருத்தம் எல்லாம் தணியும் நாள் என்றோ? நல்ல காலம்! பாறைகள் மலிந்த இடம் ஒன்று தோன்றுகின்றது. எதிர்பாராத காட்சி! கல்லில் தண்ணீர்! ஆம், அதோ சிறிய கூவல்! சிறு குழி! ஆனால், வற்றாத நீர் நிலை! ஊற்றுப் பெருகிக்கொண்டே இருக்கும் கூவல்! இதனைக் காண்கிறது யானை; தண்ணீரைத் துதிக்கையில் உறிஞ்சி உறிஞ்சி உடல்மேல் ஊற்றிக்கொள்கிறது; வருந்திய வருத்தமெல்லாம் மெல்ல மெல்லத் தணிகிறது; உடலும் தூயதாகின்றது; நீர் வேட்கையும் தணிகிறது.

"யானையும் வருந்தும் இத்தகைய காட்டில் அவர் நெடுந்தொலைவு செல்லவேண்டும் அன்றோ? எத்தனை வருத்தம்! இன்பமாக இங்கு வாழ்ந்தவர் எவ்வாறு வருந்துவார்! எத்தனை நாள்! எத்துணைத் தொலைவு! இந்தக் காடுதானே நீ கூறியது? இதில் அவர் நடந்து வருந்தி அலைவதுபோலக் கனாக் கண்டு அலறினேன்; நடுங்கினேன்! வயிறெல்லாம் பற்றி எரிகிறதே!" என்று கூறி முடிக்கின்றாள் அவள்.

## 3

" ஆமாம். நெடுந் தொலைவு சென்று வருந்தத்தான் செய்வர்; இங்கும் வருந்துவர்; அங்கும் வருந்துவர்; நீ சொல்லும் நடை வருத்தம் அன்று'' என்கிருள் தோழி.

"பின் என்ன வருத்தம்? ஐயோ! இன்னும் என்ன அச்சுறுத்தப் பேர்கிருய்?''

" அச்சம் அன்று; ஆறுதல். யானையின் வருத்தம் சொன்னபோதே நடை வருத்தம் கூறி முடியவில்லையா? மேலும் வருந்துவர் என்ருல் வேறென்று உண்டு. இந்தக் காட்சி அவருக்கு எதனை நினைப்பூட்டும்? அவர் மனமும் உன் மனமும் ஒன்ருயிற்றே! அவர் கண்ணுல் இதைப் பார். உன் பெருமையாம் வருத்தமன்ரே தோன்றும்?''

"என்ன,என் தலையி லெல்லாவற்றையும் தூக்கிவாரிப் போடுகிருய்? என்ன காட்சி? ஆம், விளங்குகிறது. உலகம் ஒரு பாலைவனம். அன்பு என்ற நீரும் இல்லை: பிரிவு என்ற நிழலும் இல்லை. பயனற்ற களர்நிலம் போன்ற மனம் படைத்த மக்களே வெம்பி வெம்பி மனம் இறுகிப் பிளவுபட்டுக் கிடக்கின்றனர். யானை போன்ற பேராற்றல் படைத்தவர்கள், அருள் உள்ளத்தால், கலைஞராய் வாழ உலகிற்கு உழைக்கின்றனர்; கொடுமை வெயிலில் புழுங்கி, மெலிந்து, களர் மனத்தைத் திருத்தப் பார்க்கின்றனர். வறண்ட உள்ளம் குப்பையும் கூளமுமாய்ப் புழுதியாகிறது. அந்த உணர்ச்சிப் புழுதியில் இவர்களும் முழுகி மாசுபட்டவர் போல மாறிநின்று வாடவேண்டுவதுதான்! இவர்கள் வருத்தம் தீரத் துணை ஏது? அன்பு ஏது? எங்குப் பார்த்தாலும் வறண்ட பாலைவனம்.

ஆனால், எதிர்பாராத கற்பாறையாம் வறுமை வாழ்வில், நல்ல குடியில், அன்புக் கூவல் சுரக்கிறது. வற்றாத அன்பு. அங்குச் சென்று வருத்தம் எல்லாம் நீங்க, இன்பம் அடைகின்றனர் அப் பெரியோர்; மேலும் உலகினைத் திருத்தச் செல்கின்றனர். இவ்வாறு காண்பார் அவர்."

"இப்போது தெரிகிறதா வருத்தம்? நம் குடும்பம் இத்தகைய சிறு கூவல் அன்றோ? இது வற்றாத வளம் படைத்துச் செல்வத்தில் சிறந்திருந்தால் எப்படி இருக்கும்! இப்படி எண்ணி வருந்துவார் இங்கிருந்தும் இந்த வருத்தத்தில்தானே மாழ்குகிறார்? இங்கிருந்து வருந்தினால் வருத்தத்திற்கு முடிவு இல்லை; அங்கு வருந்தினால் விரைவில் பொருள் தேடி வர முடியும்."

"ஆனால், கொடிய காடாயிற்றே!"

"என்ன கொடுமை! யானை போன்றவர் புழுங்கி வருத்தம் தீரும் வழிதானே! கூவல் இல்லையா, நடை வருத்தம் தீர! யானை வருத்தம் போமானால் இவர் வருத்தம் போகாதா? வருத்தம் தணியும் காடுதானே அஃது? அருவழி வருத்தம் தோன்றாது; அறவழி வருத்தமே தோன்றும். அஃது உன் வருத்தம். அது தீரப் பணம் வேண்டும். அதனை விரைந்து சென்று, மிக விரைந்து முயன்று கொண்டுவருவர். யானை போன்றார் துணை உண்டு. கல்லில் நீர்போல எதிர் பாராதபடி புதையல்போலச் செல்வம் எதிர்கிடக்கும். ஆதலின், அவர் வருத்தம் விளங்கவில்லையா? இதற்கு வருந்தலாமா?"

"என் செய்வேன்? மனம் கேட்கவில்லையே!"

"நீ அறிவுடையவள் ஆயிற்றே! எதனையும் பொறுப்பாயே! உலகம் வாழவேண்டும் என்று

இருவரும் வருந்துகின்றீர்கள்; பட்டினி கிடக்கும் மக்களைக் கண்டு பரிகின்றீர்கள். இங்கு உலகம் இவ்வாறு வாடுகிறது. இந்த உன் வருத்தத்திற்கு அவரும் வருந்துகிறார். அவர் வருத்தத்திற்கு நீயும் வருந்துகிறாய். இதுதான் தவம். உலகிற்கு எனத் தவம் கிடக்கின்றீர்கள். உன் வாட்டம் கண்டு அவர் தவம் கிடக்கின்றார்: அவர் தவம் கண்டு நீ தவம் கிடக்கின்றாய். 'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு.' மேலும் பிறருக்கு உதவவேண்டும்—வேளாண்மை செய்ய வேண்டும்—என்ற வேள்வி நாட்டமாம் பரிவும், அருளுள்ளமும் உங்களிடம் உண்டு. தவம் என்றால் துறவிகள்தாம் செய்வர் என்று பலர் கருதுகின்றனர். துறவிகளுக்கு உணவளிப்பதற்காக இல்லறத்தார் துறவினை மறந்தனரா என்று கேட்கின்றனர் சிலர். 'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர்கள் தவம்' என்பது முழு உண்மை அன்று: வேண்டுமானால் அரை உண்மை எனலாம். பெரியோர்களுக்கென எப்போதும் தவம் செய்பவரே இல்லறத்தார். 'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி நிரந்தரமாம் மற்றையவர்கள் தவம்' —இதுவே முழு உண்மை. உங்கள் வாழ்வில் நீங்கள் காணவில்லையா?''

"வருத்தம் எல்லாம் தவமா?"

"பின் என்ன? வீண் வருத்தம் வெறும் வருத்தம். பிறர்க்கென வருந்துவது தவம். உனக்காகத்தானே இத்தனையும்? வேறொரு பெண்ணை மணக்கவா தவம் கிடந்து வருந்துகிறார்...ஆம், ஆம். மற்றொரு பெண்ணை மணக்கத்தான் இந்தத் தவம் எல்லாம். நல்ல பெண்ணை

மணக்கவேண்டுமானால் தவம் செய்ய வேண்டாவா ?" என்று தோழி சிரிக்கின்றாள்.

"என்ன ! மற்றொரு பெண்ணை அவர் மணப்பதா ?"

"பொறுமையா ? ஆனால், நீதானே மகிழ்ச்சியோடு பாடினாய்."

"நான் பாடினேனா ? என்ன இது ? இடிமேல் இடி."

"இடிமேல் இடி இல்லை. விடுகதைக்குள் விடுகதை. நீ விடுவித்த விடுகதைதானே."

"நான் எப்போது விடுவித்தேன். என் மனத்தினைக் கலக்காதே."

"கலக்கம் ஏன் ? களிப்புத்தான் ! ஒரே பெண்தான்: ஆனால், சூழ்நிலைக்கேற்ப வேறு வேறு பெண்ணாகலாம்: 'நாய் வயிற்றிற் கரு நாயாம்: மனித வயிற்றிற் கரு மனிதனும்' என்பது நீ கூறும் உவமை அன்றோ ?"

"நீ கூறுவது ஒன்றும் விளங்கவில்லையே !"

"அவருடைய ஆசிரியர் வந்ததனைப் பற்றிப் புகழ் வாயே! அந்த நிகழ்ச்சியை நினைத்துப் பார் !"

## 4

கோடைக்காலம். ஒரே வெயில் கொளுத்துகிறது. தோட்டத்திலும் புழுக்கம். கதிரவன் மலையில் விழுகிறான். மஞ்சள் வெயில்...பின் செவ்வானம்...மாலை மயக்கம்... இருட்டு...கூடு திரும்பும் குருவிகளின் இசையரங்கு... தென்றல் விருந்து...அமைதி...இவ்வாறு உலகம் மாறி-மாறித் தோன்றுகிறது. அவன், உடல் குளிரப் பொய்கை-யில் ஆடி வரப்போகிறான். வீட்டின் முற்றத்தே முல்லை-

கள் இங்கொன்றும் அங்கொன்றும் மலர்கின்றன. இதோ எல்லாம் பூத்துச் சிரித்து மகிழ்கின்றன. வான்மீன்களும் முல்லைப் பூப்போல இங்கொன்றும் அங்கொன்றும் பூப்பது-போலத் தோன்றுகின்றன. இருட்டியதும் வானமெல்லாம் வான்மீன்கள் எப்படியோ நிறைந்துவிட்டன. இந்த இன்பப் பொறிகள் தலைவியைக் கண்டு பழைய தோழி போலக் கண் சிமிட்டி மின்னுகின்றன. காலம் தாழ்த்து வந்த காக்கை கரைந்துகொண்டே மரத்தில் போய்த் தங்குகிறது. "என்ன, காகம் இந்த நேரத்தில் கரை-கின்றது! விருந்து வருகிறதா என்ன?" என்று தலைவி தனக்குள் பேசிக்கொள்கிறாள்; வீட்டின் வெளியில் விளக்-கேற்றி முல்லைப் பூவைத் தூவி வழிபடுகிறாள்.

ஏதோ காலடி கேட்கிறது. அவள் திரும்பிப் பார்க்-கிறாள், ஒருவர் வருகிறார். அறிவுடன் அன்பும் கலந்து ஒளி-ரும் கண்கள்...அறிவு உழுத நெற்றி...காலத்தோடு அநு-பவமும் சேர்ந்து திரைத்த கன்னங்கள்...உள்ளம் தூயதா-னதுபோல நரை பழுத்த தாடி...உறுதியை வற்புறுத்தும் மோவாய்க்கட்டை...வழி நடந்த களைப்பு...முதுமையின் இளைப்பு...பயணத்தில் புழுதி படிந்த வெள்ளாடை...இவ்-வாறு ஒருவர் காட்சி யளிக்கிறார். 'தலைவர் என்னிடம் பலமுறை பேசிய ஆசிரியர்...பாவாணர்...முதுபேரறிஞர்... இவர்தாம்' என இவளுக்குத் தோன்றுகிறது. அவருடைய பாடல்கள் அறிவுரைகள் என்று தலைவன் கூறியவை எல்லாம் அவர் வடிவத்தில் இவள் காண்கின்றாள்; அவை காதில் ஒலிக்கின்றன. வழிபடச் சென்ற கடவுள் நேரே வந்தாற் போன்ற மகிழ்ச்சியில் இவள் முழுகுகிறாள். இதற்-குள்பெரியவரும் வாயிலை அடைகிறார்; "அம்மா, ஊர்கிழார் இருக்கின்றாரா?" எனக் கேட்கின்றார். அன்பும், இன்ப-

றும், அறிவும், பரிவும் குழைந்த குரல், இவள் மனத்தினைக் குழைவிக்கிறது. தலைவனுடைய ஆசிரியப் பெருந்தகையாம் அன்றோ? ''வாரா விருந்தன்றோ நீங்கள்? பொருள் கொடுத்து இசை வளர்ப்பார் பலர். கலைப் பொருளை... அறிவுப் பொருளை......உண்மையை......அன்பை...வாரி வழங்கி மக்களை நல்வழிப்படுத்தும் நல்லிசைப் புலவருக்கு ஒப்பு உண்டோ? நல்லிசை விருந்து நாளும் வருமோ? எங்கள் தவமே தவம்!'' என்று அடி வீழ்ந்து அவள் வணங்குகின்றாள்.

''அம்மா, என்னை நீ எப்படி அறிவாய்? வியப்பாக இருக்கிறதே!''

''வியப்பொன்றும் இல்லை; என் கணவர் பலமுறை தங்களைப் பற்றிப் பேசியுள்ளார்; தங்கள் பாடல்களைப் பாடுவார். எனக்கும் பல பாடல்கள் மனப்பாடம் ஆகி உள்ளன. அவர் உடல் வடிவைத் திருத்தி யமைத்து வளர்த்த தாய் தந்தையரைக் காணவில்லை. நான், அவர் உயிர் வடிவை, உள்ள வடிவை, குணப் பண்பைத் திருத்தி-யமைத்த உங்களைக் காணவேனும் கொடுத்து வைத்தேனே!''

''நல்லது. அவருக்கு ஏற்ற மனைவி. அவர் எங்கே.''

''உங்கள் அறிவுப் பிள்ளை குளிக்கப் போயிருக்கிறார்; இதோ வந்துவிடுவார். வந்த களைப்புத் தீரத் தோட்டத்து ஓடையில் குளிக்கலாம்; புத்தாடையும் உடுத்துக்கொள்ளுங்கள்: விரைவில் உணவும் கொள்ளலாம்; இதற்குள் அவரும் வந்துவிடுவார்.''

''நீயே பெண்; உன் அன்பே அன்பு; ஊர்கிழார் தவம் செய்தவர். அவர் வந்தபின் நீராடுகிறேன். நீ சென்று வீட்டு வேலையைப் பார்க்கலாம்.''

"ஒரு வேலையும் இல்லை. சமையல் வேலைதான்—சிறிது செய்ய வேண்டும்."

"மனைவி கணவனைப் பேணுவதில் தாயுமாவாள் என்பதனை உன்னிடம் உணர்கிறேன். எனக்குப் பெருவிருந்தொன்றும் அமைக்க வேண்டா. நீ உன் வேலையைப் பாரம்மா! நான் வான் மீன்களைப் பார்த்துக்கொண்டே சிறிது ஓய்வாக இருக்கிறேன்."

உள்ளே போகிறாள். பாலும் பழமும் உண்பதாகக் கணவனும் மனைவியும் முடிவு செய்திருந்தனர். வந்தவர்க்கு என்ன உணவு அமைப்பது? சமையல் செய்யும் ஆளும் இல்லை. உணவுப் பொருள்களை எங்குப் போய் வாங்கி-வருவது! வந்தவரோ, களைத்திருக்கிறார். காலம் தாழ்த்த-வும் கூடாது. கடம்பமான் இறைச்சி இருந்தது நினைவிற்கு வருகிறது. புறக்கடையில் உலர்ந்த கிளைகளை ஒடித்து வருகிறாள் அவள். சக்கிமுக்கிக்கல் கொண்டு பஞ்சில் தீ மூட்டி அடுப்பைப் பற்ற வைக்கின்றாள். முன்பின் செய்-தறியாதவள் என்று தெரிகிறது, கை தேய்கிறது. வெள்-ளைக் கொழுப்புப் படிந்த அந்த ஊனிறைச்சியைப் பதம் செய்து நெய்யிட்டு அவள் சமைக்கிறாள். சுவை ஊட்டு-கின்றாள்; உணவு ஒருவகையாக அமைகிறது. வேலை செய்-தறியா மெல்லிய கைகள்...ஒளி பெற்ற நெற்றி...மெல்லிய-லுக்கேற்ற உடல் மென்மை...இவை எல்லாம் தோன்ற அவள் வெளிவருகிறாள். புகை படிந்த நெற்றியில் முத்துப் பூத்தாற்போல வியர்வை அரும்பி நிறைந்துள்ளது. விரைந்து செய்த அலுப்பில் பெருமூச்சு விட்டுக்கொண்டு குறுகுறு நடந்துவருகின்றாள்.

தலைவன் இதற்குள் வந்துவிடுகிறான்; தன் ஆசிரி-யரைக் காண்கிறான். "வாரா விருந்தோ வந்துள்ளது.

ஆனால், என்ன உணவு தருவது? யார் உணவு அமைப்பார்? பொருள்களும் கையில் இல்லை. எப்படி அவளிடம் கூறுவது?" வாடுகிறான். மனம் அலைகிறது. "வேலை செய்தறியா அவள் என்ன செய்வாள்? நான் சென்று ஏதேனும் உணவமைக்கலாமா?"—இவ்வாறு எண்ணிக்கொண்டே அடுப்பங்கரைக்கு வருகிறான் தலைவன். அடுப்பின் ஒளியில் தலைவி யணிந்திருந்த மணியாரம் பளிச்சென்று ஒளிர்கிறது: இவன் காணாத காட்சி. எதிரே குறுகுறு நடந்து, பெருமூச்சு விட்டு, நெற்றி வேர்வை நிலத்தில்விழ வருகிறாள் தலைவி. இரைத்துக் கொண்டு வருவது கண்டு அவன் நடுங்குகிறான். இடிமேல் இடிபோல் தோன்றுகிறது. "கண்ணே, உடம்புக்கு என்ன?" என்று நைகிறான்.

"உடம்புக்கா! எனக்கு என்ன? தங்கள் ஆசிரியர் வந்திருக்கிறாரே, பார்த்தீர்களா? அவருக்குக் கடம்பமான் இறைச்சியை நெய்யிலிட்டுச் சோறு சமைத்து வைத்துவிட்டு வருகிறேன். பாலும் பழமும் உண்டு. போதுமல்லவா? பாவம் அவர் பட்டினிபோலும்! 'விரைந்து உண்ணலாம்; குளிக்கலாம்' என்று புத்தாடை கொண்டுவைத்தேன். நீங்கள் வரவேண்டும் என்றார்."

"என்ன! எப்படி என் ஆசிரியர் என்று உணர்ந்தாய்? அதுதான் அவர் உன்னைப் புகழ்கிறார்! இதற்குள்ளாகவா சமையலாய்விட்டது? நீயா செய்தாய்? என்ன வியர்வை? என்ன இரைப்பு? புகையில் புழுங்கினாயா? அதோ கரி."

"கரியா? அடுப்பங்கரையில் கரியிராதா? புகையிராதா?" "ஆனால், புகையில் புழுங்குவானேன்?" "என்ன அழகு! ஆம், புகையே பேர் அழகு! என்ன அழகிய

கபில நிறம்? அதுவும் அடுப்பொளியில் ஒளிர்வது மற்றும் ஓர் அழகு! என்ன வளைவு வளைவாகப் பரவி மேலெழுந்து செல்கின்றது? இதுவரை நான் காணாத அழகிய காட்சி!"

"என்ன, ஆசிரியர்போலப் பாடத் தொடங்கிவிட்டாயா?"

"இல்லை. எங்கே மதம் கெடுகின்றதோ என்று உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தேன். நல்ல காலமாக கடம்ப மானிறைச்சியும் நெய்யும் நறுமணம் வீசின. பக்கத்திலிருந்த உலர்ந்த கிளைகள் விறகாக வேள்விசெய்தன. சிறிது ஈர விறகும் கிடந்து புகையின் அழகினைக் காணச்செய்தது!"

"ஆம்! கண்ணும் சிவந்து உள்ளன. நம்பவே முடியவில்லையே! வாராவிருந்து வந்துளதே என்று எண்ணிய ஏக்கத்தை எல்லாம் இன்ப வெள்ளமாக மாற்றிவிட்டாயே! உடல் எல்லாம் வாடியுள்ளாய்!"

"உள்ளமெலாம் தளிர்த்துள்ளேன்...வாட்டம் என்ன? விருந்தினை எண்ணியபோது, அவர் பாடலே நினைவு வந்தது. அவற்றைப் பாடிக்கொண்டே சமையல் செய்தேன். வாட்டமே தெரியவில்லை. எனக்கு ஒரு பெரு மகிழ்ச்சி. பெரு மக்கள் வாழ, அவர் வழி நின்று உலகிற்கு உழைப்பதன்றோ மக்களாய்ப் பிறந்ததன் பயன்? இன்றுபோல என்றும் நம் வாழ்வு இவ்வளவு பயனுடையதாய், இன்பமுடையதாய்க் கழியுமோ? என்ன பார்க்கிறீர்கள்? கரி பூசிக்கொண்டு அலங்கோலமாக இருக்கிறேனென்றோ?"

"இல்லை, கண்ணே! இல்லை! என்றும் இல்லாத அழகு, இன்று உன் முகத்தில் ஒளிர்கிறது. அந்த ஒளியில், உன் ஒற்றையாரமும் கிளர்ந்து மின்னிப் பொலிகிறது. அன்னமும் தோற்கும் நடையை இன்றே கண்டேன்."

"என்னைப் பாடுவதாகச் சொல்லி, நீங்களே பாடத் தொடங்கிவிட்டீர்களா?"

"பாட்டாவது! கற்பனையா இது? முழுக்க முழுக்க உண்மை. உன் உடல் அழகினையே.இதுவரையில் கண்டேன்:அன்பாகக் கனிந்த உடலம் என அறிவேன்.என்னையே உயிராகக் கொண்டு வாழ்கிறாய் என அறிவேன். ஆம்! வெற்றுடலையே கண்டு களித்துக் கண்மூடிநின்றேன். இன்றுதான் என் கண் திறந்தது. உன் உயிர் அழகினைக் காண்கிறேன்; அறமும் அருளும் கலந்த உள்ளத் தெளிவினைக் காண்கிறேன். பெருமக்கள் வழிநின்று ஒழுகும் உன் கடவுள் வாழ்வினைக் காண்கிறேன். இவ் வாழ்வின் பெருமையை நீ உன் வாயாரப் புகழ, என் காதாரக் கருத்தாரக் கேட்கிறேன். இந்தப் பெருமை எல்லாம், என் ஆசிரியர் உன்னைக் கண்டவுடனே அறிந்துகொண்டார். அவர் வருகையில் எனக்கு ஒரு புதுப் பெண்ணைப் பெற்றெடுத்துத் தந்துள்ளார். என்னே என் அறியாமை இருந்தபடி! நீ ஒரு புது மணமகள். வெற்றுடலைக் கண்டு களித்து, அதன் மணவாளனாக இத்தனை நாள் அமைந்தேன். மாணிக்கக் கல் கையில் இருந்தும் அதனைக் கூழாங்கல் எனக்.கொண்டு, அதனால் புது அடுப்பு மேடை தேய்த்த கதைதான் என் கதை. நீயே மாணிக்கம்; அதனை அறிந்த இன்றே நல்ல நாள்! ஆமாம்! நீ ஒரு புது மணப் பெண். புதுமணம் செய்துகொள்ள வேண்டும். உன் குறு நடைக் கூட்டம் வேண்டும். நானும் புது மணமகனாக

உன்னை உயிரறிய, உடலறிய, உள்ளம் அறிய, உள்ளத் திறைவ னறிய, என் ஆசிரியர் அறிய மணக்கும் வாய்ப்பும் வருகிறதே..."

"என்ன, ஏதேதோ பேசுகின்றீர்கள்!" என நாணித் தலை குனிகின்றாள்.

"உண்மையே பேசுகின்றேன். தனக்கென வாழாப் பிறர்க் குரியாளராக நாமும் நம் குடும்பமும் வாழவேண்டும். ஆனால், நம் வாழ்வு இத்தகைய சிறு வாழ்வாக அமைந்து பயனில்லை. வருவார்க்கு அடையாப் பெருங் கதவம் படைத்த வீட்டில், வருவார் உண்டு எஞ்சியதனை, உண்பதே அமுதம் என்பது உனது உட்கோள். பஞ்சம் மிக்க நாட்டில் பட்டினி வாட்டுகின்றது. அதனைக் கண்டும் உணராது போனேன். அவ் வாழ்வு வாழச் செல்வம் வேண்டும். பஞ்சம் மிக்க நாட்டில் பொருள் ஏது? பிற நாடு சென்றே தேடுதல் வேண்டும். அருமை அன்று! உண்மையும் உறுதியும் உண்டானால், அப் பொருள் வருமுன், உன் மனம் குளிர உன்னைப் புது மணமகளாக மணப்பது எங்கே? ஆமாம். பொருள் தேடி வருதல் வேண்டும். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை. அருள் வாழ்வுக்கும் பொருள் வேண்டும். இதனை உணராது போனேன்! புது மணப்பெண்ணுக்குப் பரியம் கொடுக்கத்தானே வேண்டும்! விருந்து வந்ததன் பயன் கண்டாயா?"

## 5

தோழி பேசுகிறாள்:

"'இவ்வாறு நிகழ்ந்தது' என நீ கூறவில்லையா'? ஆம்! அந்தப் புதுப்பெண்ணை மணக்க வேண்டாவா? உடலாகக் கண்ட பெண்ணை, உயிராக, அருளாக, அன்பாக, அழகாக, அறிவாகப் பாட்டாகக் கண்டதும் வேறு பெண்-

தானே? சாவாப் பெண் அன்றோ? இந்தப் புதுப்பெண்ணை அன்றோ தலைவர் காதலிக்கின்றார்! மணக்க விரும்பினால், அந்த வேட்கை தணிய வேண்டுமன்றோ? சாவாப் பெண் வேண்டும் என்றால் தவம்தான் செய்யவேண்டும். அந்தத் தவம்தான் செய்யப் போகிறார். அதனை வருத்தம் என்று வருந்துவது ஏன்?''

"ஆம்! அவரது உயரிய எண்ணம் அஃது! ஆசிரியரும் அன்று வாழ்த்தினார்; செல்வம் வரும் நாளும் குறிப்பிட்டார். இன்னும் சில நாட்களே உண்டு. அவர் கூறியது பொய்யாது: அவர் முக்காலமும் அறிந்த அறிஞர் அல்லரா! அதோ பல்லியும் நல்ல செய்தி சொல்கிறது.''

"இந்தக் காளை சிறுவீடு மேயப் போனது மிக விரைந்து மேய்ந்து திரும்பியது'' என்று அயல்வீட்டு ஆயர் மகள் பேசிக்கொள்வது இவர்கள் காதில் விழுகிறது.

"கேட்டாயா இந்த நற் சொல்லை? விரைவில் நம் காளையாய தலைவரும் திரும்புவார். நீ அன்றோ நல்ல பெண்! பொழுது விடிவதற்கு முன்னரே தலைவர் புறப்பட்டு வெளிநாடு சென்று பொருளீட்டி வந்து, உலகெலாம் வாழ உன்னுடன் என்றென்றும் கூடி வாழ்வாராக!"

பல்லி முன்போல் 'டக் டக்' என்கிறது. "ஆமாம்! நல்ல சகுனம்! தலைவரை மலர்ந்த முகத்துடன் வழியனுப்பு'' என்கிறாள் தோழி.

கோழி கூவுகிறது. தலைவன் புறப்படுகிறான். தலைவியைத் தழுவி முத்தமிடுகிறான். "வாழ்க!'' என்று பாடிக்கொண்டே தலைவன் வழிமேல் விழி வைத்துத் தலைவியைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே போகிறான். தலைவிக்கு

உறுதி கூறுவதுபோலப் பல்லி மற்ளுெரு முறை 'டக் டக்' எனப் பேசுகிறது. "வாழ்க!" என்று உள்ளுக்குள்ளே பாடுகிருள் தலைவி.

## 6

இந்தச் சிறு கதையைப் பத்து வரியில் பாடுகிருர் இளந் தேவனுர் என்ற சங்கப் புலவர்:

பைங்கண் யானைப் பருஉத்தாள் உதைத்த
வெண்புறக் களரி விடுநீறு ஆடிச்
சுரன்முதல் வருந்திய வருத்தம் பைபயப்
பாஅர் மலிசிறு கூவலில் தணியும்
நெடுஞ்சேண் சென்று வருந்துவர் மாதோ
எல்லி வந்த நல்லிசை விருந்திற்குக்
கிளரிழை அரிவை நெய்துழந்து அட்ட
விளர்ஊன் அம்புகை எறிந்த நெற்றிச்
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே.

—நற்றிணை 41.

[பருஉ—பருத்த; நீறு—புழுதி; சுரன் முதல்—பாலைவன வழியில்; பைபய—மெல்ல; பாஅர்—பாறை; சேண்—தூரம்; எல்லி—இரவு; கிளரிழை—பிரகாசிக்கும் ஆபரணம்; அரிவை—பெண்; விளர்—வெள்ளிய கொழுப்பு].

# 5. தினசரியா பாட்டு?

1

சங்கத் தமிழின் சிறப்பியல்பு அகம் என்றும், புறம் என்றும் பாக்களைப் பகுத்துப் பேசுவதுதான். "அகம் என்றால் காதல்; புறம் என்றால் வீரம்" என எளிதாகப் பலர் விளக்கிவிடுகின்றனர். புறப்பாடல்களில் காதற்பாடல்களும் உண்டு: அகத்தில் போர்க்களமும் வரும். முல்லைப் பாட்டுப் பாசறையைப் பாடவில்லையா? பின் என்னவோ வேற்றுமை? குறித்த ஒரு தலைவன் பெயர் அகப்பாட்டில் வருதல் ஆகாது. பாண்டியன், வேப்பமாலை என்ற குறிப்புக்கள்கூட வருதலாகாது என்பர் நச்சினார்க்கினியர். எனவே, ஒரு காலத்து வாழும் மக்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் வரும் பாடலாகாமல், எக்காலத்துக்கும் பொருந்த அகப்பாடல்கள் அமைதல் வேண்டும் என்பதாயிற்று. ஆனால், பாடல்கள் எல்லாம் ஒருகாலத்தைப் பற்றி எழுந்தாலும், காலத்தையும் கடந்த

உண்மையை உணர்ச்சி நிலையில் உணர்த்தி, நம் மனத்தை நீர்ப் பிண்டமாய் உருக்கி, அந்த உயர்ந்த நிலையே இறுகி-நிற்குமாறு செய்வன அல்லவோ? புறப்பாடல்களும் அகப்பாடல்களும் அத்தகையனவே ஆம். புறநானூற்றுப்-பாடல்கள் அன்றும் உண்மை, இன்றும் உண்மை, என்றும் உண்மை. தோற்றத்தைக் கண்டு களித்து, அதன் வழியே தோற்றத்தின் அடிப்படையை வெளி-யிடுவது ஒருமுறை. மாறிமாறி வரும் தோற்றத்தினை அறவே விட்டொழித்து, அடிப்படையான உள்ளூடு நிலையை விளக்கிப் பகருவது மற்றொரு முறை. தோற்றம், புறத்தோற்றம்; ஆதலின், புறப்பாடலாய் வளரும். உள்ளூடு நிலையோ, மனநிலை என்றும் உயிர்நிலை என்றும், உயிர்க்குயிராம் கடவுள் நிலை என்றும் கூறத்-தக்க அகநிலையின் ஆழமாம் அகப்பாடலாய் வேரூன்றி நிலக்கும். தமிழன் கண்ட கடவுள் நிலை என்ன? "அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின் அன்பே சிவமாய் அமர்ந்-திருந்தாரே" என்பதன்றோ தமிழ்த் திருமூலர் கண்ட திருமந்திரம்! ஆதலின், அகப்பாடல் அன்புப் பாடலாக அமைகிறது. வெறுங்காமமோ காதலோ அன்று அகப்-பாடல்கள் பாடுவது. தோற்றத்தின் அடிப்படையான உண்மை நிலையாம் அகத்தினைக் கடவுள் வடிவாம் அன்பின் பலவேறு நிலைகளாகக் கண்டு அகநானூறு முதலியன பாடுகின்றன. இவ்வாறு அகநிலையான அடிப்படையினைப் பாடுவதால் அன்றோ, தேவாரமும் திருக்கோவையாரும் ஆழ்வார்கள் அருளிச் செயலமுதமும் இவ் வகப்பாடல்-களைக் கடவுட் பாடலாகக் கொண்டு தம் ஆன்ம அனுப-வத்தினை வெளியிடுகின்றன! எனவே, புறம், அகம் என்பனவற்றை Phenomenon and Noumenon என்ற

மேனாட்டுச் சொற்களுக்கு,முறையே நேர் நேர் ஆன தமிழ்ச் சொற்கள் என்று முடிவு கட்டலாம். அகப்பாட்டு என்பது: **The Poetry of the Noumenon;** புறப்பாட்டு என்பது: **The Poetry of the Phenomenon.**

## 2

சங்கப் புலவர்கள் அரசியலின் உயிர் நிலையாக நின்று அரசரைத் திருத்தி அவர்களது அருட்டிருப்பேர் ஆசிரியர்களாக உள்ளூற விளங்கினர். கண்ணகி என்ற காதற்கிழத்தியைப் பேகன் என்ற வள்ளல் துறந்ததற்கு இரங்கி, இருவரையும் ஒன்றுபடுத்தி அன்பு நெறியிற் செலுத்த, எத்தனைப் புலவர் பெருமக்கள் பாடியுள்ளனர்! இத்தகையோர்,தம் நாளைய வரலாற்றுக் குறிப்புக்களைத் தம் பாடல்களில் எப்படி விட்டொழிக்கமுடியும்? அன்னோர்புறவாழ்வை அன்றே அக வாழ்வாக உயர்த்த முயன்றனர்! வரலாற்றுக் குறிப்பு என்றால் என்ன? வரலாறு, இறந்த காலச்சிறப்பைத் தொடர்புபடுத்தி, உள் பொருள் விளக்கி, ஒற்றுமை காட்டும் ஒரு கலையாம். இறந்த காலத்தில் திளைத்துக் குளிப்பது மட்டும் அன்று இதன் நோக்கம். இந்த ஒற்றுமைக் காட்சியின் வழியே நிகழ் காலத்தினையும் விளக்கி,எதிர்காலக் காட்சியையும் நம் மனக்கண் ணெதிரே எழச்செய்து, அதனை நனவிலும் கண்டு அறிய வழி செய்வதும் அக் கலையின் நோக்கமாம். வரலாறு,பல செய்திகளின் கோவையே ஆம். ஆனால், எல்லாச் செய்திகளும் நிகழ்ச்சிகளும் வரலாற்றுக் குறிப்புக்கள் ஆதலில்லை. ஊர்வழியே செல்கிறோம்; பல பல வீடுகள் கண்ணைக் கவருகின்றன. பின்னர், மலைமேல் ஏறுகின்றோம்; ஊர் முழுவதனையும் ஒற்றுமைக் காட்சியாகக் காண்கிறோம்; கண்டு-

கவித்த வீடுகள் தோன்றுமல் குறுகி அங்கே ஓடி ஒளி-கின்றன; அதுபோலவே வரலாற்று மலைமேல் ஏறி ஒற்றுமைக் காட்சியாகக் காணும்போது, நாம் கண்டறிந்த பல நிகழ்ச்சிகள் பொருளற்று அங்கே இடம் பெருது மறைகின்றன.

முதல் உலகப் போரில், எம்டன் என்ற ஜர்மானியப் படைக்கப்பல் குண்டு வீசியதனை, அந் நாளில் சென்னையில் வாழ்ந்த நாங்கள் மறந்திருக்கமுடியாது. ஆனுல், உலகப் போரின் வரலாறு எழுதுவோர், தம் ஒற்றுமைக்-காட்சியில் இதனைக் காணமுடியாது. எங்கோ ஒரு மூலையில் ஒரு காலத்தில் எழுந்த பொருளற்ற நிகழ்ச்சியாக அஃது ஒழிகிறது. ஆனுல், அக் காலத்தில் அதனைப்-பற்றிய தமிழ்ப் பாட்டொன்று ஆயிரக்கணக்கில் விற்றது. எல்லாச் செய்திகளும் இப்படி மறைந்து ஒழிவதில்லை. சந்திரகுப்த மௌரியரின் வெற்றி, பானிப்பட்டுச் சண்டை-கள், சிப்பாய்க் கலகம் என்று எள்ளப்பட்ட இந்திய விடுதலைத் திருப்போர்—இவை என்றென்றும் வரலாற்-றில் இடம் பெற்று விளங்கும் வரலாற்றுக் குறிப்பினைப்-பற்றிப் பாடுகிற புலவன் "நான் பாடும் குறிப்பு எம்டன்-குண்டு வீச்சுப்போல மறைந்தொழியுமா? சிப்பாய்க் கலகம்-போல மக்கள் மனத்தில் என்றென்றும் நிலைத்திருக்குமா?" என்ற இதனை எவ்வாறு அறியமுடியும் ? அறியமுடியாது. இவற்றைப்பற்றிப் பாடுவது,வளர்ந்து செல்லும் வரலாற்-ருேடு போட்டியிட்டுச் சூதாடுவதாகத்தான் முடியும்.நாளை-வரும் பலாப் பழத்தினும் இன்று வரும் களாப் பழம் மேல்என்பார், இப்படிஎண்ணிப் பாடிமகிழ்வோர்.அவர்கள், இன்றுள்ளாரது பாராட்டில் மகிழ்ந்து, அன்று வருவாரது பாராட்டை இழக்கலாம். மாலையில் புற்றீசல் எனக்

இளம்பிக் காலையில் மறையும் தினசரிப் பத்திரிகை-களின் கலை, இந் நாளின் சிறந்த கலையாம். இதனை நாட்காலைக் கலை எனலாம். பாவலன், இவ்வாறு இன்றைக்கென வாழும்போது, பாட்டுக் கலையை மறந்து நாட்காலைக் கலையில் ஈடுபடுகின்றான். இவன் உணர்ச்சி-யின் உண்மை எல்லாம், "குடிகாரன் பேச்சுப் பொழுது விடிந்தால் போச்சு" என்ற பழமொழிக்கு இலக்கு ஆகும்.

அகமோ, புறமன்றி இல்லை. புறத்தினை உயர்த்துவ-தாலேயே அகத்தினை எட்டிப்பிடித் துயரலாம். அருவ-மாம் நிலையை உணர, உருவத்தினைப் பற்றவில்லையா? கட்-புலனாகாக் கடவுளைக் காட்டும் சட்டகம் வேண்டும் அன்றோ! அகத்தினை உணரப் புறத்தினைப் பற்றவேண்-டும். சங்கப் பாவலர்கள், அரசியலைத் தூய்மைப்படுத்திய கலைஞர்கள், குரவர்கள் - இவ்வாறு வரலாற்றில் மூழ்கிய-வர்கள் வரலாற்றுக் குறிப்பினை எவ்வாறு பாடாது இருத்-தல் கூடும்? எவ்வாறு மறத்தல் கூடும்? அவற்றினைச் சுட்டித்தானே மேலுயர்த்த முயலவேண்டும்? இக் குறிப்-புக்களை மறவாது பாடினால், அவர்கள் பாடல் பாட்டுக் கலையாகுமா? நாட்காலைக் கலையாக அன்றோ உடனுக்-குடன் மறைந்தொழியும்? ஈதே இங்குள்ள சிக்கல்.

வரலாறு, பாட்டாகாது என்று நாம் கூற வரவில்லை. ஒரு நாட்டின் வரலாற்றையோ, ஓரரசன் அல்லது பெரி-யாரின் வரலாற்றையோ, ஓர் அரசகுலத்தின் வரலாற்றை யோ முழுப்பொருளாகக் கண்ணும்,மூக்கும், காதும், வாயும், கையும், காலும் வைத்து உயிர் கொடுத்துப் பாட்-டாகப் பாடிவிடுவதே புலவர் செய்யும் புதுமையாகும். ஷேக்ஸ்பியர் எழுதிய வரலாற்று நாடகங்கள், நெப்-போலியன் காலத்தைப்பற்றி ஹார்டி (Hardy) எழுதிய

டைனஸ்ட் (Dynast) என்ற நாடகம், காளிதாசன் எழுதிய இரகுவமிசம், சேக்கிழார் பாடிய பெரிய புராணம் முதலியன, கண்கட்டி விட்டாற்போல நாம் அலைந்துவரும் வரலாற்றுக் காட்டில், தெள்ளத் தெளிய விளக்கி நம் கண்ணைத் திறந்து வைக்கும் வரலாற்றுக் காப்பியங்களாகும். வரலாற்றினையே பாட்டின் உயிர்நிலையாக வைத்துப் பாடாமல், எடுத்துக் காட்டாகவோ உவமையாகவோ வரும் வரலாற்றுக் குறிப்புக்கள் இவ்வாறு பாட்டாதலில்லை: பொருள் விளங்காத துண்டு துணுக்குக்களாகவே அவை ஒழிகின்றன; பின் வருவாருக்கு விளங்காத பகுதிகளாய்ப் பாட்டினையே கெடுத்தொழிக்கும் புல்லுருவிளாகவும் உயிருணிகளாகவும் மாறிவிடுகின்றன.

மாமூலனார் பரணர் முதலிய சங்கப் புலவர்கள் இத்தகைய உவமைகளை ஏறக்குறையத் தங்கள் பாடல்தோறும் பாடுகின்றனர்கள். பாட்டோ இல்லையோ, இவற்றால் பெரியதொரு நன்மை விளைந்துள்ளது. ஒன்றுமே அறிய முடியாது கிடக்கும் சங்க காலத்தினைப்பற்றி அறிய இவையே உதவுகின்றன. சங்க கால வரலாற்றுக் கருங்கடலில், இவையே கலங்கரை விளக்கமாக விளங்குகின்றன. மற்றொன்றும்உண்டு. மொழிநடை மாறியுள்ளமை காரணமாகக் கற்றோருக்கு அன்றி மற்றோருக்கு விளங்காத நிலைக்குச் சங்கப் பாக்கள் வந்துள்ளன. கற்றோரும் சங்க கால வரலாற்றை ஒருவாறு அறிந்தாலன்றிச் சங்க நூல்களை அறிவது அருமை. எனவே, சங்க நூல்களை ஓதுவோர், ஏறக்குறையச் சங்க கால மன நிலையை அடைந்து தீரவேண்டும். முதலுலகப் போரின் சென்னை வரலாற்றுச் சிறப்பறிஞருக்கு (Specialists) எம்டன் குண்டினைப் பற்றிய பாட்டு விளங்குவதுபோல, சங்ககாலச் சிறப்

பறிஞர்களுக்கு இக் குறிப்புக்கள் ஒரு வகையாக விளங்கி இன்பந் தரும்.

3

இந்தப் பயன் ஒருபுறம் இருக்கப் பாட்டாகுமா என்றும் ஆராய வேண்டாவா? மாமூலர் பாட்டொன்றினைக் காண்போம்.

இயற்கையின் விளையாட்டிலே, கடவுளின் அருளால் சிறந்ததொரு தலைவனும், சிறந்ததொரு தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொண்டு, ஈருடலும் ஓருயிருமாகக் களித்து மகிழ்ந்து வருகின்றார்கள். திருமணமோ நடைபெறவில்லை. மண வாழ்க்கைக்கு வேண்டும் பொருளினைத் திரட்டிவரத் தலைவன் தமிழ்நாடு கடந்து செல்லவேண்டுவ தாகிறது. கற்புடைய கன்னியின் கவலை சொல்லப் போமா? இதனை அறிந்த ஊர்ப்பெண்கள் வாயை மூடமுடியுமா? இத்தகைய பழி தூற்றப்பெறுதலுக்கு அலர் எழுதல் என்று பெயர். மனக்கவலையால் தலைவியின் உடலம் வாடுகிறது. உள்ளுக்குள்ளோ கையாறு; வெளியிலோ அலர்—இவ்வாறு, இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு ஒத்துப் புலம்புகிறாள் தலைவி. இதனைக் கண்ட அவளுடைய உயிர்த்தோழி ஒரு சூழ்ச்சி செய்கின்றாள். தன் மகனைத் தான் வைதாலும் பிறர் வைய மனம் பொறாள் தாய்: இதுவே உலகியற்கை. தலைவனைத் தோழி பழித்தால், அதனைப் பொறாது தலைவி தலைவனைப் பாராட்டுவாள் எனத் தோழி நினைக்கின்றாள்; அந்தப் பாராட்டு ஓர் ஆறுதலைத் தலைவிக்குத் தரும் என உணருகின்றாள்; எனவே, தலைவனை இயற்பழிக்கின்றாள். அதாவது: தலைவன் இயல்பினைத் தோழி பழிக்கின்றாள்.

## 4

"ஐயோ! அழகின் செல்வியே! உன் பழைய அழகெல்லாம், கனவாய்ப் பழங்கதையாய்ப் பொய்யாய் அடியோடு தொலைந்து போயிற்றே (தொகல்வின் தொலைய)" என்று வருந்திக்கொண்டே, தோழி, தலைவிக்கு ஆறுதல் அளிக்க, அன்பாக அவள் உடலைக் கையால் தடவிக்கொடுக்கின்ருள். மெலிந்த உடலில் கைப்பட்டதும், தோழியின் துன்பம் பொங்குகிறது. "ஆ! தலையணைபோல மெத்தென நின்ற தோள்கள்-பச்சை மூங்கில் எனத் திரண்டு நிறம் கொண்டு அழகாக விளங்கிய தோள்கள் - பொலிவெலாம் இழந்து எலும்பும் தோலுமாய் நாளுக்கு நாள் மெலிந்து போய்விட்டனவே (தோள் நலம் சாஅய்)" என்று நைகின்ருள்.

தலைவன்மேல் பாய்கின்றது தோழியின் உள்ளம். ஆனால், பல சொற் பேசவில்லை. துன்பத்தினைப் பாராட்டுவதன்றே அவள் நோக்கம்; "இப்படி எல்லாம் வாட, உன்னை அணைத்து வாழ அவருக்கு அருள் இல்லாது போய் விட்டதே! (நல்கார் என்ற பெயர் பெற்ருரே)" என்று தொடங்குகிருள்.

"அம்மட்டுமா அவர் கொடுமை இருந்தபடி! அன்பு காட்டாமற் போனலும் கண்காண அருகில் இருந்தாலும் ஓர் ஆறுதலாய் இருக்கும். அதற்கும் இடம் இல்லாமல், துறவிபோல நம்மை அடியோடு விட்டொழிந்து, எங்கோ நீங்கிப் போயினரே! (நீத்தனர்!) என்னே! என்னே!" என்று புலம்புகிருள்!

"இதுவே நம் நிலைமை. ஆனல், ஊர் நம்மைச் சும்மா விடுகிறதா? ஊரார் எல்லாம் பழி தூற்றுகின்றனர்.

பாவம் பாவம் என்கின்றனர்; அவரைப் பழிக்கின்றனர்" என்று முடிக்கின்றாள்; பெரும் பழியின் ஆரவாரத்திற்கு ஓர் உவமை கூறுகின்றாள். அவளும் அவளூரும் அறிந்தது ஒரு செய்தி போலும் அது! சேரன் குட்டநாட்டுத் தலைவன் ஆதலின், குட்டுவன் என்றும் அவனுக்குப் பெயர். அவனுடைய ஊர் கழுமலம் (சீகாழி யன்று). அஃது ஒரு கோட்டை. கிள்ளி வளவன் ஒரு சோழன். சோழர்களுக்குச் செம்பியர் என்றும் பெயர் உண்டு. இந்தச் செம்பியனுக்கும் சேரனுக்கும போர் மூண்டது. சோழன், சேரநாடு சென்று, குட்டுவனுடைய கழுமலக்கோட்டையின் மதில் (அகப்பா) முழுதும் அழியத்தாக்கினான். நூறி நுறுங்குகிறது அகப்பா; கடும்போரின் கொடுமை அதனோடும் நிற்கவில்லை; பட்டப்பகலில், செம்பியன் அந்த ஊரைக் கொளுத்துகிறான்; 'இது ஒரு வீரயாகம்' (பகல் தீ வேட்டல்) எனக் கருதுகிறான் போலும்! ஊரார் என்ன ஆகி இருப்பர்! கண்டவர் என்ன நடுங்கி இருப்பர்! இந்தக் கடும்போரின் — ஞாட்பின் — ஆரவாரம் மிகமிகப் பெரிது. "குய்யோ முறையோ! ஆ ஆ கொடுமை? என்ன வீரம்! என்ன வீரம்!" என்ற முறையீடுகள் ஒருபுறம்; போரின் குழப்பம் ஒருபுறம்; ஊர் எரிதலால் மதிலும் மாளிகையும் விழும் இடி ஒலி ஒருபுறம்.

"இந்த ஞாட்பின் ஆரவாரத்தைவிட உன்னைப்பற்றி ஊரார் எழுப்பும் அலர் மிகப்பெரிது" என்று சுட்டுகின்றாள் தோழி.

இதன் பொருள் என்ன? சோழன், சேரன் நாட்டினுட் புகுந்து, உட் கோட்டையையும் அழித்துத் தீ மூட்டிவிட்டான். தலைவன், தலைவியின் நிறையைத் தகர்த்துப்

புகுந்து, உயிர்க்குயிராய் நின்ற நாணம் எனும் மதிலையும் நூறி நுறுக்கித் தன் கைக்கொண்டு, முன்னைய நிலைமை அடியோடு அழியக் காதல் தீயினையும் கவலைத் தீயினையும் ஊர் சுடுவிளக்கமாக அவள் உள்ளத்தில் மூட்டிவிட்டான்." "ஈதே ஊரார் கூறும் பழி" என உவமை வழியே மெல்லத் தலைவியின் மனத்தில் உறைக்கக் கூறுகின்ருள் தோழி. ஈதே இயற்பழித்தல். நேரே இவ்வாறு பழிப்பது நாகரிகமன்று. தலைவியும் தலைவனும் வேறல்லர்; ஆதலின், தலைவியின் எதிரே பழிப்பதும், தலைவன் எதிரே பழிப்பதே ஆம். உவமை வழியாகக் கூறியதுமட்டுமன்று இங்குள்ள பண்பாடு. தன் வாயால் கூருது, ஊரார்தம் வாயில் வைத்துக் கூறுவதும் பண்பாட்டின் பெருமையாகும். இவ்வாறு உள்பொருள் தோன்றுவதற்கு இறைச்சி என்று பெயர்.

"தொல்விகன் தொலையத் தோள்நலம் சாஅய்
நல்கார் நீத்தனர்...... குட்டுவன்
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகல்தீ வேட்ட ஞாட்பினும் மிகப்பெரிது
அலர்எழச் சென்றனர்"

என்பதே தோழி இயற்பழித்த பேச்சு.

## 5

தோழி எதிர்பார்த்தபடி, தலைவன் இயல்பாம் பெருமையானது பட, அதாவது, தோன்றப் பேசுகிருள் தலைவி. ஊர் பழிக்கப் பொறுத்திருக்குமா அவள் அன்பு உள்ளம்? இயற்பட மொழியும்போது, தோழி இயற்பழித்த பேச்சைக் கொண்டு மொழிகின்ருள்; "நல்கார் நீத்தனர். உண்மையே ஆயினும்" என்று புகழத் தொடங்கி விளக்குகின்ருள்.

"நல்கார் நீத்தனர் ஆயினும் நல்குவர்." நல்கார் என்று பேர் எடுத்துப் போய்விட்டார்; ஆனால் நம்மை நல்குபவர் என்று பெயர் எடுப்பார். நட்டவர் அல்லரா? நட்டல் என்பதன் பொருள் யாது? (நள், நடு, நள்+து, நட்பு) என்பவை ஒரே அடிச் சொல்லில் பிறந்தவை. வித்தினை நடுவது என்றால் என்ன? மண்ணில் அதனை நடுவாகச் செய்வது; ஒன்றாகும்படி மூடிவிடுவது; ஒன்றாய் இயைந்து வளரவிடுவது. "நட்டோர்; நண்பர்" என்றாலும நம் உயிராம் நடுநிலையாய், நம்மால் மூடி மறைக்கப்பெற்று நம்மோடு இணைந்து ஒன்றாகித் தோன்றுபவர் என்று பொருளாம். (நட்ட விதை, தோன்றும்போதே விளங்கும்; அதுவரை மறைந்திருக்கும்.) "நம்பால் அவருக்கு உள்ள நட்பே அவரை இயக்குகின்றது. அவர் தோன்றுவர்; நமக்-கென இயங்கியது அப்போது வெளியாக நம்மை நல்குவர்; தலையளி செய்வர். அவர் சென்றதும் நம் மணவாழ்க்-கைக்குப் பொருள் தேடியன்றோ? பழி அவர்மேல் படாத-படி அவர் வாழ்வாராக!" என்று இயற்பட மொழிகின்றாள் தலைவி.

நாகரிகமாக—இறைச்சி வழியாக அல்லது மறைமுக-மாகப் பழிதூற்றியதற்கும், மறைமுகமாகவே விடைகூறித் தலைவரை இயற்பட மொழிகின்றாள் தலைவி; "அலர் எழச் சென்றனராயினும், காடிறந்தார் நல்குவர்" என்று தோழி கூறியதனையே கொண்டுமொழிந்து தலைவன் பெருமை தோன்றப் பேசுகிறாள். தோழி கூற்றுக்கு விடையும் தலை-வன் பெருமையும் மற்றொரு புணர்துறையின் வழியே விளங்குகின்றன.

தலைவன், தமிழ்நாட்டினைக் கடந்து வேற்று நாட்டில் பொருள் ஈட்டச் சென்றுள்ளான். தமிழ் நாட்டின் வட-

எல்லே வேங்கட மலேயும் அதனைச் சூழ்ந்த காடுமே ஆம். அங்குத் தலேவனுக ஆண்டு வருபவன் புல்லி என்ற வீரன். மின்னல் வெட்டில் பாய்ந்து தாக்கி, வென்று மறைபவன் அவன். மிக விரைந்து பாயுமாம் அவன் குதிரை—கடுமா அஃது. அவனுடைய காட்டினை—இறந்து—கடந்து சென்றுள்ளார் தலேவர். "(கடுமான் புல்லிய காடிறந்தோரே.)"

அந்தக் காட்டின் புனைந்துரை அழகாக அமைந்துள்ளது. காடு—காட்டினைச் சுற்றிப் பெரிய மலேகள், (நெடுவரை)—மலேகளில் பெரிய பிளப்புக்கள் (விடர்கள் அல்லது குகைகள்)—இவை தோன்றுகின்றன. வறண்ட மலேகள் அல்ல—பச்சைப் பசேர் எனத் தோன்றும் வளம்மிக்க மலேகள் அவை. காடு நிறைந்த மலேகள் அல்லவா! ஆனுல், கடுங்காடு அவை. கொடிய காட்டு விலங்குகள் நடையாடுகின்றன அங்கே. "யானைகளும், ஆணும்பெண்ணுமாக, இல்லற அன்பின் காட்சி விளக்கந் தந்து உலாவுகின்றன. தலேவரும் இவற்றைக் காண்பார் அல்லரோ? நம்மை நினைப்பார். நம் இல்லறத்தினை உறுதிப்படுத்தவேண்டும் என்ற படிப்பினையையும் அங்கே படிப்பார்" என்று தலேவி நினைக்கின்ருள்.

அம்மட்டுமா? அங்கொரு நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மலேச் சாரலில் காந்தள் நன்ருக மலர்ந்து கிடக்குமன்றே! (அலர் கவிந்து மாமடல் அவிழ்ந்த காந்தள் அம் சாரல் அது.) காந்தள், கைவிரல்களே விரித்தாற் போல் மலரும்—பாம்பு படம் விரித்துக் கொட்டாவி விட்டாற் போலக் காந்தள் மலரும் என்பர். "அரவு பைத்து ஆவித்தன்ன அங்காந்தள் அவிழ்ந்து அலர்ந்த" (1658) என்பது சிந்தாமணி. "காந்தள்,

பாம்பு தன் படத்தை விரித்துக் கொட்டாவி கொண்டால் அன்னவாக முகை நெகிழ்ந்து பின்பு அலர்ந்தன" என்பது அதற்கு நச்சினார்க்கினியர் கண்ட உரை. இதனை அதிவீரராம பாண்டியர், "பாம்பு பைத்து ஆவித்தென்னமென் காந்தள் பருமுகை அவிழ்ந்து" என்று பொன்னேபோலப் போற்றி ஆள்கின்றார். இவற்றிற்கு எல்லாம் ஊற்று நாம் ஆராயும் பாடல்தான். நிற்க.

பாம்புபோலத் தொலைவில் காட்சியளிக்கும் இந்தக் காந்தளிடையே தொங்கும் வாயான தும்பிக்கையையே சிறப்பிலக்கணமாகக் கொண்ட, தன் காதலனை, ஆண் யானை (ஞால்வாய்க் களிறு) செல்கின்றதனை அதன் பெண் யானையாம் பிடி காண்கின்றது. அந்தக் காந்தளஞ்சாரலில் தும்பிக்கை தோன்றுகிறது. (பாந்தட் பட்டென) பாம்பிடையே தன் காதலன் சிக்கியதாகப் பிடி எண்ணிவிடுகிறது. அதன் கவலைக்கு அளவு உண்டா? முடிவு உண்டா? இந்தத் துஞ்சாத் துயரத்தால, காதற்பிடி அலறுகிறது; அஞ்சிக் குமுறுகிறது; கலங்கிப் பிளிறுகிறது. இது பெரியதொரு பூசல்; ஆரவாரம். மலையும் காடும் இதனோடு ஒரு குரலாகப் புலம்பிப் பிளிறுவனபோலத் தோன்றுகின்றன. நீண்ட மலையில் உள்ள பிளப்புக்களாம் குகைகளில், இந்த ஒலி சென்றதும், எதிரொலியாகத் திரும்புகிறது. இடி தொடர்ந்து இடிப்பதுபோல, இவ் வெதிர் ஒலிகள் பல பல எதிர் ஒலிகளாய்த் தொடர்ந்து பிளிறுகின்றன.

"அஞ்சு பிடிப்பூசல் நெடுவரை விடரகத் தியம்பும் காடு இவர் சென்ற காடு. இதனைக் கடந்து பொருள் தேடச்சென்றார் காதலர்; இக் காட்சியைக் கண்டிருப்பார்; ஆதலின், வந்து தலையளி செய்வார்; நல்குவர்" என்கிறாள்

தலைவி. முன்னொரு கால் பிற நாட்டாரிடமிருந்து தோழியறிந்ததனை அவள் வாயாகத் தலைவி உணர்ந்தது ஈதே ஆம். இஃது இப்போது நினைவுக்கு வரத் தலைவி கூறுகிறாள்.

தோழியின் கூற்றிற்கு இதில் என்ன விடை உண்டு? காதலன் பெருந் துன்பங்கண்டு காடும் மலையும் உடன் புலம்பப் பிடி நின்று பிளிறுவது தலைவர் காதிலும் வந்து இயம்பும் அன்றோ? விலங்குகளின் நிலையே இப்படியானால், மக்களின் தலைசிறந்த தலைவியின் நிலை என்ன என்று அவர் எண்ணிப்பாராரா? எண்ணிப் பார்த்தால்,விரைவில் பொருள்கொண்டு திரும்பி வந்து நல்காரா?

மற்றொன்றும் இங்குத் தோன்றுகிறது. " தலைவன் அடியோடு கெட்டான் என்று பலர் பழிப்பதும் நடுங்குவதும் அறியாமையே ஆம். பிடி புலம்புவது ஒரு கண்மயக்கில் மருண்டு வெருண்டே அன்றோ? தலைவனும் யானை பாம்பால் கடியுண்டு கிடக்கவில்லை; மெல்லிய காந்தளிடையே இன்பமாகக் கிடக்கின்றது. தலைவனும் கொடுமைப் பாம்பு வாய்ப்பட்டுத் தலைவியை மறக்கவில்லை; அவளுக்கு எனவே இன்பமூட்டும் பொருளைத் திரட்டப் பொருளிடையே கிடக்கின்றான்; காந்தள் போன்ற அவள் கைவிரலின் பிடியை நினைத்துக் கிடக்கின்றான். தலைவியை மறந்ததாகக் கொண்டு தோழியும் பிறரும் பழி தூற்றுவது அறியாமையே ஆம். தலைவியாம் கன்னியின் கற்பு! மனம் புலம்பியதன் எதிரொலியன்றோ தோழியின் கூற்றும் பிறவும். ஆதலின், அப் புலப்பலும் அறியாமையே ஆம் எனத் தன்மேல் பழியை ஒருவாறு ஏற்றுக்கொண்டு தலைவி தலைவனை இயற்பட மொழிகின்றாள். "ஊரார்

கூறும் அலர் பொருளற்றது; பொய்யானது'' என்றும் சொல்லாமல் சொல்லிவிடுகின்றாள் தலைவி.

இவ்வாறு, நேர்முகமாக ஒருவரை ஒருவர் எதிர்த்-துரையாடாமல், குறிப்பிற் பொருளுணரப் பேசும் நாகரிகப் பண்பாட்டினை என் என்பது! புனைந்துரைகள் வெறும்-புனைந்துரைகளாக வளராமல் பேசும் பேச்சுக்கு ஏற்பப் பொருளூட்டம் தருவனவாக அமைவது சங்கப் பாக்களின் தனிச் சிறப்பாகும். சொற் சுருக்கத்தில் பொருட் பெருக்-கம் வெள்ளமிடுகிறது.

தொல்கவின் தொலையத் தோள்நலம் சாஅய்
நல்கார் நீத்தனர்; ஆயினும் நல்குவர்
நட்டனர் வாழி தோழி குட்டுவன்
அகப்பா அழிய நூறிச் செம்பியன்
பகல்தீ வேட்ட ஞாட்பினும் மிகப்பெரிது
அலர்எழச் சென்றனர் : ஆயினும், அலர்கவிந்து
மாமடல் அவிழ்ந்த காந்தள்அஞ் சாரலின்
ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத்து அஞ்சுபிடிப் பூசல்
நெடுவரை விடரகத்து இயம்பும்
கடுமான் புல்லிய காடு இறந் தோரே.

—நற்றிணை 14.

## 6

குட்டுவன் செம்பியன் அகப்பா நூறித் தீ வேட்டல், கடுமான் புல்லிய காடு—என்பவை சங்க கால வரலாற்-றுக் குறிப்புக்கள். இவற்றினை நாம் உள்ளவாறு அறிய-முடியாமையால் இக்குறிப்புக்கள் பாட்டின்பத்தினைக் கொலை-செய்யவில்லையா என்பதே கேள்வி. குட்டுவன், செம்பியன், புல்லி என்பவை அந்நாளைய மக்களுக்குப் பெரிதும்

பொருள் விளங்கி இனித்துமிருக்கும். அவை அவர்கள் உணர்ச்சியையும் தூண்டியிருக்கும். அவ்வகையால் அவை அந்நாளுக்கு உகந்தனவாய் இருந்தாலும், இந்நாளுக்கு உகந்ததோ இந்தப் பாடல் என வினவலாம். நிகழ்ந்த-தொன்றனைக் கூறுகின்ருரே யன்றிப் புலவர் கண்ட கனவு அன்று .என்பதுமட்டும் அவற்ருல் வரும் பெருமை. இல்லையேல், அவை பொருள் புலப்பாட்டிற்கு வேண்டு-வனவே அல்ல. இந்தப் பாட்டில் வரும் பொருள், குட்டு-வன், செம்பியன், புல்லி என்ற குறிப்பால் சிறக்கவில்லை. "அகப்பா அழிய நூறிப் பகல் தீ வேட்ட ஞாட்பு" என்ற குறிப்பாலும், "மா மடல் அவிழ்ந்த காந்தளஞ் சாரலின் களிறு பாந்தட்பட்டெனத் துஞ்சாத் துயரத்து அஞ்சு-பிடிப் பூசல் நெடுவரை விடரகத் தியம்பும் காடு" என்ற குறிப்பாலுமே இப் பாடல் உயிருள்ளதாகி உணர்ச்சியை ஊட்டுகின்றது.

குட்டுவன், தமிழ் நாட்டின் தென்மேற்கு மூலையில் ஆண்டவன் : புல்லி, வடகிழக்கு மூலையில் வாழ்ந்தவன். தமிழ்நாடு முழுவதும் நம் கண்ணெதிர் இப் பாட்டில் அவ்-வாறு தோன்றுகிறது. இதனைக் கடந்து போகின்ருன் தலைவன். தாய்நாட்டை—நாகரிக நகரங்கள் படைத்த இன்ப அன்பு நிலையத்தை-விட்டும் போகின்ருனே தலை-வன் என்பதோர் எண்ணம் பிறக்கின்றது. ஆனல், அங்கும் ஓர் ஆறுதல், புனைந்துரையில் தோன்றுகிறது. நாகரிகத்தின் கொடுமையே பகல் தீ வேட்ட ஞாட்பாகவும், வெளிநாட்டின் அயன்மையே மலைவளம் காட்டுவளம் என்பவற்ருேடு தொடர்ந்துநின்று பொருளீட்டும் இட-மாகவும் காட்சியளிக்கின்றன. இதனுலும், தலைவியும் தோழியும் ஆறுதல் அன்ருே பெறவேண்டும்! குட்டுவன்

செம்பியன் என்பன பொதுப் பெயர்களே ஆம். பொருளீட்டுவார் செல்லும் காடு, மொழி பெயர் தேயமாம் வடநாட்டதே ஆம். இவை எல்லாம், யாவரும் அறிந்தவையே ஆதலின், "செம்பியன் யார்? குட்டுவன் யார்? புல்லி யார்?" என அறியாதபோதும் இப் பாடல் இனிக்கவே செய்கின்றது.

வரலாற்றுச் சிறப்புக் குறிப்புக்களையும் பொதுமை உண்மைச் செய்திகளாக விளங்குமாறு புனைந்துரைத்தமையே இங்குள்ள சிறப்பு. ஆகவே, மாமூலனர் சிறந்த பாவாணர் என்பதில் ஐயமில்லை. "யோகிகளாய் உபாயங்களால் முக்காலமும் உணர்ந்த மாமூலர் முதலியோர், அறிவன் தேயத்து அனைநிலையோர் ஆவார்" என நச்சினர்க்கினியர் இவர் பெருமையைப் பேசுகிருர். உலகினை விட்டொழியாமலே உலகிற்கும் அப்பாலான உயிர்நிலையாய அன்பின் உண்மையைக் கண்ணெதிரே உயிர்ஓவியமாக எழுதிக் காட்டும் வியப்பினை என் என்பது! தலைவியின் உள்ள நிலை, அதில் ஒன்றுய்க் கலந்துவிட்ட தலைவன், தன்னையே அழிய மாறி அவளுக்கு என வாழஎடுக்கும் முயற்சி, இவர்களோடு ஒருங்கு துடிக்கும் தோழியின் நெஞ்சம் - இவற்றின் ஒற்றுமைக் காட்சியாக இப் பாடல் விளங்குகிறது. புறத்தோற்றம் எல்லாம், உவமையும் குறிப்புமாக, இந்த உயிரோவியத்தினை எழுதும் கிழியாக அமைகின்றது என்பதும் பின்னர்த்தான் தெளிவாகிறது. புறமும் அகமும் ஒற்றித்து அன்புச் சுடராய் ஒளிர்கிற அழகே, அழகு! உயிராவணமிருந்து உற்று நோக்கி உள்ளக் கிழியில் உரு எழுதி நம் கைத்தருகிருர் மாமூலனர்.

* * * *

# 6. பாவத்தைக் கட்டிக்கொள்கிருள் !

*தோழி :* என்ன நல்ல நறுமணம் வீசுகிறது? என்றும் இல்லாத இந்தப் புதுமணம் எங்கிருந்து வருகிறது?

*தலைவி :* அந்தச் சோலையில் இருந்து வருகிறதா ?— உலகில் உள்ள ஒவ்வொரு பொருளும் புத்துயிர் பெற்றுப்-புத்தொளி வீசிப் புதுமணம் கமழ்கின்றது. நான்மட்டும் மணம் போய், ஒளி போய், உயிரும் போக நிற்கின்றேன்; பழங்கண்ணிற் புழுங்குகின்றேன். அதோ பார்த்தாயா அந்த அழகிய சோலையை !

*தோழி :* நாமும் தழைப்போம். மாந்தோப்பு எப்படித் தழைத்துவிட்டது ! நம்பமுடியவில்லையே ! கிளை எல்லாம் தளிர்கள் ! கிளைகளும் பந்தரிட்டாற்போல நெருங்கிப் படர்ந்துள்ளன. பச்சைக் கற்களிடை

யிடையே செம்பினை இழைத்தாற்போல என்ன அழகு! நெய் தடவிவிட்டாற்போன்ற தளிர்களின் மினுமினுப்பு! மனத்தை உருக்கும் துவளல்! இந்த மென்மையும், மணமும், நிறமும், வடிவும், இனிமையும் எப்படிப் பரந்தனவோ! வியத்தகு அழகு! என்ன குளிர்ச்சி! என்ன புதுமணம்!

தலைவி : ஆற்றங்கரைப் படுகையில் உள்ள மரங்கள் அல்லவா? ஆற்றின் ஊட்டம் உள்ளூறப் பொலிகிறது. கொண்டான் வலமிருந்தால் கூரை ஏறிச் சண்டை போடலாம். வானத்தையும் இம் மரங்கள் எட்டப்பார்க்கின்றன. உள்ளே உள்ளது வெளியே தோன்றுகிறது. நாம் எங்கே தழைப்பது? நாமோ வேரற்ற, நீரற்ற வற்றல் மரம்.

தோழி : தழைக்கவேண்டும் நாளில், வாடி வதங்குவானேன்? பாடி மகிழ வேண்டும் நாளில், பழித்து வருந்துவானேன்? இத்தலைகய இளவேனிற் காலமே ஓரறிவுயிரையும் உள்ளூற ஆற்று நீரோடு கூட்டுவித்துத் தழைக்கச் செய்கின்றது. காலத்தின் கோலம்—கேட்டாயா அப் பாட்டை! இதுவரையில் நம்மைப் போலவே வாயடைபட்ட குயில் இதோ பாடுகிறது! குயில் எங்கே எனப் பார்க்கிருயா? பச்சையின் நடுவே தெரியவில்லை! அதோ! அதோ! காற்றசைந்ததும் அந்தத் தளிரின் இடையே கருமணிக் கொத்துப்போலக் கருங்குயில் தோன்றுகிறது பார்! என்ன கறுப்பு! கறுப்பிலும் ஓர் அழகு காட்டுகிறது இந்தக் காலம்! உன்னைத்தான் இதோ அது பார்க்கிறது! செக்கச் சிவந்திருக்கும் கண்கள், கருமைக்கிடையே பளிச்சென்று தோன்றுகின்றன. கரும் பச்சையிடையே செந்தளிர்—கருமையிடையே

செங்கண்—எங்கும் இதே காட்சி! இருளில் ஒளி—காதற்பொலிவு! காதற் பொலிவு! பொலிக நின் காதல்!

**தலைவி:** அங்கே ஆற்றின் இறுமாப்பு; இங்கே சேவலின் செம்மாப்பு! எல்லாம் கொண்டான் வலம், வலம், வலம்! எதிரே உள்ள சேவலைப் பார்த்தாயா? இவற்றின் சேர்த்தியின் பொலிவே காதலின் கீர்த்தி! இன்பப் பாட்டு! பிரிந்து எதிர்எதிர் இருந்தாலும், இரண்டுள்ளமும் இரண்டுயிரும் ஒன்ருகிய நிலை அந்தப் பாட்டின் ஒற்றுமையாக முழங்குகிறது. நாமறியோமா இந்தச்செழிப்பும் பாட்டும்! அஃது ஒரு காலம்! இஃது ஒரு காலம்!

**தோழி:** காதற் காலம்! நம்மையும் அறியாமல் களிப்பு வரும் காலம்! குயிலின் பாட்டு ஒரு களியாட்டம்; பந்தாட்டம்போல ஓர் ஒலியாட்டம்! மாலை மாற்றிக்கொள்வதுபோலச் சேவல் கூவ, அதன் எதிரே பெடை கூவ-இவ்வாறு மாறி மாறி மாமர மணப்பந்தரில் மகிழ்ந்து மலிகின்றன.

**தலைவி:** காதற் பாட்டு! காதற் பாட்டு: இருதலைக்காமம். சாதற் பாட்டு! சாதற் பாட்டு: ஒருதலைக் காமம்.

**தோழி:** நல்ல நாளில் கெட்ட பேச்சு—ஆ என்ன இஃது? அந்தப் புது மணம் மறுபடியும் வீசுகிறதே! மாமரத்தின் மணமா? இல்லை, இல்லை!

**தலைவி:** எல்லாப் பூவுமே மலரும் காலம்! குயில் பாடப் பாட, மனமும் முகமும் மகிழ்ந்து அலர்கின்றன. துன்பத்தின் ஆழம் நம்மிடம்; இன்பத்தின் ஏற்றம் அவற்றினிடம்.

**தோழி :** நிலைத் திணையுயிரையும் இயங்கு திணையுயிரையும் இப்படி ஒரு புரட்சி செய்து இன்பமூட்டும் இளவேனிற் காலம் நமக்குமட்டும் இன்பமூட்டாது ஒழியுமா ?

**தலைவி :** கொண்டான் வலமிருந்தால் அன்றோ ?

**தோழி :** கேட்டேன் உன் பல்லவியை ! அவருக்கும் இன்ப இளவேனிற் காலம் நம்மை நினைப்பூட்டாதா ? அவர்மட்டும் தனியிருப்பாரா ? வருவார்.

**தலைவி :** வருவார் ! வருவார் ! மனப்பால் குடி ! தம்மைவிட்டுப் பிரியாத நம் இயல்பு அறிந்திருந்தும் பிரிந்திருப்பாரா ? பிரியேன் என்ற சொல்லும் தவறினர். முதற் கோணல் முற்றுங் கோணல்-பிரிந்தாலும் அகன்று போவாரா ? அகன்றவர் அகன்றேவிட்டார்.

**தோழி :** அப்படிச் சொல்லலாமா ?

**தலைவி:** பின்னே என்ன? பழமையை நினைக்கிறாயோ? " என் உயிரே " என்று பேசியது ஒரு காலத்துப் பேச்சு. பொருளே அவருக்கு இன்று உயிர்...பெண்ணாயிருந்த உயிர், அன்று அன்பாய்க் குழைந்தது. பொன்னாயிருக்கும் உயிர் அன்பாய்க் குழையுமா ? இன்று தீயாகவே உருகும்.

**தோழி :** மரந் தழைய நீர் வேண்டும் என இந்த இளமரப் பூங்காவே எடுத்துரைக்கவில்லையா ? குடி தழைக்கப் பொருள் வேண்டாவா ? பொருளில் பூப்பதே இன்பம்.

**தலைவி :** வெறும் பொருள் வெந்துருகும் ; பூவாது. அருளாய் மாறினால்மட்டும் பொன் பூத்த மரமாய்ப் புகழ் மணங் கமழ்ந்து இன்பம் கனியும்.

**தோழி:** பொன் காத்த பூதமாகவா பொருள் நாடினர்? குடி வாழக் கிளை வாழக் குன்றி வந்து இரப்பார் வாழ உன் குறைமனம் நிறையவே அன்ரே பொருள் தேடச் சென்ருர்?

**தலைவி:** அதனுலேயே பொறுத்திருந்தேன். அருள் உலர்ந்தது. தொலைவில் உள்ளார் ஈன்பதன்று துன்பம். நீர்ப்பசை நெடுந் தூரத்திருந்தும் வரவில்லையா இதோ அந்த மரத்திற்கு? நமக்கெங்கே நீர்ப்பசை? அன்புறவே அற்றுப் போயிற்று.

**தோழி:** இளவேனிற் காலத்தின் பெருமையைக் கண்டு உணர்ந்தும் இப்படிக் கதறலாமா?

**தலைவி:** இளவேனிற் காலத்தின் பெருமையை உணர்ந்தே பேசுகிறேன். வேங்கொம்பைப் பூங்கொம்பாக்கி, அதில் பூங்குயில்கள் புகுந்து பாடச் செய்யும் இளவேனில்-தெய்வத்தின் பெருமையை எண்ணவும் முடியாது! காதற் கடவுளின் கருணை பொழியும் கை அது.

**தோழி:** பின் ஏன் கவலை?

**தலைவி:** வருவார் வருவார் என்று நானும் எண்ணினேன். எண்ணுதெல்லாம் எண்ணியது என் நெஞ்சம்; கோடியும் அல்ல பல. கொத்துக் கொத்-தாய் மலர்ந்தன இன்ப எண்ணங்கள். அவர் வருவது-போல, வந்தணைப்பது போல, நான் ஊடுவது போல, ஊடலைத் தணிப்பது போல, இல்லறம் தழைப்பது போல, பல்ப்பலர் வந்து விருந்துண்பது போல, வறியவர் வறுமை வாட்டம் தீர்வது போல, நோயினர் மருந்துண்டு வாழ்வது போல, உலகம் இவர் காவலில் உவந்தொளிர்-வது போல, துன்பம் துடைப்பது போல, அற இன்ப-

அன்பொளிக் குடும்பமாய் உலகம் வாழ்வது போல எத்தனையோ காட்சிகள்! கற்பக மலர்கள்! "இத்தனைக்கும் ஊற்று, நீயன்றோ?" என்று அவர் என்னை அணைக்கவர, நான் எதிர் அணைக்கக் கை எடுப்பது போலக் கண்டதும், உண்மையாகவே என் கை கவ்வியது. ஏமாற்றமடைந்தேன். ஆகாயக் கோட்டை உடைந்தது. எல்லாம் கனவாய் ஒழிந்தன. எதிர்பார்ப்பது வானத்தில் உயர உயர ஏமாற்றமும் கிடுகிடு பாதாளத்தில் ஆழும் அன்றோ? பூத்துயர்ந்த கொடி முறிவதுபோல நெஞ்சுடைந்து நிற்கிறேன்.

**தோழி :** கனவு நனவாகும். கனவு பலியாதா? என்ன எண்ணுகிறாய்? மரம் எல்லாம், ஒன்றாகவா தழைக்கின்றன, மலர்கின்றன! சில மரங்கள் காலம் தாழ்த்து மலரவில்லையா? அதிலோர் இன்பம் உலகம் கொள்ளவில்லையா!

**தலைவி :** இளவேனில் இன்று வந்தது?

**தோழி :** அவரிருக்கும் இடம் அருகிலா இருக்கிறது? இடைவழி பெருவழியாயிற்றே! வரவேண்டாவா?. அங்கே இளவேனிற் காலம் சிறிது தாழ்த்தும் தொடங்கலாம்.

**தலைவி :** என்னுள்ளமும் அவருள்ளமும் ஒன்றாயிருந்த காலம் உண்டு. அவர் வருவார் என்று மனத்தில் தோன்றியதும் எதிரே வந்து நிற்பார். இப்போது இத்தனை இன்பக் கனவுகள் கண்டும் எதிர் வரவில்லையே?

**தோழி:** அடுத்த அறையில் இருந்தா?

**தலைவி :** அடுத்த அறை என்ன? அடுத்த நாடு என்ன? மனத்திறுற்றல் பெரிது.

**தோழி :** இவ்வாறு உருகும் உன் மனத்தின் ஆற்றல் இன்று குறைந்ததா? இளவேனில் ஆற்றல் மறைந்ததா?

*தலைவி :* நாமே மறைந்தோம். எந்த மூலையிலேனும் அவர்|மனத்தில் ஒதுங்கி ஒடுங்கிக்கிடந்தால் அன்ரு அவர் - நினைவிற்கு வருவோம்? அகன்றவர் மறந்தே போனர். கண் மறையக் கருத்து மறையும்.

*தோழி:* கண் மறையக் கருத்து மறைந்ததா உனக்கு?

*தலைவி :* நம் மனத்தில் அவர் தவிர வேறென்றும் இல்லை. அவர் மனத்தில் நாம் இருந்தோம். பொருள் புகுந்தது. குடத்தில் பழைய நீர் இருக்கப் புதுநீர் கொட்டினல் பழைய நீர் ஒருபோது முழுதும் வெளியேறி-விடலாம். அவர் நம்மை விட்டகன்ருர். நம்மை மறந்தே-போனர். இளவேனில்......என் செய்யும்? வற்றல் மரம் தளிர்க்குமா?

*தோழி:* இன்பப் பூங்கொத்து இன்பக் கனவாய்ப் பூத்ததுபோலத் துன்பப் பூங்கொத்துத் துன்பக் கன-வாய் உன் மனத்தே மலர்கின்றதோ!—என்ன மறுபடியும் அந்தப் புதுமணம்—உனக்கு வரவில்லையா?

*தலைவி :* வருகிறது! வந்துதான் என்ன? வயிற்று நோயாளனுக்கு விருந்து மணந்து என்ன பயன்?

*தோழி:* வயிற்றெரிச்சலே. மிகும். ஈது என்ன பூமணம் என்ருல், தெரியும் என்கிருய்! தெரியச் சொன்-ஞல் அன்ரு! உன் பாட்டே பாடுகிருயே!

*தலைவி :* உனக்கு அறிவுத் தினவு - எனக்குத் துன்பத் தினவு! அதுவர்? பாதிரிப் பூமணம் - தெரிய-வில்லையா?

*தோழி:* என்ன நறுமணம்? பாதிரியா இது?

தலைவி : நான் எது சொன்னாலும் நம்பிக்கை இல்லையா? பேச்சுக் கொடுத்துத் துன்பத்தினைப் போக்க எண்ணமா? வேறு போக்குக் காட்டி மாற்ற எண்ணமா? ஐயம் ஏன்? அதோ கேள்! "பாதிரிப்பூ பாதிரிப்பூ!" என்று அவள் விற்று வருவதை.

தோழி : கேட்கிறது. அதோ அந்தப் பெண்ணும் வருகிறாள்.

தலைவி : அவள் ஒருத்தி, நடுவே எங்களுக்கு எனப் பிறந்தாளே?

தோழி : உனக்கெனப் பிறந்து, பூவினைக் கொண்டு வருகிறாளா? பூவினை வாங்கலாமா?

தலைவி : அவள் என்ன நட்பா? பகையா? இரண்டும் கெட்டவள்! அயலாள். பாவம்! அவள் யாரோ? நான்யாரோ?

தோழி: "யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயனீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே"

என்று இன்று பாடலாகாதா, அயலாட்டி மலர் கொண்டு மகிழ்வித்து இன்பூட்டுகிறாள் என்று?

தலைவி : அடிப்படையை மறந்து பேசுகிறாய். அன்றோ அன்புப் பசை! இன்றோ வற்றல் மரம்? அன்று வேம்பும் கருப்புக் கட்டியாம்! இன்று அமுதமும் நஞ்சா-கிறது!

தோழி : நஞ்சாவது கிஞ்சாவது - நல்ல மணம் - தூய வெள்ளை நிறம் - நடுவே சிறிது இளஞ் சிவப்பு.

இவற்றினிடையே பூந்தாது பார்த்தாயா? நீ சொல்கிற உவமை என்ன! நாம் அறிந்தனபோல இருந்தாலும், அவற்றைப் புதுப்புது வகையில் புதுப்புது நிலையில் திறம்படச் சேர்த்து அமைத்து வியப்பூட்டும் ஓவியத்தைப் பற்றிப் பேசுவாய். அந்த ஓவியம், எழுதும் கைத்திறம் படைத்த ஓடாவி கையில் பிடிக்கும் துகிலிகையின் நுட்பத்தில் ஈடுபடுவாய்: நிறம் பூசச் செவ்வரக்கில் தோய்த்தெடுத்துப் தீற்றிய பின்னும் செவ்வரக்கு நீ கூறும் துகிலிகையில் ஒட்டிக் கிடக்குமே, அது போலத் தலையில் சிவந்த பூந்தாதுக்களின் அழகே அழகு—உவமையை நன்ருக உணர்ந்தேனு?

தலைவி : பாடு உன் பாட்டை!

தோழி : என்ன அழகு! என்ன அழகு! எவ்வாறு புகழ முடியும்? புத்தம் புது மலர்—இன்றலர்ந்த மலர்—அதோ, வண்டுகள் பாடித் தேனை உண்டு மயங்குகின்றன!

தலைவி : நீயும் அதனழகைப் பாடி மயங்குகிருய். தொலைவில் இருக்கும் இளவேனில் அழகு இவ்வாறு வீட்டிற்குள்ளும் வருகிறது.

தோழி : துன்பத்தில் இன்பமா?

தலைவி : ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும். துன்பத்தில் இன்பமும் துன்பமாம்.

தோழி : ஏன் அப்படி? துன்பத்தில் இருப்பார் இன்பம் துய்யாரா? பிறர் இன்பம் துய்ப்பது கண்டு வயிற்றெரிச்சலா?

தலைவி : ஏன் வயிற்றெரிவு வயிற்றெரிவு என்று சிறு மாக்கள்போல் பேசுகிருய்?

தோழி : பூ மணவாதா?

தலைவி : மணக்கும். ஆனால், மணப்பது வேறு, மகிழ்வதுவேறு; மணப்பது மூக்கு; மகிழ்வது மனம்; மனம் இல்லையானால் மகிழ்ச்சி ஏது?

தோழி : புறத்தே தோன்றுவதுதானே அகத்தும் தோன்றும்?

தலைவி : மனம் வேறிடத்தில் இருந்தால், எதிரிருப்பதும் தோன்றாது.

தோழி: உன் மனம் இங்கேதானே இருக்கிறது?

தலைவி : ஒட்டை மனம்! இந்த இன்பப் பொருளைத் துய்க்கும் கண்ணும் காதும் மூக்கும் நாவும் உயிரும் உடலும் இழந்து, நறுங்கிய மனமே இங்கே இருக்கிறது. உயிரில்லாத பணம் இவற்றைத் துய்க்குமா? காதலும் வறள, இன்பமும் வறளச் செய்கிறதே அவருடைய பொருட் பற்று! பொன் என்று மகிழ்ந்தால், அதில் எந்த உயிர் தழைக்கும்? இந்த வருத்தம் ஒருபுறம். இந்த நிலையில் பாதிரி பாதிரி எனக் காது குடையக் கதறுகிறாள்.

தோழி : அவள் என்ன செய்வாள்? வயிறு வளர்க்க வேறு வழி ஏது? பொருள் தேடித் திரிவதன் பெருமை தெரிகிறதா? அவர்போல, அவளும் பொருள் தேடுகிறாள் என்றா? அவள்மேல் என்ன சீற்றம்?

தலைவி : சீற்றம் ஏன்? உலகம், தான் வாழமட்டும் பார்த்துக் கொள்கிறது; இன்பத்தினையே கொண்டு பிறருக்கு ஊட்டுவதாகக் கருதுகிறது. 'வேண்டா' என்றால் 'என்ன நன்றி கெட்டவர்கள்' என்று பழிக்கிறது.

தோழி : வயிற்று நோயாளிக்கு விருந்து செய்து வெறுப்படைவோர் போல......

தலைவி : நான் சொல்லியதைச் சொல்லி ஏசாதே—அந்தோ ! புறப் பொருளிலா இன்பமோ துன்பமோ? கூடி மகிழ்வோருக்குக் குலாவிக் களிக்க இவை பெருந்துணை-யாம் இன்ப மாகலாம். பிரிந்து வாடுவாருக்கோ......

தோழி : உன் புண்ணில் கோல்விட்டு அலைக்கிருள் என்கிருயா? பெரும் பாவி ! பெரும்பாவி !

தலைவி : நையாண்டி பண்ணுதே. என்......

தோழி : பின் என்ன? பூ விற்பதற்கா இவ்வளவு புகைகிருய்?

தலைவி : ஐயோ பாவம் ! என்மேல் அவளுக்கு என்ன" பகையா? எப்படிப் பகை தோன்ற முடியும்? அயலாள் அவள்; என்னையே தெரியாதவள்.

தோழி : ஆனல்...

தலைவி : அறியாமையால் தன்னலத்தில் பிறரை அறியப் பொழுதில்லாமையால் பிறர் நலம் என்றே தன்-னலத்தைக் கருதிவிடுவதால் நிகழும் நிகழ்ச்சி இஃது. எங்கும் அப்படித்தான். அவரும் அப்படி! இவளும் இப்படி !

தோழி : இவள் வந்ததுபோல அவரும் வருவார். என்ன மணம்? என்ன அழகு? ஆனல், உனக்குப் பிடியாது. ஆதலின், வாங்கவில்லை; இந்தத் தெருவழியே வர வேண்டா என்று சொல்லிவிடுகிறேன்.

தலைவி : பாவம் ! ஏழைப் பெண் பிழைக்க வேண்-டாவா ? விலை கொடுத்து வாங்கு. பாதிரியின் அழகினை அறிவேன். நீயேனும் வாங்கி மகிழ்.

தோழி : அவளிடமா ?

தலைவி: அவள் என்ன செய்வாள்? எனக்காகவா நான் பேசுகிறேன்? என்னைப்போல எத்துணைப் பேர் வாடி வதங்குவார்கள்? தாமும் வாடத் தம்முடைய தலைவரையும் பழிக்க அன்றோ இந்தப் பாதிரிப் பூ அவர்களைத் தூண்டுகிறது? இத்துணைப் பாவமும் இந்த ஏழைப் பெண்மேல் படியுமே என்றுதான் என் மனம் நோகிறது.

தோழி: அவள் நினையாத ஒன்றுக்குத் தண்டனை வருமா?

தலைவி: பழத்தின்மேல் கல் விட்டெறிந்தது பறவையைக் கொன்றால் பாவம் வாராதா? தெரிந்து தொட்டால்தான் நெருப்புச் சுடுமோ? பிறர்க்கென்ன ஆகும் என்று பரிந்து வாழ்வதே பண்பாடு.

தோழி: தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்(று)
எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉம் சான்றோர் கடன்.

தலைவி: நிறையப் படிக்கிறாய்போலும்! உனக்கு எது தெரியாது?

தோழி: ஒன்று தெரியவில்லை.

தலைவி: என்ன!

தோழி: பூ விற்பவளுக்கு இவ்வளவு நையும் மனம், அவருக்காகவும் நைய வேண்டாவா? உன்னைப்போல அவரும் வாடுவர் அல்லரோ? இவ்வளவு கனிந்த உள்ளங்கள் வாழாது வாடுமா! வருவார்! வருவார்! பாதிரிப் பூ வீடேறி வந்ததுபோல அவரும் வீடேறி வருவார். ஆனால், உலகம் என்ன சொல்கிறது தெரியுமா? தன்னலத்தில்

மூழ்கிய உலகம் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளாம் உன்னிடமும் தன்னலமே காண்கிறது.

தலைவி : என்ன சொல்கிறது?

தோழி : அகமுடையான் அருகே இருக்கவேண்டும் என அழுகிருயாம்!

தலைவி : அவர்கள் இன்பத்தின் நுட்பம் அறியார். இன்பம், உண்பதும் உறங்குவதுமா? அருகில் இருந்தால்-மட்டும் இன்பமோ? செயலில் ஈடுபட்டு, உலகினை மறந்து, உழைத்து உதவுவதில் பிறக்கும் ஆறுதலான நிறை-மனமே இன்பம் - பிறர் வாழத் தான் வாழும் வாழ்வே வாழ்வு. காதல் வாழ்வு அதனாலேயே சிறந்தது. வேளாண்மை வாழ்வு இல்லை என்பதே வாட்டம். அதனை மறந்தாரே என்பதே துன்பம். பலபல இன்ப வுலகக்-கனவு காணும் மனம் உடைகிறது. அதற்கும் மேலாக இந்த ஏழை இளம் பெண்ணையும் இவ்வாறு பாவத்திற்கு உள்ளாக்குகிறோமே என்று மனம் நைகிறது. கூட்டுறவில் தழைக்கிறது அறவுலகம். தனி வாழ்வில் காய்கிறது பழி-யுலகம். அதனைப் படைக்கப் பிறந்து இதனைப் படைக்-கிறோமோ என்ற துன்பத்தினும் பெருந்துன்பம் எது?

★ ★ ★

இப் பாலை பாடிய பெருங் கடுங்கோ என்ற சங்கப் புலவர் 11 வரியில் இந்த நாடகம் எழுதுகிறார் :

அடைகரை மாஅத்து அல்குசினை ஒலியத்
தளிர்கவின் எய்திய தண்நறும் பொதும்பில்
சேவலொடு கெழீஇய செங்கண் இருங்குயில்
புகன்றுஎதிர் ஆலும் பூமலி காலையும்

அகன்றோர் மன்றநம் மறந்திசி னோர்என
இணருறுபு உடைவதன் தலையும் புணர்வினை
ஓவ மாக்கள் ஒள்அரக்கு ஊட்டிய
துகிலிகை அன்ன துய்த்தலைப் பாதிரி
வால்இதழ் அலரி வண்டுபட ஏந்திப்
புதுமலர் தெருவுதொறும் நுவலும்
நொதும லாட்டிக்கு நோம்என் நெஞ்சே.

—நற்றிணை 118.

# 7. அவளே மருந்து

*அவன்:* என்ன! இவ்வளவு இருட்டில் புறப்பட்டு-விட்டீர்கள்? வெள்ளி முளைத்ததும் வெளியேறவேண்டுமா! எங்குப் பயணம்?

*தோழி:* இரவெல்லாமா இங்கு அலைகிறீர்? உங்களுக்கு இரவும் பகலும் ஒன்றுதானே? எங்களை வழி-மடக்கி வம்பளப்பதுதான் நீங்கள் வாழக் கற்ற வழி போலும்!

*அவன்:* மனம் உருகும் என்பார்கள்; அது குளிரில் உறைந்துவிடுகிறதா! மனமிரங்காதா உங்களுக்கு? வன்-மனமாய்விட்டதா பெண்மனம்? காதல்...

*தோழி:* காசா, பணமா, கைப்பிடி சோறு, காதல் என்பது கேட்டதும் எடுத்து வழங்க? கண்டவர்க்கு எல்-லாம் வழங்கவா, மனம் இரங்கவேண்டும்? ஒத்த இருவர் ஒருமைப்பாடன்றோ காதல்?

**அவன் :** ஆம்! கண்டதும் காதல்! கடவுள் இயற்கை அஃது. ஒத்த இருவர் ஒன்றுகியது உங்கள் உள்ளம் அறியும். அவள் மனத்தில் காதல் தளிர்ப்பதாலேயே என் மனத்தும் காதல் தழைக்கின்றது.

**தோழி :** இந்தக் கல்வி எல்லாம் ஏழை இளம் பெண்ணின் மூளையில் ஏறவில்லை. பொழுதாகிறது. விடிவதன் முன்னர்த் தைந்நீராட வேண்டும்.

**அவன் :** அவளுந்தானே!

**தோழி :** தோழிமார் எல்லாருந்தாம். நேரம் ஆய்விட்டது. இதோ, மாடு மேய்க்கும் ஊரிளஞ் சிறுவர்களும் உறக்கம்விட்டு எழுந்து வந்துவிட்டார்கள்; வீட்டு மன்றத்திலிருந்து, எங்கள் செல்வமாம் எருமைக் கறவலை ஓட்டிக்கொண்டு போகிறார்கள், சிறுவீடு மேய!

**அவன் :** கன்றைத் தொழுவத்திலேயே கட்டிவிட்டு! பாவம்! அம்மா அம்மா என்று கதறுகிறது கன்று! எருமையும் திரும்பித் திரும்பிப் பார்க்கிறது; அத் தாயின் முகமெலாம் அன்பாக மலர்கிறது. அதனைக் காணும்கண், இந்த ஊருக்கு ஏது? அந்த எருமையை வற்புறுத்திப் பிரிப்பதோடு அதன்மேல் ஏறி வேறு போகின்றனர். பேரன்புடையாரைப் பிரிப்பதே பேரூரின் பெரும் பெருமை

**தோழி :** எருமையின்மேல் எமன் போலப் போவதே, எருமையூரில்,எருமை மக்களின் ஏற்றம் என்று பாடுங்கள்! உங்கள் பல்லவி அது! பனி நிறைந்த புல்லைக் காலாற மேய்ந்தால், நன்றாகப் பால் கறக்கும் என்பது உங்களுக்குத் தெரியாதா? கன்றுக்கும் பால் இனியாதா!

**அவன் :** கன்றுக்கு என்றுதான் கனிவு! ஏடும் தயிரும், வெண்ணெயும் நெய்யும், கன்றுதான் உண்டு

மகிழ்கிறது! நோன்பு முடிந்ததும், முழங்கை வழியே நெய் வழிய உண்பது கன்றுதான்! சிறுவீடு மேய்வது கறவைக்கும் கன்றுக்கும் களிக்கூத்து!

தோழி: கருங்கூத்து என்கிறீர்களா? சிவ சிவா! நோன்பு என்றால் நோவாது நுங்குவதா? உங்கள் நா என்ன நல்ல பாம்பா இவ்வாறு நஞ்சினைக் கக்க? உருப்போடும் மந்திரம் அன்பு! உடைப்பது எம் நெஞ்சு!

அவன்: கல்லா உடைய? (முகத்தை நெரிக்கிறான்.) தவறு தவறு! காண்கின்றேன் உண்மையை! கன்றுக்காகத்தான் வாழ்கின்றீர்கள். கன்றின் அன்பும் கறவை அன்பு மன்றோ பாலாய்ப் பொழியும்? ஊரென்றால் உங்கள் ஊரே; அன்புடையர், உங்கள் அருளால், உங்கள் காவலில் ஒன்றுகுவர்: ஊர் எல்லாம் இன்பம் பொங்கும்.

தோழி: இவ்வளவு உருக்கமாகப் பேசவேண்டுமா, இந்த ஏச்சுரையை?

அவன்: ஏச்சா? இஃது என் மூச்சு; உயிர்ப் பேச்சு. முன்னே வற்புறுத்திப் பிரிப்பதெல்லாம் பின்னே பிரித்துக் கூட்டவே. ஊடல் இருந்தா லன்றோ கூடல் சிறக்கும்? அதுதான் நோன்பு. நானும் நோற்கிறேன்.

தோழி: எங்களைச் சிறு பிள்ளைகள் என்றீரே! அந்தமட்டும் மாடு மேய்க்கும் சிறுபிள்ளைகள் என்றீர்! நீங்களுமா சிறுபிள்ளை, நோன்பு நோற்க!

அவன்: கள்ளமில்லாச் சிறுபிள்ளைதான் கடவுளின் வடிவம்! சிறுவீடு மேய்தல், உங்கள் நிலையை மின்னல் வெட்டின் வெளிச்சம் போலத் திடீர் என விளக்கியது.

**தோழி :** கன்றும் கறவையுமே காதலர் ; சிறுவரே தோழிமார் ; பிரிப்பதே காவல் ; கன்று விடுவதே ஒருங்குகூட்டல் ; பாலே இன்பம்—கற்றுக்கொண்டேனு ? நான் நல்ல மாணவிதானே ?

**அவன் :** கிளிபோலச் சொல்வதைச் சொல்லி என் பயன் ? சிரிப்பாகத்தான் முடியும் ! காதற் கருத்தைக் காணவேண்டும்.

**தோழி :** கண்ணு கருத்தைக் காணும் ?

**அவன் :** நோன்பு நோற்க நோற்க அந்தக் கண் திறக்கும்.

**தோழி :** அப்படியானல் நோன்பு நோற்றுவருகிறேன். வழி விடுங்கள்.

**அவன் :** காயா, பழமா ?

**தோழி :** "கிட்டாதாயின் வெட்டென மற" என்பது தெரியாதா ? நீங்கள் சொன்னதுபோல நாங்கள் சிறுவர்கள். அவளோ எங்கள் குடியின் தலைப்பெண் ; குறுமகள்; பச்சைக் குழந்தை ; உங்கள் வேதாந்தமும் தெரியாள் ; காதற் கதையும் அறியாள்.

**அவன் :** அவள் அறிவாள் என நீங்கள் அறியீரோ ! இளையவள், என்றும் இளையவளாய் வாழ்க ! அன்பு பெருகப் பெருக வளர்ந் தணைத்த பெருந்தோள்கள்— பேரின்பம் பேரின்பம் !

**தோழி :** என்ன பழி ! என்ன பழி ! வாய் கூசாதோ ! கள்ளமறியாக் கன்னிப் பெண் ! கன்னி நோன்பு நோற்கின்ருள் ; எங்களோடு, தைந் நோன்புக்காகக் கதிரவன்

எழுவதன் முன்னர்ச் சில் என்ற திருக்குளத்தில் குளிக்க-வேண்டும். தோழியர் காத்துக்கொண்டிருப்பர்.

அவன்: நான் காத்துக்கொண் டிருக்கவில்லையா? கணவனுக்காகத்தானே தைந் நோன்பு!

தோழி: கணவன் என்றால் நீர்தாம்போலும்! மலை-மேல் ஏறி மணாளனைப் பிடிக்கவேண்டுமா? எங்கள் ஊரில் செல்வப் பிள்ளைகள், கண்ணுக்கினிய காதற்-பிள்ளைகள் இல்லையா?

அவன்: இனியா தேடவேண்டும்? முன்னரே முடிந்த முடிபு!

தோழி: நீர் முடித்த முடிபா?

அவன்: கடவுளும் என் கண்ணும் கண்ட முடிபு.

தோழி: உம்கண் காணாதா!

அவன்: என் கண், என் உயிர், உங்கள் உயிர்த்-தோழி!

தோழி: கணவனை முன்னரே கண்டிருந்தால், கன்னி நோன்பு நோற்பாளா? "அன்பான கணவனூர் அமைந்திடுதல் வேண்டுமம்மா! இன்பம் அதுவன்றோ அருளேலோர் எம்பாவாய்!" என மணலாலே நாங்கள் வகுத்து வழிபடும் தாய்க்கடவுளிடம் வேண்டிக்கொள்வது, காதற் கணவனை எதிர் காலத்தில் அருளவே அன்றோ? "இனி அருளாய்" எனப் பாடுவாளா? வேறொரு கணவனை வேண்டுவதாக முடியாதா? கடவுளையுமா ஏமாற்றுவாள்?

அவன்: கடவுள் அறியாத கருத்தா? காதலுக்குத் தான் கள்ளம் ஏது?

**தோழி:** உம்முடைய கள்ளப் பேச்சுத்தான் ஒன்றும் விளங்கவில்லை.

**அவன்:** கள்ளம் என்ன? கவடு என்ன? நாணத்தால் அவள் ஒன்றும் கூறுவதற்கு இல்லை.

**தோழி:** எங்களுக்கும் மறைவர்?

**அவன்:** நீங்கள், அவளிருந்தால் உயிர் பெற்ற உடல்போல் தளிர்த்து, அவள் பிரிந்தால் உயிரிழந்த உடல்போல் வாடும் இயல்பினர்! அவளே உங்கள் பொலிவு! அவள் எதிர், உணர்ச்சி மிக்குப் புத்துயிர் பெறுகின்றீர்கள்! இழை யணிந்து சிறப்பதுபோல, இலங்கிப் பொலிகின்றீர்கள். அவளே உயிராக, அவளே ஒளியாக, அவளே அணியாக ஒன்றுபட்டது உங்கள் ஆயமாம் தோழிமார் கூட்டம். இதனை நான் அறிந்திருக்க அவ ளறியாளா?

**தோழி:** அதனால் என்ன?

**அவன்:** உங்களோடு சேர்ந்தால் நீங்களாகவே ஆகிவிடுகின்றாள்; நீங்கள் விரும்புவதனை விரும்புகிறாள்; நீங்கள் செய்வதனைச் செய்கிறாள். ஆதலின், நீங்கள் தைந் நீர் ஆடினால் அவளும் ஆடுகின்றாள். அஃது அவள் பெருமை! பரிவு! அன்பு! உலகம் முழுதும் விளையாட்டுக்-குடும்பமாய் இன்ப அன்பறிவொளியை வளர்க்க-வேண்டும். அந்த எதிர்காலச் சமுதாயத்தை இவ்வாறு படைக்கின்றாள்; தன்னைத் தானறப் பெறத் தவஞ் செய்-கிறாள்; உங்கள் அன்புக் கூட்டத்தை அவள் வளர்த்துப் பழகுகிறாள்.

**தோழி:** புகழ்வதுபோலப் பழிக்கின்றீரா? நெஞ்-சொன்று நினைப்பது; வாயொன்று பேசுவது; உட-

லொன்று செய்வது. என்ன காட்சி! என்ன உயர்வு! நெஞ்சில் நீர்; செயலில் நாங்கள்; வாயில் பாவைப் பாட்டு: எதிர்காலச் சமுதாயம் வாழும் வழி இதுதானே!

**அவன்** : தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராம் பெரியோர், தாம் அழிய மாறியும் பிறருக்கென வாழ்வர். "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பது தெரியாதர்?

**தோழி** : உயிரையும் விடுவர்; ஆனல் நீர் சொல்லும் நாணத்தைமட்டும் விடமாட்டார் போலும்!

**அவன்** : உயிரினும் சிறந்தது நாண். அதனை விட்டுப் பேசினல் பிறர் மனம் நோகும்; மானம் கெடப் பேசுவதாய் முடியும். பேச்சுக் கெட்டாததனை எவ்வாறு பேசுவது? கடவுட் காதலைக் கதையாகச் சொன்னல், நாயின் கதையாகவே முடியும். பேசாப் பெரு மௌனமே நாணம்; அதுவே பெண்ணின் பெருமை. நாண மில்லாப் பெண், பெட்டை நாயும் பேழ்வாய்ப் பேயுமே! பெண்ணுக்குத் தக்கது, பேசாத பெரு நாணம். அவளும் நீங்களும் ஒன்ருனல், அவள் உணர்வு உங்கள் உணர்வு ஆகாதா? நீங்கள் உய்த்துணர மாட்டீர்களா? பிறந்த குழந்தையின் பேச்சைக் கேட்டா, தாய் அதனை அறிகிருள்? பேச்சா விளக்கும்? அஃது உண்மையில் உண்மையை மறைக்கும் திரை. பேசாத பெருமௌனம் பேசுவதுபோல் பேச வல்லார் யார்? பேசாத பெரு நாணின் பெரும் பேச்சைப் பெண்ணெடு பெண்ணய், அன்பொடு அன்பாய், உயிரோடு உயிராய் இயைந்த நீங்கள் அறியவில்லையானல், யார் அறிவர்?

**தோழி** : (தனக்குள்) ஆனல், நாங்கள்மட்டும் நாணம் விட்டு, "வாருங்கள்; வந்து எங்கள் தலைவியைத் தழுவுங்கள்"

என்று வேண்டவேண்டும். (வெளிப்படை) நாணினும் சிறந்தது கற்பன்றோ? தைந் நீராடி வழிபடும் பாவைக் கடவுளையுமா பழம்பாட்டுப் பாடி ஏமாற்றுவாள்? எங்கள் தலைவியை நாங்கள் அறியோமா? அவ்வாறு வஞ்சனை செய்யாள்.

**அவன்:** யான் என்ன, இறைவியையும் "வஞ்சிக்கிறாள்" என்றா சொன்னேன்?

**தோழி:** "நல்ல கணவனை நாளைநீ தாராயோ
எல்லாமுன் அன்பன்றோ அருளேலோ ரெம்பாவாய்"

என்று பாடுவாளா?

**அவன்:** உங்கள் பாட்டு வேறு; அவள் பாடுவது வேறு.

விரும்பிப்போத் தந்திவன் தழையுந்தா ருந்தந்தான்
வருவதெலாம் நின்னருளே வாழியேலோ ரெம்பாவாய்"

என்று பாடியே முழுகுகின்றாள்.

**தோழி:** "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை"

என்பதன்றோ கற்பு நெறி? கணவனை அறிந்தபின் கடவுளைத் தொழுவது கற்பு நெறியோ?

**அவன்:** கடவுளைத் தொழுவதும் கற்பு நெறியே. கணவனைவிட்டுத் தனியே வேண்டுகோள் விடுத்துத் தொழுவதே வேண்டாதது. கணவனோடு கூடி வேண்டுவது, தவறன்று. இங்கே, வேண்டுகோள் இல்லை(உள்ளது நன்றி யறிவே; அதிலும், வியப்புடன் எழும் நன்றி யறிவு.

**தோழி:** வியப் பேன்றோ!

**அவன்** : "தாயே! உன் தாய்மை அன்பு என்னே! என்னே!! நோன்பு நோற்றுக் கணவனைப் பெறுவார் பிறர். எனக்கோ, இந்த நோன்புக்கு முன்னரே, எளிதில் அருள் செய்தாய்: அவரே விரும்பி வந்தார். உனக்குத் தழையும் தாரும் சாத்த வருவதுபோல் அவர் என்முன் வந்த நிலையை உன் வழிபாடு செய்யும் போதன்றோ அறிகின்றேன்! என்னே வியப்பு? என்னை அணிசெய்து-காண அன்புறையாய்க் காதலுறையாய்ப் பூப் பாவாடை-யும் பூமாலையும் கொண்டுவந்து, கடவுளன்பு நிறைந்த தூய உள்ளத்தோடு மனமொத்து வாழத் தந்தாரே! என்னே உன் அருள்?" என்று பாடுகிறது, காதல் கனிந்த அவளது அருள் உள்ளம். இது வேண்டும், அது வேண்டும் எனக் கடவுளை வேண்டுவதன்று இது. நிறையுள்ளத்தில் குறை-யேது? ஆதலால், கடவுளைப் பாடுவதில் வஞ்சமேது? கற்பு நெறியைக் கடத்தல் ஏது?

**தோழி** : களவும் கற்புமாக இவ்வாறு முடிந்தபின், என்ன செய்ய விஞ்சிக் கிடக்கிறது? எங்களுக்குப் பொழு-தாகிறது. (போகிறாள்; திரும்பிப் பார்த்துத் தனக்குள்) ஐயோ பாவம்! என்ன தூய அன்பு! என்ன உயர்ந்த குறிக்-கோள்! தைத்திங்கள் பாவை நோன்பு இவ் விருவரையும் ஒன்றாக்கும்.

**அவன்** : அந்தோ! என்ன, இவள் மனம் இரங்-காதா? காதலொத்தால் போதாதா? சடங்குகள்—வீடு-விட்டு வீடு போதல் — என்ன என்ன இடையீடுகள்! பெற்றோர், பெரியோர், ஊரோர் ஒன்றுதல் வேண்டும், காதலர் ஒன்றாகாமற் போனாலும்! என்னே உலகு? எவ்-வாறு இவற்றை எல்லாம் ஒன்று கூட்டுவது? அவளது

உயிர்த்தோழி இவள். இவள் வழிக்கு வந்தால் எல்லாம் எளிதாகும். என் உயிரே போய்விட்டதுபோலப் போய்விட்டாள் இவள். இனித் தலைவியே தஞ்சம். அவள் செய்த இந்தக் காதல் நோய்க்கு அவளேமருந்து; வேறு யார் அறிவர்? வேறு வழி இல்லை.

"பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து"

"மன்ற எருமை மலர்தலைக் கார்ஆன்
இன்தீம் பால்பயன் கொண்மார் கன்றுவிட்டு
ஊர்க்குறு மாக்கள் மேற்கொண்டு கழியும்
பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து
தழையும் தாரும் தந்தனன் இவன்என
இழையணி ஆயமொடு தகுநாண் தடைஇத்
தைஇத் திங்கள் தண்கயம் படியும்
பெருந்தோள் குறுமகள் அல்லது
மருந்துபிறிது இல்லையான் உற்ற நோய்க்கே"

—நற்றிணை 80.

[கார்- கருமை; போத்தந்து-வந்து.]

# 8. விசுவருப நாடகம்

## 1

உலகம் நம் எதிரே தோன்றுகிறது. காலையில் கடலருகே விழித்தெழுகிறோம். என்ன அழகு! செக்கச்-சிவந்த செவ்வானம் கதிரவனை எதிர்கொண்டழைக்க அமைத்த தோரணக் கோலமாகக் காட்சி அளிக்கிறது. மிகப் பரந்த கடல்—அப்பாலைய கரையே தெரியாது முடிவிலாது ஓடும் கடல்—இமய மலையையே தன்னுள் மறைத்து விழுங்கிவிடக் கூடிய பேராழம் மிக்க பெருங்-கடல், அதோ எதிரில் தோன்றுகிறது. அதனோடு சேர்ந்தாற்போல அதனைத் தொட்டுக்கொண்டு மேலே நீல வானம், கண்ட இடமெல்லாம் கண்குளிரக் காட்சி அளிக்கிறது. நிறை திங்கள் முற்றி நிற்கிற திருநாள் இன்று! கண்குளிரக் காணும் பைங்கதிர்ச் செல்வனும் சந்திரன், மேலைப் புறத்தில் மறைந்துகொண்டிருக்கிறான். நீலைக் கடலின் வண்ணப் பெருமுகட்டில் உலகுக்கெல்லாம்

ஒரு கண்ணும் சூரியன் எழுகின்றான். ஒருங்கு நிற்கும் இருகண் என இவை தோன்றுகின்றன. கதிரவனார் ஒளி பட்டதும் புத்துயிர் பெற்று உலகம் எழுகிறது. பறவைகள் பாடுகின்றன. விலங்குகள் மூரிவிட் டெழுகின்றன. மக்கள் தத்தம் தொழிலின்மேல் செல்கின்றனர். ஒளி குன்றி இருட்டிக்கிடந்த உலகம், பல பல நிறங்களுடனும் பலபல வடிவங்களுடனும், மெல்ல மெல்லப் பனிப் படலத்திரையை நீக்கிக்கொண்டு தோன்றுகிறது.

இவ்வாறு எல்லோரும் ஒன்றாக விழித்து, ஒன்றாகப் புற இருள் நீங்கப்பெற்று விளங்குகின்றனர்; எல்லாம் விளங்குகின்றன. இப்படி, ஓர் ஒற்றுமை எங்கும் வெளியாகிற வியப்பில் நாம் மூழ்குகிறோம். இந்த அற்புதச் சக்தி, கதிரவனாய் எதிரே வடிவம்கொண்டு, நம்மை வாழ்வித்துக் காட்சி அளிக்கிறது. அம்மட்டுமா? குழவிப் பருவம்முதல் நாம் வளர்ந்த வளர்ச்சியும், நாம் அறிவோம் அன்றோ? கருவிலிருந்த குழவிக்கும் கம்பனுக்கும் என்ன வேற்றுமை! என்ன வேற்றுமை! புன்னுனைப் பனிபோல நின்ற உயிர்ச்சாறு, கம்பராய், வள்ளுவராய், சேக்கிழாராய், தொல்காப்பியராய் வளர்ந்த வளர்ச்சி, கடவுள் வளர்ச்சியே ஆம். நம் முயற்சியால் எழுந்ததோ நம் வளர்ச்சி? நாம் அறிவோமா நம் மயிர்த்துளையின் எண்ணிக்கையை? தம் உடலமைப்பின் விசித்திரத்தினையேனும் முற்றும் அறிந்தோர் யார்?

இதனை வளரும் மரமும் அறியாது; நாமும் அறியோம்; சக்தியே அறியும். உலகில், எங்கும் என்றும், இந்த வியத்தகு செயலைக் காண்கிறோம். சிறுமீன் சினையினும் சிறியதான ஆலம் வித்தும், பெரியதொரு மரமாய் வளர்ந்து, அரசர்கள்தம் பெரும்படையும்

உள்ளடங்கித் தங்க நிழல் தரவில்லையா? ஒரு புல்நுனைப் பனிநீர்த் துளிபோன்ற கரு, யானையாகவும் திமிங்கிலமாக-வும் பெருகவில்லையா? எங்கும் ஒரே சக்தி இவ்வாறு இயங்குகின்றது: மலையின் பெருமை திண்மை—வானத்தின் பரப்பு நிறைவு—நீரின் தன்மை நெகிழ்ச்சி—மின்னலின் விளக்கம் ஆற்றல்—அணுக்குண்டு வெளியிடும் பரமாணு-வின் ஊழிக்கூத்து—இவை எல்லாம் அந்த அற்புதச் சக்தியின் பேராற்றற் பெருவெள்ளமே ஆம். பலநிறம் கொண்டு பலபல வடிவாய்ப் பலபல மணத்துடன் தேன்-விருந்து ஊட்டும் மலர்களின் அழகே அழகு! செவ்வா-னத்தின் செவ்விய அழகு—மானின் மருண்ட பார்வை-யில் வெள்ளமிடும் அழகு—மயிலின் தோகையோடு-விரியும் அழகு—பெண்ணின் ஐம்புல விருந்தாம் பேரழகு—இவை எல்லாம் அந்தஅற்புதச்சத்தியின் அன்புவெள்ளம். அந்தச் சக்தியே தாய்மையாய் உலகினை வளர்க்கிறது. அம்மையப்பன் என இவ்வாறு ஆற்றலும் அன்புமாய் நிறைந்த பெரும்பொருளைப் போற்றலாகாதா?

இவ்வாறு உயிருள்ள பொருளிலும் உயிரில்லாப் பொருளிலும் ஒருங்கு நிறைந்து நீக்கமற நிறைகின்ற இந்த ஒற்றுமைக் காட்சியை என் என்பது? இதனையே விசுவரூப தரிசனம் என்பர் முன்னோர்: இதனை அருச்சுனன் கண்ணனிடம் கண்டான்; கொடிய சூரபன்-மனும் போர்க்களத்தில் எதிர் நின்ற முருகனிடம் கண்டான். பெருந்தேவனார் என்ற பெரும் புலவரும் காண்கிறார் இந்த ஒற்றுமைக் காட்சியை. அவர் கண்ணுக இந்த நாடகத்தை நாமும் காண்போம்.

## 2

கடலையும் தாங்கி நிற்கும் கற்றரை, கண்ணுக்கும் தோன்றாது கடலடியில் பாதாளமே என்று சொல்லப்-

படலாம்படி பரந்துகிடக்கும் பார்நிலம்—இதுவே, இம்மா-நிலமே எல்லாமாய் நிற்கும் பெரும்பொருளின் அடிநிலை; செவ்விய திருவடி; சேவடி. எல்லாம் நிற்பதற்குள்ள இடமே நிலம் எனப் பெயர்பெறும். சிவன் திருவடி அன்றோ அத்தகைய நிலையான இடம்? ஓரடியால் அம்-மண்ணினை அளந்தான் மாயன் என்று புராணம் பேச-வில்லையா? கருத்தும் கலங்கும் ஆழத்தில், எங்கும் பரந்து,மேலும் கீழும் ஒன்றாக நிற்கும் நிலம்—நாம் காணும் தரையும், காணாத் தரையுமாம் இந்த நிலம்—இவ்வாறு விளங்குகின்ற காட்சி—மலையும் ஆழமுமாகக் கண்ணைக் கலக்கும் தோற்றம்—இஃதே ஆற்றலின் அடிப்படை. ஆனால், அங்கும் ஒரு செம்மை—ஓர் அழகு—ஒரு தாய்மை அன்பு—தோன்றுகிறது. அகழ்வாரைத் தாங்கும் நிலம் அன்றோ அஃது? அறிவும் ஆற்றலுமாம் அடிப்படையில் அனைத்தும் மலர்கின்றன. ஆனால், மலர்வது தாய்மை அருள். சேவடியின் அடிப்படை நிலையையும் செம்மையாம் அழகிய இன்ப அன்பினையும் இவ்வாறு உய்த்துணர்தல் வேண்டும்.

இயங்குகின்ற அப் பெரும்பொருள் எது? அவன்-தான். அவன் உடுத்துக்கொள்ளும் உடையாம் ஆடை-யும் படபட என அசைகின்றது; முழங்குகிறது. ஆம்—நம் காதுக்கும் கேட்கிறது. சேவடியைத் தீண்டி, மேலே, அதோ தோன்றுகிறது. செவ்வான் கதிரவன் ஒளியில் திகழும் நிலையே பொன்னுடை. அவனைப்போல அவ-னுடையும் அளவற்று எங்கும் விரிந்து கிடக்கிறது. பவ்வம் என்பது பரந்து கிடப்பது. எது அது? கடலே ஆம். அதுவே அவன் ஆடை. வானைப் பாயைப் போலச் சுருட்டுவது ஒரு மாய வித்தை. நீரை ஆடையாகச்

சுருட்டிக் கட்டிக் கோலம் கொள்ளுவதும் ஒரு மாய வித்தையே. அவன் உடுக்கும் உடுக்கை கடலே ஆம். நீரால் உலகினை அவன் வாழ்விக்கும் சிறப்பும் ஆற்றலும் இங்கே தோன்றவில்லையா? என்ன ஒளியான நீர் இது! கருங்கடல் நீர்! ஆனாலும், கையில் அள்ளினால் தெள்ளத் தெளிந்த நீர்—அற்புதம்! அற்புதம்! கடலருகே நிற்கும் நம்மீது கடவுள் நீரைத் தெளித்து நம் உள்ளமும் உயிரும் குளிர்ந்து தூய்மையாகும்படி தூவுகின்ற நீர் அன்றோ இஃது! இதோ இச் சிறு துளியில் சூரியனும் உலகமுமே நிழலிடுகின்றன. அழகே அழகு! மழையாய்த் தூவுகின்ற நீரும் இந்தக் கடல்நீரே அன்றோ?

அவனும் அப் பெரும்பொருளின் இயக்கமும்கேட்டோம். உயிரிலாப் பொருள்கள் நின்ற நிலைக்கு மேலாக உயிருள்ள பொருள்கள் தோன்றி இயங்கி முழங்குகின்றன; அப்-பெரும் பொருளின் ஆற்றலை முழங்குகின்றன. வளை—சங்கு—நரல்கிறது; ஒலிக்கின்றது: ஈதன்றோ கடலின் பெருமை! நமக்குக் கடல் தரும் பரிசில், அப் பேராற்றல் தரும் பரிசில், இப் பொருளுலக வாழ்க்கையே. முத்தும்-சங்குமாய்ப் பொருளுலக வாழ்வு பொலிவுபெற்று அழகு-பெறவில்லையா?

கடல் என நிற்பது வெறும் தண்ணீர் அன்று. இயக்கமே வடிவமானது அது. காற்றும் நீரும் கலங்கி வீசும் அலைகளால் ஒளிர்வது கடல். அந்த அலைவீசும் தூநீர் அன்றோ நம்மேல் படுகிறது! எனவே, காற்றும் அங்கே தோன்றுகிறது. இயக்கமே காற்று என்ற பூதத்தின் வடிவம்; உயிரிடையே தோன்றும் பஞ்சப் பிராணனும் இயக்க வடிவமே ஆம். இயங்குகின்ற உயிர்களும் இங்கே

முழங்குகின்றன. இயங்குகின்ற ஆட்சியின் கோலமன்றோ இவ்வாறு முழங்குகிறது? காற்றிடையே அன்றோ அந்த ஒலியும் பரவி நம் காதில் வந்துவிழுகிறது?

காற்றினும் நுண்ணிதாக அமைந்த விசும்பே இவ்வொலிஅலை வீசும் இடம் என்பர் இந்நாளைய மக்கள். அந்த விசும்பே இவ் வொற்றுமைக் காட்சியில் தோன்றுகிறது. அரசர்க்கு அரசனும் பெரும் பொருளின் சங்கொலி கேட்டோம். அவன் திருவுருவம் முழுதும் தோன்றுகிறது. பருப்பொருளின் நின்றும் நுண்பொருளில் செல்கின்றோம். உருவத்தினைத் தாண்டி அருவத்தை எட்டுகிறோம். எங்கும் நீக்கமற நிறைகின்ற வெட்டவெளி—வானம்—விசும்பு—இதுவே அவனது திருமேனி. இந்த விசும்பு பூதாகாயமாய் மனோகாயமாய் சிதாகாயமாய் வளர்ந்தோங்கும். எந் நிலையிலும் நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரணனந்த சிற்சுகோதயவிலாசம் இதுவே ஆம். வானத்தினை நீலவானத் தோற்றமாகக் கொண்டு அந்த நீலக் காட்சியே அவன் திருமேனி எனக் கண்ணுக்கரியவனைக் கண்டும் களிக்கலாம். நீல்வானம் வெறுந் தோற்றம். ஆனல் அழகிய கடவுட்காட்சி. அதற்கும் உள்ளாக அவனுக அப் பெரும் பொருளின் உண்மை வடிவம் ஒளிர்கின்றது; விசும்பு மெய்யாகக் கொண்டு திகழ்கின்றது அஃது.

எங்குமாய்ப் பரந்த இப் பெருவெளியை இடமாகக் கொண்டு விளங்குபவை எத்தனை எத்தனை விண்மீன்கள்? எத்தனை எத்தனை கோள்கள்? அக் கோள்களில் எத்தனை எத்தனை உயிர்கள்? முன் என்றும், பின் என்றும், மேல் என்றும், கீழ் என்றும், வலம் என்றும், இடம் என்றும் கற்பனைகள் பல எழுகின்றன. திசைகள் என்றும் பேசு-

கின்றோம். பல பல உலகக் காட்சிகள். பல பல உயிர்களின் தோற்றம்—அவற்றின் பல பல இயக்கம்—அவற்றின் பல பல வரலாறு—உலக வரலாறு இவ்வாறு எல்லாம் எழுகின்றது. எங்கும் நிறைந்த பெரும்பொருளின் செயற்பாடே இவை அனைத்தும். ஆயிரம் கையுடையான் அன்றோ அவன்? அப் பெரும்பொருளாகும் அவனது கைத்திறமே இவை எல்லாம். எட்டுத் திசையும் எட்டுக்கையாக எண்டோள் வீசிநின்றாடும் கூத்து இது. திசை கையாகும் காட்சி! கருத்துக்கும் எட்டாக் காட்சி. விஞ்ஞானத் துறைகள் பலவும் கூறும் கருத்தின் ஒருமைக் காட்சி இது.

கற்றரை—கருங்கடல்—கருவானம்—என்று இவ்வாறே அடுக்கினால் இங்கு ஒளி வேண்டாவா? கண்ணாகி நின்று காட்டி, உள்நின்று காண்பவனும் அவனே—அப்பெரும்பொருளே. பெருந் தீச்சுடராம் சூரியன் உலகுக்கு எல்லாம் பெருவிளக்கு. பைங்கதிர் மதியம் முதலானவை அந்த விளக்கின் எதிர் ஒளிகள். இவை இரண்டாலும் உலகம் ஒளிபெற்றுக் கண்பெற்றுக் காண்கிறது. பெரும்பொருளாம் அவனும் அவையாய் எல்லாவற்றையும் காண்கிறான். பைங்கதிர் மதியமும் சுடரும் அவன் கண்கள். காண்கிறவன் அவன்; நாமும் காண்கிறோம் என்கிறோம்—நம் கண்ணாக நின்று அவன் காட்டிக் காண்கிற நுட்பம் என்னே என்னே?

## 3

இயக்கம் என்றோம்; முன்பின் என்றோம். இங்குத்தான் காலம் என்ற கருத்தும் பிறக்கிறது. வரலாறு பிறக்கிறது. காலமும் இடமும் கலந்த மயக்கமே உலகம். கண்ணாய் நிற்கும் சுடரும் திங்களும் காலத்தைக் காட்டும்

உலகப் பெருங் கடிகாரங்கள். எனவே, காலமாய் அமைந்து, காலத்தையும் கடந்து அப்பெரும் பொருள் களிநடம் புரிகிறது—அவன் புரிகிறான்; இவ்வாறு இடமும் காலமுமாக எல்லாம் இதனுள்ளே—இவனுள்ளே விரிகின்றன. இயன்று வரும் படைப்பும் காப்பும் வரலாறும் இவ்வாறு முக்காலக் காட்சியாக விளங்க இப்பெரும்பொருள் ஒளிர்கின்றது—இவன் ஒளிர்கிறான். எல்லாப்பொருளும் எல்லாக் காலமும் எல்லாக் கால நிகழ்ச்சியும் ஒருங்கே தோன்றுகின்ற அற்புதக் காட்சியாக இப்பெரும் பொருள்—இவன்—தோன்றுகின்ற வியப்பே வியப்பு! இயன்றுவரும் பொருள்களோடு எல்லாம் பயின்று இது நிற்கிறது—இவன் நிற்கிறான். இவ்வாறு அனைத்தையும் தனக்கு இடமாகக்கொண்டு உலவி வருகிறது இப் பெரும் பொருள்; உலவி வருகிறான் இவன்.

அவை, தனக்கும் தன் திருவிளையாடலுக்கும் இடமாகும் நிலை ஒன்று. தான் அவற்றிற்கு இடமாக ஆதாரமாகும் நிலை மற்றொன்று. இஃது, அனைத்தினையும் முடிவில் ஒடுக்கி அவை எல்லாம் தன்னிடத்திருக்க நிற்கின்றது—இவன் நிற்கின்றான். ஒடுங்கி நிற்கும நிலையாம் ஒடுங்கியாக இவன் ஒளிர்கின்றான்; சர்வசம்ஹார மூர்த்தியாக மிளிர்கின்றான். பின்னும் இவ்வாறே தோன்றி மறையும் உலகத் திருவிளையாடல் இந்த மாயாவியின் வழியே நடந்து வரும். "ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்" என்பர் மெய்கண்டார். × சிவஞானபோதம், சூத் 1.

நாராயணன் என்பதற்கு, "நாரம் அல்லது உயிர்ப் பொருள்களை இடம் ஆகக் கொண்டவன்; அவற்றிற்கு இடமாக இருப்பவன்" என்ற இருபொருள் உண்டு. இந்த இரண்டு பொருளையும் விளக்குவதுபோல இயன்-

றன எல்லாம் பயின்றும் அகத்தடக்கியும் பெரும்பொருள் விளங்குகிறது. அவையேயாகியும், வேறே தானே ஆகியும், அவையும் தானுமாய் உடனாய்க் கலந்தும் பெரும்பொருள் நிலைத்து நிற்கிறது; அவன் நிற்கிறான். அவையே ஆகி நிற்கும் நிலையும், உடனாகி நிற்கும் நிலையும், இதுவரை கூறப்பெற்றன. "என்னை இன்றி நீ இல்லை" என்று ஆழ்வார் பாடுவதன் பொருள் இவ்வாறு விளங்குகிறது. யான் இல்லையானால் அவன் மூளி.

உயிரில் பொருள்கள் இவனின்றி இல்லை; உயிர்களும் இவனின்றி இல்லை. இவற்றினைப் [1]படைப்பவனும் [2]காப்பவனும் [3]அழிப்பவனும் [4]மறைப்பவனும் [5]இவர்களை அருள்பவனும் அப் பெரும்பொருளாம் முதல்வனே. பெரும் பொருளின்றி ஒன்றும் இயங்குவது இல்லை. இப் பொருள் அறிவிலாப் பொருளாக இருத்தல் இயலாது. சிற்றறிவுடைய பொருளாகவும் இருத்தல் இயலாது. பேரறிவுடைய பொருளாதல் வேண்டும். இந்த அறிவு நாம் அறிந்த சுட்டறிவு அன்று. அனுபவமாய் விளங்கும் மெய்யுணர்வே இங்கு வேண்டும். சித்துவடிவம் இஃது. அனைத்து உணர்வையும் இயக்கி வைக்கும் இப்பேருணர்வு உணர்வின் தலையாய் மணிமுடியாய் அனைத்துணர்வின் பிழம்பாய் விளங்குதல் வேண்டும். மனிதன், தன் அறிவினைப் பாராட்டிக்கொள்கின்றான். ஆதலின், எல்லாம் ஆய் விளங்கி ஆளும் இப் பொருளை "அவன்" எனப்பேசுதல் மனிதப் பிறப்பின் இயல்பு. பேருணர்வுப் பிழம்பினை வேதமுதல்வன் என்ப. அனைத்து அறிவு நூலுக்கும் இவனே முதல்வன் என்று எங்கு உள்ளாரும் கூறுவர். "சாஸ்திர யோனித்வாத்" என்று பிரஹ்ம சூத்திரமும் கூற

வில்லையா? எத்தகைய அறிவும் அவனிடமே அவனாக முடியும். "கற்றதனா லாய பயன்என்கொல் வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்" என்பர் திருவள்ளுவர். எல்லா நாட்டு வேதங்களின் ஒற்றுமையும் இங்கு விளங்கு-கிறது.

## 4

ஆண்டவன் எண்வடிவினன் என்பர். இக் கொள்கை இதுவரை கூறிய உண்மையையே வற்புறுத்துகிறது எனலாம். நிலம் என்பது பிருதிவி ஆம். காற்றி லையும் கடல் என்பது அப்புவும் வாயுவும் ஆம். சுடர் என்பது சூரியனே அன்றித் தேசசும் ஆம். விசும்பு என்பது ஆகாசம் ஆம். இவ்வாறு பஞ்ச பூதமுமாய் ஆண்டவன் அமைந்துள்ளான் என்பது கூறப்பெற்றது; திங்களும் கதிரவனுமாக அவன் விளங்குகிறான் என்பதும் சுட்டப் பெற்றது. இயன்ற எல்லாம் ஆம் உயிர்வகை என்னும் இயமானனாகவும் இறைவன் நிறைந்துள்ளான் என்ப-தும் விளக்கப்பெற்றது. எனவே, எண்வடிவினன் என்ற உண்மை பேசப்பெற்றுள்ளது.

"எல்லாமாய் மாறி வருவனவற்றின் அடிப்படையாய் உள்ளான் அவன்" என அவனது சத்துநிலையாம் உண்மை நிலையும், அனந்தமாய் முடிவிலாது நீக்கமற நிறைகின்ற பரிபூரண நிலையும் கண்டோம். வேதமுதல்வன் என்பத-னால் சித்துநிலையாம் அறிவுநிலை விளங்குகிறது. ஆனந்த நிலையாம் இன்ப நிலையையும் கூறுவதே இங்கு முடிந்த முடிவு. சத்தியம் ஞானம் அனந்தம் பிரஹ்மம் என்றும் சத்சித் ஆனந்தம் என்றும் கூறப்பெறும் உண்மைகள் இவ்வாறு இங்கே வற்புறுத்தப்பெறுகின்றன. உண்மை, எங்கும் ஒன்றாகத்தானே விளங்கும்!

இன்பம் எங்கே? அடியின் செம்மையும் இயக்கத்தின் அருளும், கருவினைத் தாய் காத்தல்போல் காக்கும் அன்பும், இன்பத் திருவிளையாடல்களே ஆம். பிரஹ்மானந்தத்தைக் கூறவந்த உபநிடதங்கள் அரசன் இன்பம், பேரரசின் இன்பம், தேவ இன்பம் என்று படிப்படியாய் இன்பம் உயர்வதனைக் காட்டி மேலும் முயன்று உயர முடியாதவாறு எல்லாமாய் முற்றிநிற்கும் இன்பமே கடவுள் இன்பம் என முடிக்கக் காண்கிறோம். கட்டற்ற தட்டற்ற அதிகார நிலைகளின் இன்பங்களாக இவை உயர்ந்து வருமாறு உபநிடதம் அமைத்திருப்பதைக் காண்கிறோம். இன்பம் என்றால், கனியின் இன்பம், கட்டிப் பட்ட கரும்பின் இன்பம் என்ற புல இன்பங்களே பிறர் நினைவிற்கு வரும். பனிமலர்க் குழல் பாவைமார்தம் ஐம்புல இன்பத்துடன் கூடிய மனவகை அன்பு இன்பமும் நினைவிற்கு வரும்: அதிகார இன்பம் நினைவிற்கு வருவது அருமை. அதற்குமேலாம் இன்பமே வீடு எனக் கொண்டு சிறப்பதே தமிழன் கண்ட உண்மை. தனிமுடி கவித்தாளும் அரசினும் இனியன் ஈசன் என்று பாடுகிறார் திருநாவுக்கரையர். இதற்கு ஏற்பப் பேரின்பத்தைக்குறிக்கத் தட்டற்று உருளும் ஆக்ஞா சக்கரம் கொண்டு திகழும் திகிரியோனை ஆண்டவனைக் காண்கிறார் பெருந்தேவனார். தட்டற்று விளங்குகிறது அச் சக்கரம். அரசன் இறைமையை ஒளி எனப் பேசவில்லையா வள்ளுவர்? ஆனால், எப்போது இதன் ஒளி விளங்கும்? ஈதொரு சிறப்பு ஒளி. தீமை அற்றொழிய நன்மையே இன்பமாய் வெள்ளமிடும்போது ஒளிர்கின்றது இந்தக் கடவுளாணை. எனவே, இன்பமும் இவ்வாறு விளக்கப்பெறுகிறது. இந்த இன்பம் அன்பாய்ப் பாய்வதன்றோ தீதற விளங்கும் நிலை.

எண்வடிவமாம் காட்சி-சச்சிதானந்த வடிவம்-என்ற இவை எல்லாம், உலகமும் உயிரும் உடலாய்க்கொண்டு அவற்றின் உயிராய் விளங்கும் இந்தப் புதிய கடவுட் சமுதாயத்தின் ஒற்றுமை விளக்கத் தோற்றமாய், அண்டப் பேரரசின் இன்பப் பேரொளியாய் விளங்க, இறைவன் கோலத்தினைக் காண்கிறார் பெருந்தேவனார். உயிர்க்கு உயிருமாய் இருக்கின்றான் அவன். உயிருக்கு உடலுமாய் அமைகின்றான் அவன். மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம் என்பது பழைய கொள்கை. உயிரெலாம் சென்றுலவும் உடலும் ஆய் அரசன் விளங்குவது கம்பன் கண்ட புதுக்கொள்கை. கடவுட் பேரரசினிடம் இந்த இரண்டு தன்மையும் விளங்குதலான் அன்றோ உயிர்களுக்கு உடலாயும் உயிர்க்கு உயிராயும் இறைவன் உள்ள நிலைமையைப் பெருந்தேவனார் குறிக்கின்றார்! குடியரசும் முடியரசுமாய் நிற்கின்ற நிலையின் பெருமையே பெருமை. இத்தனைக் கருத்தினையும் கடவுட் காட்சியில் உள்ளடக்கி, உயிர்ச் சமுதாயக் கடவுள் ஒற்றுமையாகவும் உலக வரலாற்றொருமையாகவும் இதனைப் பெருந்தேவனார் காண்கின்ற சிறப்பினைச் சங்கப்பாடலின் சிறப்பாகவே கூறலாம்.

மாநிலம் சேவடி ஆக, தூநீர்
வளைநரல் பவ்வம் உடுக்கை ஆக,
விசும்புமெய் ஆக, திசை கை ஆக,
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக,
இயன்ற எல்லாம் பயின்றுஅகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.

—நற்றிணை-கடவுள் வாழ்த்து.

## 5

திகிரியோன் என்பது எழுவாய். அறிந்ததே எழுவாயாக வருதல் இயல்பு. அதனைப்பற்றிப் புதியதாகக் கூறுவதே பயனில்லை. அவ்வாருனல் திகிரியோன் அறிந்த பொருளாவது எப்படி? நாம் அறிந்த அற்புத இயற்கைச் சக்தியே எங்கும் தன் ஆணையைச் செலுத்திவருகிறது; ஆதலின், இந்த ஆணை நாம் அறிந்தது ஒன்றே ஆம். ஆனல், பெருந்தேவனர் காட்சியில் இந்த ஆணை தீதற விளங்குவதாகத் தோன்றுகிறது. அவர் கண்ட காட்சி அவர் அறிந்த உண்மை—தீமை அறுதற்காக விளங்குவது! தீமை அறுதலால் பொலிவுபெற்று விளங்குவது! "தீது அற்றுஅற்றுவர விளங்கிக் கொண்டே வருவது" என்று பொருள்படும் இத் தொடர்க்கு நம் அனுபவத்திற்கு ஏற்பப் பொருள் கொள்ளலாம். இயற்கைத் திருவிளையாடல் இவ்வாறு தீதறுதலாகி இன்பவிளக்க மாதலையே முடிந்த முடிபாம் பயனுகக் கொண்டது என்று தாம் அறிந்த உண்மையை வற்புறுத்துகின்ருர் புலவர். இந்தத் "திகிரியோனே. வேதமுதல்வன், ஆக, ஆக, ஆகப்பயின்று, அகத்தடக்கிய முதல்வன்" என்று முடிக்கின்ருர். வேதமுதல்வன் என்பது ஆண்டவனது சொரூப இலக்கணமாகவும், அதற்குமுன் கூறப்பெறுபவை ஆண்டவனது தடத்த இலக்கணமாகவும் கொள்ளலாம். "நாம் அறிந்த நல்ல இன்ப இயற்கைச் சக்தியே அத்தகைய தடத்த இலக்கணமும் சொரூப இலக்கணமும் உடையதாகக் கூறப்பெறும் பொருள்," என முடிக்கிருர் பெருந்தேவனர்.

## 6

இப் பாட்டின் சொற்ருெடர் அமைப்பினையும் பாவோசை நயத்தினையும் துய்த்துணர்ந்து இன்புறுதல்

வேண்டும். அவற்றின் வழியேதான் நம் மனம் பொருள் விளக்கம் பெற்றுப் பெருந்தேவனார் அனுபவமே தன் அனுபவமாகுமாறு உருக்கொள்கிறது. "மாநிலம் சேவடி யாக" என்பதனை மூன்று சீராய்க் கூறினார் புலவர். மா எனவே பெருமை தோன்றுகிறது. நிலம் எனவே நிலைநிற்றல் விளங்குகிறது. அடியின் செம்மைக்கு ஏற்ப, நிலத்தின் பெருமை, மா என்பதால் வளந்தரும் பெருமையாகக் குறிக்கப்பெறுகிறது. மா என்றும், சே என்றும், வரும் நெடில்கள் பெருமையை நீட்டிக் காட்டுகின்றன. மாநிலத்தினும் பெரிதாய்ப் பரந்துதோன்றுகின்ற கடலின் இயக்க ஆற்றலினும் அன்பினும் பெரிதும் ஈடுபட்டுக் கடல் பரந்து இருப்பதுபோலப் பரந்த ஐந்துசீராகவரக் கடலினை அவ்வாறு புனைந்துரைக்கின்றார். சங்கின் ஒலி வளைநரல் என்ற ஒலியாகக் கேட்கின்றது. "தூநீர்" என நெடிலாகவும், "வளைநரல்" எனக் குறிலாகவும், "பவ்வம்" என வகரத் தொடர்பட்ட இதழ் ஒலிகளாகவும், "உடுக்கை" என வல்லோசையாகவும் இவ்வாறு பலவற்றின் கலப்பொலியாக அலைகடல்ஒலி பாட்டில் அமைகிறது. பருப்பொருளின் நின்றும் நுண்பொருளுக்குச் செல்வார், "விசும்பு மெய்யாக" என இரு சீரில் வன்மை மிக்குத் தோன்றாதபடி மென்மையும் இடைமையுமாம் அருவநிலை தோன்றக் கூறினார்; எல்லாமாய் இயங்கும் நிலையை வற்புறுத்த மேலும் இருசீரில் திசை கையாக என்றார்; தொழில் செய்வதன்றோ கை: திசை கை என வல்லெழுத்து, இகர ஐகார ஒலிகளோடு இயைந்து, தொழிலொலி முடிவின்றிப் போவதனைக் காட்டுமாறு செய்தார்; சந்திரனது அழகில் ஈடுபட்டு அதனை இருசீரால் கூறினார்; ஒப்புயர் வற்ற சூரியனை அடையேதும்

இன்றிச் "சிடுசிடு" என ஒளிவிட் டெரியும் தீயின் நினைப்பும் சுடு விளக்கத்தின் நினைப்பும் வரச் "சுடர்"என்று ஒரே அசையில் கூறியமைந்தார்; மதியமும் கண் ஆனாலும், உண்மையில் உலகுக்கு ஒருகண் சுடரே எனக் குறிப்பார்போலச் சுடர்கண் என ஒருசீ ராக்கினார்; உம்மையும் கொடுத்திலர்; தனி நிற்பது சுடர்: அதனால் விளங்கி அதனோடு தொடர்ந் தெண்ணப்படுவது மதியம் என்பது போலக் கூறுகின்றார்; "வேத முதல்வன்" என்ற உண்மையைத் தனியடி யாக்கினார்; நாம் விரும்பும் இன்ப நிலையை நம்மை யடக்கியாண்டு நன்மை பெருக்கும் ஆணையாகக் கூறி முடிக்கின்றார்; இத் திகிரியின் சிறப்பியல் தீதற விளங்குதல் ஆம் எனச் சிறப்பிக்கின்றார்.

"மாநிலம்" என்பதனோடு கடலின் தொடர்பு விளங்க அந்த அடியிலேயே, "தூநீர்" என எதுகை தோன்றக் கடலைப் பாடத்தொடங்குகின்றார் பெருந்தேவனார். கடலைப் புணர்ந்துரைக்கும் இரண்டாம் அடியில் வேறொன்றன் தொர்டர்பும் வேண்டாமையால் மோனையோ எதுகையோ வரப்பாடுகிறார் இல்லை; அருவத்திற் புகுதலின், உருவத்தோடு ஒட்டிவரத் தொடுக்கவில்லை; விசும்பும் திசையும் என்ற இரண்டு நிலையாகப் பிரிந்தாலும் அவை ஒன்றெனக் கொள்ள எதுகை நயம்கொண்டு ஒன்றுபடுத்துகிறார்;விசும்பில் செல்லும் ஒளிகள் என ஒற்றுமைப்படுத்த, விசும்போடு பசுங்கதிர் என எதுகைத்தொடை வரப் பாடுகிறார்; சுடர் என வேறு பிரித்து உயர்த்துகிறார்; "அனைத்தும் அதற்கு இடமாம்" என்ற வேற்று நிலையின் அடிப்படை ஒற்றுமையை "இயன்றன பயின்று" எனவரும் எதுகை நயத்தோடு "பயின்றகத்து" என ஒரு சீராக்கிப் பாடுகிறார். இயன்றன பயின்று நிற்றல்,படைத்தல் காத்-

தல் என்ற இரண்டு நிலையில்: அகத்தடக்கலோ அழித்தல் என்ற ஒரு நிலையில்: இந்த உண்மையும் இவ்வாறு சுட்டப்படுகின்றது. இயன்றன பயின்றபோதும் அகத்து வைத்துக் காத்துக் கொள்ளப்பெற்றே உள்ளன என்பதும் இத் தொடர்பால் விளங்குகிறது. "வேதமுதல்வன்" என்ற நிலையும், "தீதற விளங்கிய திகிரியோன்" என்ற நிலையும் எழுவாயும் பயனிலையுமாய் நிற்கின்ற தொடர்பினை எதுகைத் தொடையாலும் ஒன்றுபடுத்தி விளக்கி வற்புறுத்துகிறார்; தீதற விளங்குவதே திகிரியின் சிறப்பியல்பென்பதனை வற்புறுத்தி இரண்டும் மோனையாய் அமையப் பாடுகின்றார் பெருந்தேவனார்; திகிரியான் என ஒரு சொல் கூறத்தக்கதனைத் தம் ஈடுபாடும் அதன் பெருமையும் தோன்ற இருசொலாக்கித் திகிரியோனே என நீட்டுகின்றார். இவ்வாறு பொருளும் பா ஓசையும் அமைந்திருப்பது ஓரழகாம்.

---

# 9. நான் பேசிய நாடகம்*

## 1

தமிழ் ஒரு பெருங்கடல். தமிழரது வரலாறும் ஒரு பெருங் கடல். அலைகள் மேலே ஓங்கியும், கீழே தாழ்ந்தும் மாறிமாறி வந்துகொண்டே இருக்கின்றன. பேருக்கம் ஒருகாலம்; பெருஞ் சோர்வு மற்றொரு காலம். தமிழ்ப் பாட்டுக்களைத் திரட்டுவது, அவற்றின் சுவையி லீடுபட்டு ஆராய்வது—இப்படி ஒரு காலம் வரும். தமிழரைவிடச் சுவை யுணர்ந்து, அந் நூல்களைச் செல்லும் கரப்பானும் உண்ண விருந்தளித்த காலம் ஒருமுறை வரும். ஒரு பஞ்சம் வந்தபோது புலவர்கள் தமிழ் நாட்டை விட்டு வெளியேறி வாழவந்த கொடுமையையும், அதன் பின்னர் அகத்திணை மரபை அறிய முடியாமற் போகவே, ஆண்டவனே

* நற்றிணை மகாநாட்டில் தலைமைபூண்டு நடித்த நாடகம் இது, தலைமை யுரை என்று பேர் பெற்றது.

வந்து அறிவுறுத்தியதனையும் இறையனார் அகப்பொருள் உரை விரித்துக் கூறுகின்றதன்றோ? தமிழ்நூலுலகிலும் இவ்வாறு பகலும் இரவும் மாறிமாறி வருகின்றன. சங்க காலத்திலேயே பாக்களைத் தொகுத்த காலமும் உண்டு. புலவர்கள் பெயரையும் மறந்துவிட்ட காலமும் உண்டு. விடுபாட்டுக்களாக உள்ளவையே நமக்கு அகப்படுவன. பொருட்டொடர்ச் செய்யுளாகச் சிலப்பதிகாரத்துக்கு முன் இருந்தவை காலக் கடலில் அமிழ்ந்துவிட்டன. தமிழர் வரலாற்றில் கடல்கோள்கள் பல காண்கிறோம். சம்பந்தர் பாட்டொன்றுதான் நெருப்பில் எரியாது, நீரோடு ஓடாது, பிழைத்தது என எண்ண வேண்டா; நமக்குக் கிடைத்துள்ள தமிழ்ப் பாடல்கள் எல்லாம் இவ்வாறு நெருப்பிற்கும் நீருக்கும் அழியாது நிலைநின்ற கன்னித் தமிழ்ப் பாடல்களேயாகும்.

தமிழ்க் கடலுள் ஊக்கம் என்னும் அலை யோங்கிய காலத்தே சில பாடல்கள் நற்றிணையாகத் தொகுக்கப்பெற்றன. பன்னாடு தந்த பாண்டியன் மாறன்வழுதியே இப் பாடல்களையும் நமக்குத் தந்தவன். அதற்கு முன்னிருந்த கரிநாள்களை இந்தத் தொகை நூலே சிறிது விளக்குகின்றது. வண்ணப்புறக் கந்தரத்தனார் (71-ம் பா), மலையனார் (93-ம் பா), தனிமகனார் (153-ம் பா), விழிக்கட் பேதைப் பெருங்கண்ணனார் (242-ம் பா), தும்பிசேர் கீரனார் (277-ம் பா), தேய்புரிப் பழங்கயிற்றினார் (284-ம் பா) என்ற நற்றிணைப் புலவர்கள், நற்றிணையில் தாம் பாடிய பாடல்களில் வரும் அருந் தொடர்களால் பெயர் பெற்றவர்கள். இவர்களில், தனிமகனார், தேய்புரிப் பழங்கயிற்றினார் என்ற இருவரது இயற்பெயரை அந்த நாளைய தமிழுலகமே மறந்துவிட்டது. இத் தகைய நன்றிகெட்ட காலம்

இடை இடையே தோன்றுவது தமிழின் தலையெழுத்து. இத் தகைய காலங்களை அடுத்தடுத்து நன்றியுள்ள மக்களும் தோன்றிவந் துள்ளார்கள்; நற்றிணை தொகுத்த காலத்து நன்றி மறவா மக்கள், அப் பாடல்களில் தம்மையும் மறந்து சுவைத்த நிலைமையால் புலவர்கள் இட்ட இலக்கியப் பெயரைக் காத்து இன்றும் நாம் உணர உணர்த்திச்சென்றார்கள்.

## 2

போர் நடந்த ஒரு நாட்டில், பல ஊர்கள் பாழாய்க் குடியிருப்பா ரற்றுக் கிடக்கின்றன. அவற்றைக் காக்க ஒவ்வொருவர் படைமக்கள் இருப்பர். அந்தக் கொடு நிலைமையை மனத்தில் எண்ணிப் பார்க்கும்போதுதான் தனிமகனார் பாட்டின் சிறப்பும், அவர்க்குத் தனிமகனார் எனப் பெயரிட்ட தமிழ்ப் பெருமக்களின் பாட்டுணர்வும் நமக்கு நன்கு விளங்கும். தலைவன் பிரிந்தான். அவனையே எண்ணிக் கிடக்கின்றாள் தலைவி; எண்ணம் அவன் பாலதாகலின் தன் நெஞ்சம் தலைவனிடமே போய்விட்டது எனப் புலம்புகிறாள். பல வகை வளங்களும் சிறந்த பட்டினம் போன்றது தலைவியின் அழகு என்று சொல்வது பழந்தமிழ் வழக்கு. அத் தகைய பேரெழில் எல்லாம் வாடிப் பசலை பாய்ந்து அழிந்துகிடக்கும் பாழ்ம் பட்டினம்போன்றிருக்கின்றது தன் உடல் எனப் புலம்புகிறாள் தலைவி. உடம்புதான் எஞ்சிநிற்கிறது. அந்த நிலையில் பாழ்பட்ட ஊரிலே தனியே ஊர் காத்திருக்கும் படைமகன் உண்பதும் பேயுண்பதுபோலத்தானே தோன்றும்! தலைவன் இருந்தாலன்றோ விருந்து! அவ்வாறு விருந்து புறந்தருதலை இழந்த தலைவி, 'தனி யுண்டல் மிக இரங்கத்தக்கது' எனப் புலம்புகிறாள். அவளுடைய நாட்டம்

அறமேயன்றி இன்பம் அன்று. மழை, எத்தனை நாள் மின்னிப் பெய்யவேண்டுமோ, அத்தனை நாளும் பெய்த பின்னர், அதற்குமேல் மழை பெய்தல் இல்லையாகவே, தன் னிருப்பிடம் செல்கிறது. அதுபோலத் தலைவியின் மனம் எத்தனை நாள் அவளுக்கு ஆறுதல் எண்ணங்களைத் தூண்ட முடியுமோ, அத்தனை நாளும் அவளுடன் இருந்து, பின் ஆற்ற முடியாத நிலையிலே, தலைவனே புகல் என அவனிடம் செல்கின்றது. இவ்வாறு தலைவி கூறும் கூற்று, ஆற்றாமையை மிக அழகாகப் புலப்படுத்துவ-தாகும். செம்பைக் கடையும்போது பொரிகள் பளபள எனப் பறப்பதுபோல, வானம் மின்னும் என்பது உள்ளதை உள்ளபடி உள்ளமுவக்கக் கூறும் உயர்வுடைய-தாகும்.

"குணகடல் முகந்து குடக்கேர்பு இருளி
மண்திணி ஞாலம் விளங்கக் கம்மியர்
செம்புசொரி பானையின் மின்னிஎவ் வாயும்
தன்தொழில் வாய்த்த இன்குரல் எழிலி
தென்புல மருங்கில் சென்றற் றாங்கு
நெஞ்சம் அவர்வயின் சென்றென ஈண்(டு)ஒழிந்து
உண்டல் அளித்தென் உடம்பே; விறல்போர்
வெஞ்சின வேந்தன் பகையலைக் கலங்கி
வாழ்வோர் போகிய பேரூர்ப்
பாழ்காத் திருந்த தனிமகன் போன்றே." (நற். 153)

அந் நாளைய தமிழர், பொருளில் ஈடுபட்டுச் சுவை-மிகுந்த பகுதிகொண்டு பெயரிட்ட மற்றொரு பாடலைமட்-டும் கூறி மேற்செல்வாம் :

"புறந்தாழ்பு இருண்ட கூந்தற் போதின்
நிறம்பெறும் ஈரிதழ் பொலிந்த உண்கண்

உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும்;
செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
எய்யா மையோடு இளிவுதலைத் தரும்என
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும்; ஆயிடை
ஒளிறுஏந்து மருப்பின் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்என் வருந்திய உடம்பே." (நற். 284)

உலகில் பெருமக்களிடையே எழும் போராட்டத்தைக் குறிக்கின்றது இப் பாடல். அறிவு ஒரு புறம் இழுக்கின்றது. உணர்ச்சி ததும்பும் நெஞ்சம் மற்றொரு புறம் இழுக்கின்றது. தலை கொழுத்து நெஞ்சுலர்ந்து நிற்கின்ற உலக மன்றோ இன்று போரிடை மடிகின்றது! தலை சிறுத்து நெஞ்சு பெருத்த உலகம் பிறர்க் கடிமையாகிச் சாகும். பெரு மக்களிடையோ பேரறிவும் பேருணர்ச்சியும் ஒருங்கே இயைந்து நிற்கக் காண்போம். தலைமகன் என்றால் அவ்வகையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் அல்லனோ? இவ் விரண்டினிடையே செயற்படும் ஊக்க நிலையும் விளங்கவேண்டும். அறிவும் உணர்வும் செயலும் அழகாக அமைந்த நிலையே முத்தமிழ் நிலை என உணர்தல் வேண்டும். அத்தகைய முத்தமிழ் நிலையில், உடம்பு, உணர்ச்சிக்கும் அறிவுக்கும் இயையச் செயல் செய்துவரும் ஓர் அருமையை இந்தப் பாடல் விளக்குகிறது. தலைவன், தலைவியின் கூந்தலே அணையாகக் கொள்ள, அவள் அன்பெலாம் மலரத் தன்னைக் கண்ட பார்வையைத் தலைவன் மறக்கின்றான் இல்லை. பிரிந்துவந்து பொருள் ஈட்டும் இந்த நிலையில் அப் பார்வை வந்து இவனை மருட்டுகின்றது. தானும் அவளும் ஒருவரே

எனக் காட்டிய அந்தப் பார்வையை எண்ணுந்தோறும் தனியவள் வாட்டமும் மனக்கண்ணெதிரே தோன்று-கிறது. அவ் வாட்டந் தவிர அவளுடைய கூட்டந்தான் உறுதிப் பொருள் என்கிறது நெஞ்சம். செய்வினை முடிப்-பதற்குமுன் போதல் அறியாமையாகும்; அங்குள்ளாரும் எள்ளத்தக்க இளிவரவு நிலையேயாகும். ஆதலின், சிறிது தாழ்த்துச் செல்லுதலே தக்கது என்று இவ்வாறு கூறுகிறது அறிவு. இவ் விரண்டில் எதனைத் துணிவது? இரண்டும் பொருத்த முடையன அல்லவோ? இவ் விரண்-டிற்கும் இடைப்பட்ட செயனிலை படாதபாடு படுகின்றது. "இரண்டு நுனியையும் இரண்டு யானைகள் பிடித்திழுக்-கின்றன; கயிறோ தேய்ந்த பழங்கயிறு. இவற்றிற்-கிடையே அந்தக் கயிறு அற வேண்டுவதுதான். இந்த நெஞ்சிற்கும் அறிவிற்கும் இடையில் அகப்பட்ட செயற்படும் உடம்பின் நிலையும் அந்தக் கயிற்றின் நிலையே"—இங்ஙனம் வாய்விட்டுப் புலம்புகின்றான் தலை-வன். இவ்வாறு முத்தமிழ் நிலையை விளக்கித் தலைவன் பெருமையையும் புலப்படுத்தி, அதற் கேற்ற உவமையை-யுந் தேடிக்கொடுத்து, உலகுள்ளளவும் மறக்கத்தகாத இப் பாடலைப் பாடியவரைத் தேய்புரிப் பழங்கயிற்றினார் என அழைத்த நற்றிணைத் தமிழுலகம், தன் நன்றியையும் தன் தமிழ்ச் சுவையையும் நிலைநாட்டியது எனலாம். இவ்வாறே பாட்டாற் பெயர் பெற்ற புலவரின் பாடல்களை உணர்ந்து துய்ப்பது தமிழர் கடனாகும்.

## 3

நெடுந்தொகை எனும் அகநானூற்றுப் பாடல்கள் போல மிகப் பெரியன அல்ல இதன் பாடல்கள்; பொருள் முடிபு காண வருந்த வேண்டுவதில்லை. குறுந்தொகைப்

பாடல்கள்போல மிகச் சிறியன அல்ல இவை; பொருள் ஆழங் காணுது அலேயவேண்டுவ தில்லே. இடை நிகரன-வான பாடல்களே இந்த நற்றிணையில் உள்ளன. இரண்டன் அழகும் இதனிடை உண்டு. அகத்திணைப் பாடல்-களுக்குத் "திணை" எனப் பெயர் வழங்கும் மரபு உண்டு. திணை எழுபது, திணைமாலை நூற்றைம்பது என்ற நூல்களின் பெயர்களைக் காண்க. அத் தகைய "திணை" என்ற பெய-ரோடு "நல்" என்ற அடையும் சேர வழங்குகிறது இந் நூல். "நல்ல குறுந்தொகை" என்று பிற் காலத்தார் பாடினுர்கள். ஆனல் தொகுத்த காலத்தே "நல்" என்ற அடை இந் நூலுக்குத்தான் இடப்பட்டது என்பதை நாம் மறத்த லாகாது. ஆனலும், இத் தொகை நூல்களில் வரும் பாடல்கள் எல்லாம் ஒரு தகையனவேயாம்; இவற்-றில் ஏற்றத்தாழ்வு கூறுவதற்கு இல்லை.

## 4

இவற்றை, ஆசிரியர் முறையர்கத் தொகுத்துச் "சைவ சித்தாந்த சமாசம்" நமக்குப் பெரியதோர் உதவி புரிந்திருக்-கிறது. இப்போது தமிழுக்கு வந்துள்ள நல்ல காலத்-தையே ஈதும் குறிக்கிறது. நற்றிணை நூல் பலர் கையிலும் பரவிக் கூத்தாடுமாறு செய்து, அதன் பொருளையும் விளங்க எழுதி உதவிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயரை நாம் மறக்கப் போமா? அவரோடு பழகிய மறைமலையடிகள், திரு. வி. க. முதலியவர்கள் அவருடைய சிறந்த தமிழன்-பையும் உயர்ந்த ஆராய்ச்சியையும் புகழக் கேட்டுள்ளேன். இந்த நூல் அச்சாகி வெளிவருவதைக் காணுமலே அப் பெரியார் போனது மிகவும் மனத்தை வருத்துகின்றது. அவர் செய்த உரையினும் சிறந்த உரை சில பாடல்களுக்-குச் சொல்லுதல் கூடும். ஆனல், நற்றிணை என்ற

தமிழ்ச் சுவைப் பேழையை முதல் முதல் தம் உரையாம் திறவுகோல் கொண்டு திறந்தவர் அவரே என்பதனை நாம் மறத்தல் ஆகாது. முகம்புகு கிளவியின் பெருமையில் ஈடுபட்டும், உள்ளுறை இறைச்சியின் வேறுபாட்டைப் புலப்படுத்தியும், வரலாற்று ஆராய்ச்சியோடு இயைந்தும் எழுதிப்போகும் அவர் உரை நுட்பம் பெரிதும் பாராட்டத் தக்கதே யாம். முன் எல்லாம் தமிழ்ப் பெரியார் ஒவ்வொரு நூலையே வாணாள்வரை ஆராய்ந்துவருவார்கள்; பிற நூல்களைத் திறம்பெறக் கற்பதெல்லாம் தம் நூலை ஆராய்வதற் கென்றே முடியும். அத் தகைய ஆராய்ச்சித் திற மெல்லாம் நற்றிணை யுரைக்குப் பயன்பட்டிருப்பது நன்கு தெளிவாகிறது. இந் நாளைய தமிழ்ப் புலவர்கள் அந்த வழியே செல்வார்களானால் மிகமிகப் பயன் உடைய-தாகும் என்பதில் என்ன ஐயம்?

## 5

அகத்திணை என்பது அன்பு வரலாறு. கடவுளும் காதலும் அன்றித் தமிழில் வேறென்ன இருக்கிறது எனச் சிலர் எள்ளி நகையாடுகின்றார்கள். அவர்கள் உண்மை காணாதவர்களே. கடவுளும் தமிழ்க் காதலிலே ஒடுங்கி-நிற்பதை அறிந்தால், பெருஞ் சிரிப்புச் சிரிப்பர் போலும்! அன்பே சிவம் என்பதற்குக் காதலே கடவுள் என்ப-தன்றோ பொருள்? கடவுளைச் சுட்டிடுனெடு காட்ட வந்த சம்பந்தர் ஆணிலை மாறிப் பெண்ணாய்க் கடவுளாம் காதலன்மேல் வெறிகொண்டு, "இறை வளை சோர என் உள்ளங் கவர் கள்வன்" என் றன்றோ பாடுகின்றார்! ஆழ்வார்-களும் மற்றைய முதலிகளும் அத் தகைய கடவுட் காதல் கொண்டவர்களே யாவர். திருவள்ளுவர் கூறிய காமத்துப்

பால் ஒப்புமை வழியாக வீட்டுப்பால் கூறியதே என்று கொள்ளுவோரும் உண்டு. அன்பை வளர்த்து, உலகோடு ஒட்ட ஒழுகி, ஒன்ருய்விடுவதே நீக்க மற நிறைகின்ற பெரு வாழ்வாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என வாழ்வது இந்த முறையில்தான்.

இவ்வாறு, அன்பாக உலகத்தோ டொட்ட ஒழுகும்போது, பிறர் செய்யும் பெருந் தீங்கையும் மறந்து வாழ்கிற நிலை வருதல் வேண்டும். பிறன் நஞ்சு வைத்தாலும், நாம் நஞ்சென உணர்ந்ததை அவன் அறியின், அவன் மனம் நடுங்கு மன்ருே என அவனுக் கிரங்கி, அந் நஞ்சையும் உண்பதே நாகரிகமாம். திருவள்ளுவர் கண்ட புது நாகரிகமாகும் ஈது:

"பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்." (திருக். 580)

இக் கருத்தை அகப் பொருட் சுவை ததும்ப நற்றிணைப் புலவர் ஒருவர் பொன்னேபோற் போற்றிப் பாராட்டுகின்ருர். நாகரிக உலகத்தில் குழவி யுலகமே தோன்றுவதும் காண்க:

"புதல்வன் ஈன்ற பூங்கண் மடந்தை
முலைவா யுறுக்கும் கைபோற் காந்தள்
குலைவாய் தோயுங் கொழுமடல் வாழை
அம்மடற் பட்ட அருவித் திநீர்
செம்முக மந்தி ஆரும் நாட
முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்
அஞ்சில் ஓதிஎன் தோழி தோள்துயில்
நெஞ்சின் இன்புருய் ஆயினும் அதுநீ
என்க ணேடி அளிமதி
நின்கண் அல்லது பிறிதியாதும் இலளே" (நற். 355)

என வருதல் காண்க.

மக்கள் மட்டும் அல்லர்; விலங்குகளும் பறவைகளும் அன்பாய் வாழ்கின்ற நிலையையும் மக்களது அன்பு வாழ்க்கைக் கெதிரே புனைந்துரைத்துப் போவதை, இந்நூலுள் எங்கும் பார்க்கின்றோம்.

"வண்புறப் புறவின் செங்காற் சேவல்
களரி ஓங்கிய கவைமுட் கள்ளி
முளரியங் குடம்பை ஈன்றிளைப் பட்ட
வுயவுநடைப் பேடை உணீஇய மன்னர்
முனைகவர் முதுபாழ் உகுநெற் பெறூஉம்" (நற். 384)

என்று முட்டை யிட்ட பெண் புறவிற்காகப் பாழடைந்து பாலையாய ஊர்களிலுள்ள நெல்லைக் கொண்டுவரும் ஆண் புறவின் அன்பைப் புனைந்துரைத்தல் வாயிலாகப் பாலையின் சிறப்பை உணர்த்திய நயமும், தலைவன் சென்று இல்லறம் நிகழ்த்தப்போகிற பெருமையை இதன் வழியாக இறைச்சிப் பொருளாக உணர்த்தும் குறிப்பும் பாராட்டத் தக்கன. பெண் புலியின் பசிக்கு வருந்திய ஆண் புலி, யானையைக் கொல்வதாக மற்றொரு புலவர் கனுக்காண்கிறார்:

"கல்லயற் கலித்த கருங்கால் வேங்கை
அலங்கலந் தொடலை அன்ன குருளை
வயப்புனிற் றிரும்பிணப் பசித்தென வயப்புலி
புகர்முகஞ் சிதையத் தாக்கிக் களிறட்(டு)
உருமிசை உரறும் உட்குவரு நடுநாள்" (நற். 383)

எனக் கொடிய விலங்குகளிடத்தும், அன்பு, திருக்கூத்தாடுவதைக் காண்க. இத்தகைய பாடல்கள் பலப்பல.

6

ஓரறிவு உயிர்களையும், உடன் பிறந்தாராகக் கொண்டு வாழும் உயர் நிலையையும் இங்குக் காண்கிறோம். சகுந்தலை,

கண்ணுவரை விட்டுப் பிரிகையில், அங்கே, தான் நீரூற்றி வளர்த்த செடிகளோடு எல்லாம் உறவு கொண்டாடு-வதை, சர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் பெரிதும் பாராட்டி இயற்கையனைத்தையும் உறவாகக் கொள்ளுகிற இந்திய-ரின் பேருள்ளத்தை எண்ணி எண்ணி வியக்கின்றார். அத்தகைய பேருள்ளம் தமிழ்ப்பேருள்ளமே யாகும். நீரூற்றி வளர்த்தாள் சகுந்தலை. பாலூற்றி வளர்த்தாள் தமிழ் மகள்; அவ் வுறவைத் தான்மட்டு மன்றித் தன் மகளும் கொண்டாடுமாறு வாழ்ந்துவந்தாள். மணலில் கொட்டை முதலியவற்றை மறைத்துவைத்துப் பின் மணலை வரிந்து இரு கையையும் கோத்து வரிமணல்மேல் வைத்து ஒருத்தி இருப்பப் பிற மகளிர் அக் கொட்டை யிருக்கும் இடத்தில் கை வைத்தெடுக்கும் விளையாட்டு,இன்றும் தமிழ்ச் சிறுமி-கள் மிக மகிழ்ந்து விளையாடுவது ஒன்றாகும். அவ்வாறு விளையாடிய தமிழ் மகள் ஒருத்தி, புன்னைக் கொட்டையை மணலிலேயே மறந்துவிட்டுச் சென்றாள்; அது, முளைவிட்டு வளரத் தொடங்கியது; தன் குழவி எனப் பேசத் தொடங்கி-னாள்; பாலும் நெய்யும் ஊற்றி வளர்த்தாள்; பின்னே, மண-மகளானாள்; மகளிரையும் பெற்றாள்: இம் மகளிரோ புன்னையேபோல விட்ட இடத்திலே ஆர அமர நில்லாமல், ஓடிஆடிப் பானையை உடைத்தும் பாலினை உருட்டியும் பிற குழவிகளை அலைக்கழித்தும் வந்தனர். அந் நிலையில் அவர்-கள்மேல் சிறிது சினந்தோன்ற நிற்பவள், தன் முதற் குழவியான புன்னை, விட்ட இடத்திலேயே வேரூன்றி-யதைப் புகழ்ந்தாள். இவ்வாறு பன்முறை வற்புறுத்தி-யதைக் கேட்ட மகளும், அப் புன்னையைத் தன் தமக்கை-யாகவே நம்பி வாழ்ந்தாள்; பின்னொரு நாள், தன் தலைவ-னோடு கூட வருகையில்,அப் புன்னை தன்னுடைய தமக்கை-

*யாகலின் அப் புன்னை நீழலில் தலைவனோடு நகையாடவும் நாணிநின்ருளாம். உறவாடுதல் எத்தனை தொலைவு சென்றுள்ளது கண்டீர்களா!*

"விளையா(டு) ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்தினிது வளர்ப்ப
நும்மினுஞ் சிறந்தது நுவ்வை ஆகும்'' என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே
அம்ம நாணுதும் நும்மொடு நகையே
விருந்திற் பாணர் விளரிசை கடுப்ப
வலம்புரி வான்கோடு நரலும் இலங்குநீர்த்
துறைகெழு கொண்க நீநல்கின்
நிறைபடு நீழல் பிறவுமார் உளவே'' (நற். 172)

*என்ற பாட்டில் உயிர்களை எல்லாம் உறவாய்க்கொண்டு பாராட்டும் உயிரன்பின் ஒருமைப் பாட்டை யாரே வியவாதவர்!*

*இவர்கள்,செல்வம் எனக் கொண்டதும் இவ் வுயிரன்பின் ஒருமைப்பாட்டுக் கொத்ததே யாம்.*

"நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வ மன்றுதன் செய்வினைப் பயனே
சான்ருேர் செல்வம் என்பது சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம்என் பதுவே'' (நற். 210)

*என வருவதன் உயர்வைத் தமிழர் அறிந் தின்புறுவாராக!*

## 7

*அன்பு என்ருல் வெறுங் காத லன்று; உணர்வும் அறிவும்உணர்ச்சியும்இயைந்ததொருநிலையே; அன்பாயினுர் ஒன்ருகின்ற நிலை. நிலத்திலே பொழிந்த மழைநீர் அந்த*

நிலத்தின் நிறமும் சுவையும் பெற, நிலமும் நீரின் தன்மை பெற்று நெகிழ்ந்து குழைகிறது. காதலனும் காதலியும் அவ்வாறு ஒன்றுபடுகின்றனர் எனச் செம்புலப்பெயல் நீரை ஒரு புலவர் உவமை கூறினர். அவ் வுவமையினும் இன்சுவை மிக்கதும் நறுமணங் கமழ்வது மான ஒருவமை-யைக் கபிலர் பெருமான் நற்றிணையிற் கூறுகின்ருர். தாமரை எங்கோ நீரில் பூக்கின்றது. அதன் தேன் அம் மணமும் இனிமையும் பெறுகிறது. சந்தன மரம் எங்கோ காட்டில் வளர்கின்றது. இயற்கை இவ் விரண்டின் தாதை-யும் ஒருங்கு கமழ வைத்துச் சந்தன மரத்தில் தேன்கூடு கட்டுதல் அமைகின்றது. சந்தனத்தின் நறு மணமே தேனின் மணமாகிறது; ஆனல், சுவையோ, தேனின் சுவையே. இவ்வாறு இயற்கை வழியே தலைவனும் தலைவி-யும் ஒன்ருகி ஒருவர் இயல்பு ஒருவரதாக இருவரும் ஒருவ-ராகின்றனர். ஒருவரை விட்டு ஒருவர் வாழ்தல் எங்ஙனம் கூடும்?

"நின்ற சொல்லர் நீடுதோ(று) இனியர்
என்றும் என்தோள் பிரிபறி யலரே
தாமரைத் தண்தா(து) ஊதி மீமிசைச்
சாந்தில் தொடுத்த தீந்தேன்போலப்
புரைய மன்ற புரையோர் கேண்மை
நீரின் றமையா உலகம் போலத்
தம்மின்(று) அமையா நம்நயந் தருளி
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை யுறுபவோ செய்பறி யலரே!" (நற். 1)

இத்தகைய வாழ்க்கை இக் காலத்திற்கும் ஏற்றது அன்ருே?

இப் பிறவியில் மட்டு மன்று அவர்கள் ஒன்றாக வாழ விரும்பியது. "யான் இறப்பதற்கு அஞ்சவில்லை ; ஆனால் மறு பிறப்பில் தலைவனை மறப்பேனோ என்றுதான் அஞ்சுகின்றேன்'' என்று கூறும் தலைவியின் கற்பு நிலையை என்னென்று புகழ்வது?

"தோளும் அழியும் நாளும் சென்றென
நீளிடை அத்தம் நோக்கி வாளற்றுக்
கண்ணுங் காட்சி தவ்வின; என்னீத்(து)
அறிவு மயங்கிப் பிறிதா கின்றே!
நோயும் பேரும் மாலையும் வந்தன்(று);
யாங்(கு) ஆகுவென்கொல் யானே? ஈங்கோ
சாத லஞ்சேன்; அஞ்சுவல் சாவிற்
பிறப்புப்பிறி தாகுவ தாயின்
மறக்குவேன் கொல்லென் காதலன் எனவே'' (நற். 397)

என வரும் பாடலைக் காண்க.

## 8

இவ்வாறு இரு மனமும் ஈருயிரும் ஒன்றாகித் தம்மையே மறந்து முனைப் படங்கி இறை பணி நிற்குந் தூய இன்ப வாழ்வை மறந்து, ஊற்றின்ப வாழ்வையே காதலெனக்கொண்டு, உணர்வு நுட்பம் ஒன்றுமின்றி நிற்கின்ற காலம் வந்தது. அப்போதுதான் "காமம்...... இழித்திடப்பட்ட தன்றே" என்று சிந்தாமணி பாடத்தொடங்கியது. அதுமுதல் தமிழனுடைய கெட்ட நாள் தொடங்கியது;. அடிமை வாழ்வுந் தொடங்கியது. தூய இன்ப வாழ்வைத் தமிழன், தானும் வாழ்ந்து உலகிற்கும் வழிகாட்டி வாழ்ந்து, உதவுவானாக!

## 9

மற்றும், நற்றிணை ஆராய்ச்சியால் தெரியவரும் வழக்கங்கள் பல; வரலாற்று நூல் உண்மைகள் பல; இயற்கை அழகுகள் பல; இலக்கண மரபுகள் பல. ஆனால், அவற்றை எல்லாம் ஆசிரியர் முறையாகச் சங்க நூல்கள் அனைத்தும் கொண்டு கோவை செய்தல் வேண்டுமாதலின் இங்கு விரித்தலிற் பயனில்லை.

அகத்திணையில் பல சுவையும் வரக் காண்போம். போசன், "சிருங்காரம் எனும் உவகைச் சுவை ஒன்றே உளது; அதன் வகைகளே மற்றைய சுவைகள் அனைத்தும்" என்று வடமொழியில் வற்புறுத்தி யுள்ளான். இக் கொள்கையின் உண்மையைப் பிற அகத்திணை நூலிற் காண்பதுபோல நற்றிணையிலும் காண்கின்றோம். குறிஞ்சி நெய்தல் முல்லை பாலை மருதம் எனப் பகுத்துப் பார்க்கும்போது இவ் வுண்மையைக் காண்போம்.

இனிக் குறிஞ்சி முல்லை என வகுத்தவற்றை உரிப்பொருள் அளவில் கொள்ளாது, பிற இடத்தும் அவ்வரையறைகளைக் கொள்வது குருட்டு வழியே யாகும் என்பதனை உணர்ந்த நற்றிணைப் புலவர்கள் அக் கட்டுப்பாட்டை மீறியும் பாடிப் புதுவழி கண்டுள்ளார்கள்.

"சிறுவீ ஞாழற் பெருங்கடற் சேர்ப்பனை
ஏதில் ஆளனும் என்ப.. ..................
கண்டல் வேலிய ஊர்அவன்
பெண்டென அறிந்தன்று பெயர்த்தலோ அரிதே." (நற். 74)

"பாண! பரத்தையோடு கூடினான் தலைவன் என்பதனை நீ மறுத்துரைத்து என்ன பயன்? ஊரெல்லாம் அவளை அவன் பெண்டு எனக் கூறுகின்றதே" எனத்

தலைவி பாணற்கு வாயில் மறுத்தது மருதத்துக்குப் பொருந்துவதாகக் கூறவேண்டுவதை நெய்தற்குப் பொருந்தக் கூறியது காண்க. மற்றொரு பாடல் அவர் கூறும் பெண்களின் இயல்பை மிக அழகாக எடுத்துரைக்கின்றதாகலின் முழுவதும் கூறுதல் பொருத்தமாகும்.

"சிலரும் பலரும் கடைக்க ணோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை அலைப்ப
வலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவல்
கடுமாப் பூண்ட நெடுந்தோர் கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவயர்ந் திசினால் யானே
அலர்சுமந் தொழிகஇவ் வழுங்க லூரே." (நற். 149)

இப்பாட்டு உடன்போக்குக் கூறுதலின் பாலை யுரிப்பொருட்கு ஏற்ற பாலைத் தலைமகனைக் கூறுவது, கொண்கன் என நெய்தல் நிலந் தோன்றக் கூறுதல் காண்க. இத்தகைய பாடல்கள் இன்னும் பல. ஆகவே, தமிழ்ப் புலவர்கள் கண்மூடிகளாய்ப் பழைய வழக்கிலே சிறைப்பட்டுக் கிடந்தவர்கள் அல்லர் என்பதனை நாம் உணர்தல் வேண்டும். இடைச் சங்கத்தில் உள்ளவர் எனக் கருதப்பெறும் தொல்காப்பியர் நற்றிணைப் புலவர்க்கு மிக மிக முந்தியவர் என்பது இதனால் வலியுறுதல் காண்க. திணைமயக்கிற் கிடமமைத்த அவரும் குருட்டு வழியை நிலை நாட்டினர் அல்லர். இடைச் சங்கம் அழிந்த காலத்திருந்தவனாக இறையனாரகப்பொருளுரை கூறும் முடத்திருமாறனுடைய பாடல்கள் இரண்டு (105, 228.) நற்றிணையில்தான் அமைந்துள்ளன. அப் பெருமையும் இத்தொகை நூற்குத்தான் பொருந்துகிறது.